# பொதுச்செயலாளர் வாழ்த்து

**இன்று பொங்கல் விழா!** தமிழகம் முழுவதும் திருவிழாக் கோலம் பூண்டு திகழும்!

தமிழர்களின் இல்லங்கள் தோறும் பொங்கல் பொங்க, அவர்களின் உள்ளங்கள் தோறும் இன்பம் பொங்கும்!

பொங்கல் விழா, அறுவடைத் திருவிழாவாகும். மனிதன் முதன் முதல் கண்டுபிடித்த விழாவும், கொண்டாடிய விழாவும் உணவைப் பொங்கி உண்டு களித்த திருவிழாவே யாகும். உலகம் முழுவதும் போற்றிக் கொண்டாடப் பெறும் அறுவடை விழா, தமிழகத்தில் தொன்றுதொட்டுச் சீரோடும் சிறப்போடும் பொங்கல் விழா என்ற பெயரில் வழங்கி வருகிறது.

பொங்கல் விழாத்தான் தமிழர்க்குரிய ஒரு பெரும் விழாவாகத் திகழ்ந்து, புதுமைகொள் விழாவாகவும், புத்தாண்டு விழாவாகவும், வேடிக்கை விழாவாகவும், விளையாட்டு விழாவாகவும், கவின் கலை விழாவாகவும், கருத்தளிக்கும் விழாவாகவும் காட்சியளித்து வருகிறது.

தமிழகம்—திராவிடம், வாழ வேண்டிய வகையில் இல்லாமல், வட நாட்டுக்கு அடிமைப்பட்டு, வளம் குன்றி, அல்லலுற்று, இழிநிலையில் வைக்கப்பட நேரிடினும் தமிழர்கள் பொங்கல் விழாவைப் பொலிவோடும் வலிவோடும் போற்றிக் கொண்டாடத் தயங்குவதேயில்லை. தொல்லை துயரங்களுக்கிடையே பொங்கல் விழா பொலிவோடு கொண்டாடப் பெறுகிறது என்றால், திராவிடம்—தமிழகம் விடுதலை பெற்று, தன்னாட்சி நிறுவி, வளம் பல பெற்று, நலம் பல எய்தி, ஈடும் எடுப்பும் அற்று, ஓங்கு புகழ் எய்தி உயர்ந்து விளங்கும்போது எப்படிப்பட்ட முறையில் பொங்கல் விழா நடைபெறும் என்பதை நாமே எண்ணிப் பார்த்து இறும்பூதெய்தலாம். அந்த நாளை நாம் நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும் விரைவில் எதிர்பார்ப்போமாக!

பொங்கல் நாளில் நம் சிந்தையை மணக்கவைக்க “திராவிடநாடு” வண்ண அழகோடும், கருத்து வளத்தோடும் நம் கைகளில் வந்து தவழ்கின்றது!

“வாழ்க “திராவிட நாடு!” வளர்க அதன் புகழ்! வெல்க அதன் தொண்டு!” என்று நாமெல்லாம் வாழ்த்துவோமாக!

என் உள்ளங்கனிந்த பொங்கல் வாழ்த்துகளைத் “திராவிட நாடு” மூலம் திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் உவகையோடு தெரிவித்துக்கொள்கிறேன்!!

**இரா. நெடுஞ்செழியன்.**

# கொட்டடி எண்-9

முடுகு முரசொலி
முடுகு முழவொலி
முடுகு முருடொலி
முடிவிலாக்
கடுகு பறையொலி
கடுகு கலமொலி
களிவெழாத்
தொடுகு குழலொலி
தொடுகு குரலொலி
தொடுகு துதியொலி
தொடுதலாற்
படுகு முகிலொலி
படுகு கடலொலி
படுதலில் மணமாயதே!

**உடன்பிறந்தோரே!** *தமிழகத்தைக் காட்டுகிருர் கவி! ஆங்கு எழும் ஒலிகளைக் கேட்கச் சொல்கிருர்.*

*இன்றையத் தமிழகத்தில் நித்தநித்தம் கேட்டிடக் கிளம்பிடும் 'ஒலி', அனைவர் உள்ளத்தையும் வாட்டுவதாக உளது. ஒரோவழி, பழந் தமிழகத்தைப் புலவர் பெருமக்கள் காட்டிடக் காண்பது, பயனற்றதாகிவிடாது; பெருமூச்சும் புன்னகையும் கலந்திடும் ஓர் நிலை தரும்.*

*அந்நிலையில் தானே, உள்ளோம்! இருந்ததையும், இனிக் காண விழைவதையும் எண்ணிடுங் காலை புன்னகை; இருப்பதையும் இழப்பதையும் எண்ணிடும் போதோ, பெருமூச்சு!*

*பொங்கற் புது நாள், என்றுவரும் என்று வரும், என்று ஆவலுடன் வரவேற்கும் நிலையுடையார், அதிகம் இல்லை; வருமே! என்று அஞ்சுவோரின் தொகையே அதிகம்; எனினும் எப்பாடு*



14—1—58 | விலை 50-காசு | மலர் 16, இதழ் 26, 27, 28

பட்டேனும் எவ்வளவு தொல்லையைத் துரத்தியபடியேனும், தமிழர் உளமெலாம் மகிழ்ச்சிபொங்கக் கொண்டாடிக் களித்திடுவது, இந்தத் திருநாளைத் தான்!

இந்தத் திருநாள், இவ்வாண்டு, "இரத்தப் பொங்கலோ?" என்று கூறத்தக்க வகையிலே, நடைபெற்ற அடக்குமுறை அலங்கோலத்தை, நாடு கண்டு, நடுக்கம் கொண்டுள்ள நேரத்திலே வந்துளது.

நாலாயிரவருக்குமேல் எனலாம், நாடாள்வோரால், வேட்டையாடப்பட்டவர்கள்.

ஆயிரவருக்கு இருக்கும் என்கின்றனர், அடிபட்டோர், படுகாயமுற்றோர்.

சிறை சென்றோரின் தொகை கணித்திட இயலவில்லை.

வழக்குகள் பல, வாய்பிளந்தவண்ணம் உள்ளன.

இவற்றினுக்கிடையே, பொங்கற் புதுநாள் வருகிறது—எங்ஙனம் நாம் மகிழ்ச்சி அடைவது? கண்ணீர் பெருக்கியும், செந்நீர் சிந்தியும் செந்தமிழ் நாட்டார் இருக்கையிலே ஐயயோ! அம்மவோ! என்றலறி, கை உடைந்தது கால் முறிந்தது, துவைத்துவிட்டனர், துரத்தித் தாக்கினர், எலும்பு நொறுங்கிற்று, இரத்தம் கொட்டிற்று, என்றெலாம், பதறிக் கதறிப் பலரும் இருந்திடும் வேளையில், "பொங்கலோ பொங்கல்!" என்று கூறிக் கொண்டாட நாவும் எழாதே, என்றெண்ணி நானிருந்தேன்.

எனினும், நாள்பலவில் திருகாணுதிருக்கிறோம், விழா பலவும் வீணாட்டம் என வெறுத்தொதுக்கி, வேண்டாம் வெற்றாட்டம் என்றே கூறிவிட்டோம், ஆண்டுக்கோர் நாள், அருமை மிகு பொன்னாள், பொங்கற் புதுநாள், புது வாழ்வு மலரும் நாள், என்றே இதனை நாம், நன்றெனக் கொண்டாடி வருதல், நாடு கண்ட முறை அல்லவோ, என்றெண்ணி எப்படியும் விழாவினை நாம் ஏற்றமுடன் நடாத்துதல்தான், அடிப்போம் குடல் அறுப்போம், என்றே ஆர்ப்பரிக்கும் ஆணவக்காரருக்கும் அரும் பாடம் தானளிக்கும், என்று உறுதி கொண்டு, ஏற்புடைய விழாவினை எவ்விதத்தும் நடத்துதலே சால் புடைத்து என்று கண்டோம்.

இந்த நிலைகூட வந்திடுமோ, வாராதோ, என்று எண்ணிடும் வகை ஒன்றும், என்னையும் என்போன்ற மதருமைத் தோழரையும், வந்து கைப்பற்றிற்று.

சிறையில் சென்றிருந்தோம்; சில நாட்கள்!

விரைவிலே வெளிவருவோம் என்ற நிலை அல்ல அது.

இந்த ஆண்டு பொங்கற் புதுநாள், உடன் பிறந்தோரே! உம்மிடமெல்லாம் அளவளாவும் வாய்ப்புக்கிடைக்குமோ மறுக்கப்படுமோஎன்ற ஐயப்பாடு என்னை வாட்டிக்கொண்டிருந்த நிலையில், சென்ற கிழமை, நான் 9-ம் எண்ணுள்ள கொட்டடியில் அடைபட்டுக்கிடந்தேன்.

துளியும் எதிர்பாராத நிகழ்ச்சி—அதிலேயும் ஒரு வேடிக்கை இழைந்திருந்தது. அதே 9-ம் எண்ணுள்ள கொட்டடியில், நான் இருபதாண்டுகளுக்கு முன்பு ஒருமுறை அடைக்கப்பட்டிருந்தேன். இருபதாண்டுகள் உருண்டோடிவிட்டன! இந்த இருபதாண்டுகளுக்குள், நாட்டிலே, உலகிலே, என் மன நிலையிலே, என்னென்ன மாறுதல்கள்! எத்துணை வளர்ச்சி!

திட்டமிட்டு நடத்தப்படுவதுபோல, அதே கொட்டடிக்குள், இருபதாண்டுகளுக்குப் பிறகு, நான் சென்றேன்!!

அப்போது — இருபதாண்டுகளுக்கு முன்பு — 1938-ல் நான் ஒரு நாள் 'அந்தி சாயும்' நேரத்தில் அங்கு இழுத்துச் செல்லப்பட்டேன். கட்டாய இந்தியை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சியில், நான் 'மறியலை'த் தூண்டிப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டேன். வழக்கு விசாரணைக்காக, என்னை அந்தக் கொட்டடியில் அடைத்து வைத்தார்கள். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே 'பிடிக்கப்பட்ட' நூற்றுக்கணக்கானவர்கள், சென்னை மத்திய சிறையில் இருந்தனர். என்னை மட்டும், தனியாக, அழைத்துக்கொண்டு போனார்கள் — 9-ம் எண் கொட்டடிக்கு—சைதாப்பேட்டை சப்ஜெயிலில்!!

அதே சிறை! அதே கொட்டடி! அப்போது, உள்ளே பூராவும் 'கருப்பு' சாயம் பூசப்பட்டிருந்தது! —இப்போது 'வெள்ளை' அடிக்கப்பட்டிருக்கிறது!

அறை மட்டுமா? நானேகூடத்தான்!! அப்போது கருத்த மீசை! இன்று வெளுத்துக் கிடக்கிறது! அப்போது காளை! கல்லூரி முலாம் கலையாத பருவம்! இப்போது, கட்டுத்தளர்ந்து, கல்லூரி முலாம் குலைந்து, 'பட்டிக்காட்டான்' என்பார்களே, அந்த 'உருவம்' பெற்றுவிட்டிருக்கிறேன். அப்போது 'சிறை' என்றால், ஏதோ ஓர் இனம் அறியாப் பயம்! இப்போது? சிறையிலிருப்பதற்கும் வெளியில் இருப்பதற்கும் அதிக மாறுபாடு காணமுடியாத, மனப் பக்குவம் பெற்றுவிட்டேனல்லவா? அப்போது, நான், தனியாகச் சென்றேன்! இப்போது, என்னுடன் எழுபது தோழர்கள்! அப்போது, நான் பெரியாரின் 'புதிய கண்டுபிடிப்பு'!! இப்போதோ பெரியாருக்குத்தான் என் பெயர் என்றாலே கசப்பாமே!!

அந்திசாயும் வேளையிலே, அன்று, உள்ளே என்னை அழைத்துச் சென்ற போலீஸ்காரர், சிறைக் 'காவலர்' முன் நிறுத்தினார்.

முதியவர்! நாட்டு நடப்புப்பற்றி அதிகம் ஏதும் அறியாதவர்—அறிந்துகொள்ள வேண்டுமென்ற நினைப்பும் கொள்ளாதவர்.

இப்போது, சைதாப்பேட்டை 'சப் - ஜெயில்' உள்ளே, நான் அழைத்துச் செல்லப்பட்டபோது, என் மனக்கண் முன்னால், அந்த முதியவர் தெரிந்தார்; அவர் 'உரையாடல்' ஒலித்தது!

ஒரு 'உம்' போட்டபடி என்னை ஏற இறங்கப் பார்த்தார் அந்த முதியவர்!

சிறை என்றால் இப்படித்தான் பார்ப்பது வாடிக்கைபோலிருக்கிறது, என்று எண்ணிக்கொண்டேன். நாமாகப் பேசுவது கூடாது — அது ஒரு வேளை, சிறையிலே, குற்றமென்று கருதப்படக் கூடும்; நமக்கேன் வீண்தொல்லை என்று நினைத்துக் கொண்டு, சிலையாக நின்றேன். முதியவர், சிரிக்கவில்லை—ஆனால் புன்னகைக் கோடுகள் முகத்திலே காணப்பட்டன.

"மணி ஆறுக்கு மேலாகிவிட்டது! இந்த நேரத்திலே, வந்தால் சோறு ஏது" என்றார் சிறைக் காவலர்.

நான் சோறு கேட்டுத் தொல்லை "தருவேன் என்று எண்ணிக்கொண்டார்போலும்.

நானோ, சோர்ந்துகிடந்தேன்; ஓயாத பயணம்; பலநாட்களாக, இன்று பிடித்துவிடுவார்கள், இதோ வருகிறார்கள், அதோ 'வாரண்டு' — என்றெல்லாம் பலர் கூறக் கேட்டுக் கேட்டு, மனக் குடைச்சல் ஏற்பட்டிருந்தது. சிறைக்கு! — என்ற செய்தி, எனக்கு ஒருவகையில், செந்தேனாகிவிட்டது—ஏனெனில், என்ன செய்வார்களோ? எப்போது வருவார்களோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி, மனதைப் புண்ணாக்கிக் கொண்டிருந்தேனல்லவா? அந்தத்தொல்லை தீர்ந்தது—சிறை! என்ற செய்தி, செந்தேனாயிற்று. எனவே, 'சோறு' கிடைக்காவிட்டால், என்ன செய்வது என்று எண்ணும் நிலையோ, ஏங்கும் நிலையோ இல்லை!

ஒரு 'அத்தியாயம்' முடிந்தது!—என்ற திருப்தி.

சிறைக் காவலரிடம், கைதிகள், 'சோறு' கேட்டுத் தொல்லைதருவது, வாடிக்கையாக இருந்திருக்க வேண்டும்; எனவேதான், "ஆறுமணிக்குமேல் வந்ததால், இன்று சோறு இல்லை!" என்ற செய்தியை, விளக்கமளிக்கும் முறையில், சிறைக்குக் காவலராக இருந்த முதியவர் கூறினார்.

அடக்க ஒடுக்கத்துடன் அவர் எதிரே, நின்ற என்னைக் கண்டதும், அவருக்கே ஒரு 'பரிவு' ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்; எனவேதான், சோறு இல்லை! என்று கூறியதுடன், ஒரு வாழைப் பழம் தருகிறேன் — ஒரு பொட்டலம் தின்பண்டம் தருகிறேன்—என்றார். அவர் பரிவுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டுமல்லவா! பற்களை வெளியே தெரியச் செய்தேன்! காவிபடிந்திருப்பது கண்டார்—சிறிதளவு கண்டிப்புடன், 'வெற்றிலை கிற்றிலை' எதுவும் போடக்கூடாது — கிடைக்காது — என்றார்!

மேற்கொண்டு, 'உத்தரவுகள்' மளமளவென்று புறப்பட்டன.

**கிட்டே, வா! துணியை உதறு! சொக்காயைக் கழற்று! அரைஞாணை அறுத்தெறி !**

ஒழுங்காக, பரிசோதனைக்கு உட்பட்டேன்.

மெல்லிய குரலிற் கேட்டார், "ஏதாவது அபினி கிபினி, கஞ்சா கிஞ்சா, பீடி கீடி, இருக்கா?"

"அதெல்லாம் கிடையாதய்யா! அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் கிடையாது."

"ஆமாம்! இங்கே வருகிற எந்தப் பயதான், அந்தப் பழக்கமெல்லாம் இருப்பதாக ஒப்புக் கொள்கிறான்"

"நான் அப்படிப்பட்டவனல்ல"

"நீ பெரிய யோக்கியன்தான் — சரி—அதோ, பார் மூலையில்; சட்டிகள்; இரண்டு எடுத்துக் கொள்; ஒன்று குடிக்கத் தண்ணீர் வைத்துக் கொள்ள; மற்றொன்று இரவிலே சிறுநீர் கழிக்க ......... நிற்காதே...... எடுத்துக் கொண்டு போய் அறையிலே, வைத்துக் கொள்; கம்பளி இருக்கும், விரித்துக் கொள்; தொந்தரவு கொடுக்காமல் படுத்துக் கொள்.!"

படுத்துக்கொண்டேன்! அந்தக் கொட்டடிதான், 9-ம் எண் ! அதே கொட்டடிதான், இந்த ஜனவரித் திங்கள் நாலாம் நாளில்!

இம்முறை, என்னுடன், நாவலர், அவர் தம்பி, நடராசன், அன்பழகன்!!—அதே கொட்டடியில்.

இதிலென்ன பெருமை! — என்று கூட, அவர்கள் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்கள்; நான் அந்தக் கொட்டடியைக் காட்டி, இதோ, என் அறை! இருபதாண்டுகளுக்கு முன்பு, நான் இருந்த இடம்! மீண்டும் இங்கு வந்திருக்கிறேன்',—என்று சொன்னது கேட்டு.

இருபதாண்டுகளில், நாட்டிலே ஏற்பட்டிருக்கும் மாறுதலை விளக்கிட வேறெதுவும் காட்டத் தேவை இல்லை; அன்று, சிறைக் காவலர், அடைந்த திகைப்பையும், இன்று எங்கு உள்ள சிறைக்காவலராயினும், கொண்டுள்ள தெளிவையும் ஒப்பிட்டாலே போதும்.

அன்று, உள்ளே சென்று, கம்பளியை விரித்துக் கொண்டு, 'ஒழுங்காக' நான் படுத்தேன்; பக்கத்து அறைகளிலே, 'கைதிகள்' கானம் பாடினர், கைத்தாளமிட்டனர், சிறைக்காவலரை நையாண்டி செய்தனர்— எல்லாம் எரிச்சலூட்டும் முறையில். நான் இருந்த நிலை கண்டு, அந்தக் காவலருக்கே, ஒரு வியப்பு!

அருகே வந்தார் — கம்பியைப் பிடித்தபடி, "ஏன் வந்திருக்கிறாய் ?" என்று கேட்டார். "இந்தி எதிர்ப்பு !" என்று சற்றுக் கெம்பீரமாகச் சொன்னேன் !! முகத்தில் அறைந்ததுபோலப் பதில் பிறந்தது, "அப்படின்னா ?" என்று கேட்டாரே, காவலர் !!

துக்கம் துளைத்தது ! வேதனை பிய்த்தது ! வெட்கம் கொட்டிற்று ! கோபம்கூட, மெள்ள மெள்ளக் கொப்பளித்தது !

தமிழ் நாடெல்லாம், சுற்றிச் சுற்றிப் பேசி வருகிறோம். இந்தி ஆதரவாளர் காட்டும் காரணங்களை எல்லாம் சுக்கு நூறாக்கிவிடுகிறோம். நாகையில் தஞ்சையில், அய்யம்பேட்டையில் ஆற்காட்டில், வேலூரில் சூலூரில்—காட்டூரில், மோட்டூரில், நெல்லையில் தில்லையில், சென்னையில் கோவையில், எங்கும் 'ஈரோடு செய்தியை'ப் பரப்பி வருகிறோம்—சென்னைக்கு அருகே உள்ள சைதையில், இந்தி எதிர்ப்பு என்றால் என்ன ? என்று கேட்கிறாரே, என்பதை எண்ணியபோதே, நெஞ்சம் 'பகீர்' என்றது !

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு —என்பார்களே ; சுற்றியதன் பலன் சைதை வரை கூட எட்டவில்லையே! அதுவாகவன்றோ இது இருக்கிறது. செச்சே ! இவ்வளவுதானா, நமது 'பிரசாரம்'? இந்தச் சிறைக் காவலருக்குக்கூடச் 'சேதி' எட்டவில்லை ; நாமோ, நாள் தவறாமல் பேசுகிறோம் !!— என்று எண்ணி வெட்கப்பட்டேன்.

இந்தி—அதனை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான காரணங்கள், இவைகளை விளக்குவது எளிதல்ல ; அவ்வளவு மூடுபனி படர்ந்திருக்கக் கண்டேன் ; எனவே இயலாததை முயற்சிக்க வேண்டாமென்று தீர்மானித்து, சிறைக் காவலர், எளிதிலே, புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பேசினேன்.

> "சர்க்காருக்கு விரோதமான காரியம் செய்ததற்காகக் கைது செய்திருக்கிறார்கள்,"

என்று சொன்னேன் ; அவர் விளக்கம் கேட்கவில்லை; புரிந்ததாகத் தெரிவித்தார். ஒரு பத்து நாட்களுக்

குப் பிறகுதான், அவர், விளக்கம் பெற்ருர். அது, இருபதாண்டுகளுக்கு முன்பு! இப்போது? ஒவ்வொரு அதிகாரியும் தமது மகனை 'நமது' 'வலையில்' விழாது தடுத்திட வேண்டுமே, என்றல்லவா, தவியாய்த் தவிக்கிருர்கள். நமது நோக்கம், எங்கும் நிறைநாதமாகி விட்டிருக்கும் நேரமல்லவா?

எனினும், இருபதாண்டுகளுக்கு முன்பு, நான், எந்தச், சைதாப்பேட்டை சப் - ஜெயிலில், சிறை வைக்கப்பட்டேனோ, அதே இடத்தில், அதே 9-ம் எண் கொட்டடியில், கொண்டுபோய்ப் பூட்டப் பட்டேன்!!

எனக்கு, சிரிப்புப் பீறிட்டுக்கொண்டு வந்தது. "சம்பத்து!" என்றேன். "என்னண்ணு!" என்ருன்! "ஒரு வேடிக்கை பார். இப்படி, சப்-ஜெயிலிலும், ஜெயிலிலும் அடைபட்டுக் கிடந்தவர்கள், எம்.எல். ஏ.-க்கள் ஆனுர்கள், எம். பி. - க்கள் ஆனுர்கள்; ஆனுல் நாமோ, எம். எல். ஏ., எம். பி.- எல்லாம் ஆன பிறகும், சப் - ஜெயிலில் தள்ளப்பட்டிருக்கிருேம்" என்றேன்.

என்னுடன், இரண்டு எம். பி. - க்கள்—சம்பத்து—தர்மலிங்கம்; ஒரு டஜன் எம். எல். ஏ. - க்கள்! பல கவுன்சிலர்கள்! பல வணிகர்கள்! பல பட்டதாரிகள்!! எல்லோரும், சப்-ஜெயிலில்தான்!! சப்-ஜெயிலில், சாதாரணக் கைதிகளாக! சாதாரணக் கைதி என்ருல், சிறை விதியின்படி, 4 அவுன்சு அரிசி; 4 அவுன்சு கேழ்வரகு, 4 அவுன்சு காய் கறி! இவைகளைக் கேட்டுப் பெறவும், கடப்பைக் கல்லில், எரிச்சலூட்டும் கம்பளியை விரித்துப் படுக்கவும், ஒரு மூலையில், 'மூத்திரச் சட்டி' உடனிருக்க, உள்ளே உறங்கவும், 'உரிமை' பெற்றவர்கள்!!

எம். எல். ஏ. - க்களுக்கு, சட்டசபை நடைபெறும் நாட்களில், 'படிச் செலவு' — ஒரு நாளைக்கு — 12 - ரூபாய் தருகிருர்கள்!! எம். பி. - க்களுக்கு இதைவிட அதிகம்!!

இவர்கள் யாவரும், சைதை சப்-ஜெயிலில், 'மூத்திரச் சட்டியை' மூலையில் வைத்துக்கொண்டு, கம்பளிமீது படுத்து உறங்கும், 'கைதிகள்' ஆக்கப்பட்டனர்.

'கோடை' கொளுத்தும்போது, சட்டசபையைச் சென்னையில், நடத்திஞல், தாங்கமாட்டார்கள், எனவே 'ஊட்டி' சென்று கொலு இருக்கவேண்டுமென்று, காங்கிரஸ் சர்க்கார், எங்களிடம் பேசுகிறது, சைதைச் சிறையில், கேழ்வரகுக் கஞ்சியும் கம்பளியும், மண் சட்டியும், எங்களுக்கு!!

சென்னை மத்திய சிறையில், 'வகுப்புகள்' உண்டு. —நாங்கள் வகுப்புபேதம் ஒழியவேண்டும் என்று கூறுகிருேம் அல்லவா! அதனுல், இருப்பதிலேயே, எது கீழ்த்தர வகுப்போ, அதிலே தள்ளி, அழகு பார்த்தனர் போலும்.

பரவாயில்லை! அதனுல், எங்கள் இலட்சியம் பட்டுப்போய் விடாது, உடல் கெட்டாலும், உள்ளம் பழுதுபட்டு விடாது! கோடிக்கணக்கான மக்கள், இந்த 'அளவு' வாழ்க்கைத் தரமும் பெறமுடியாது வேதனைப்படும், நாடல்லவா இது! நாட்டினை இந்த நிலையில் வைத்திருக்கும் நாயகர்கள், எங்களை மிகக் கேவலமான வகுப்பில் தள்ளியதில், ஆச்சரியப்படவோ, ஆயாசப்படவோ தேவையில்லைதான்!

'சைதை'ச் சிறையிலாவது, இரவில், அறையில், சிறுநீர் கழித்திடச் 'சட்டி' தந்தனர்; அங்குகொண்டு செல்லு முன்னம், நாங்கள் அடையாறு போலீஸ் லாக்கப்பில்அல்லவா, தள்ளிப்பூட்டப்பட்டிருந்தோம், அங்கு, இந்தக் கம்பளியும் கிடையாது, சட்டியும் இல்லை; மேல் துண்டை உதறிப்போட்டுப் படுத்துக் கொண்டு உறங்கினோம், என்றல்லவா, எண்ணிக் கொள்கிறீர்கள்;நாங்கள்எம்.எல்.ஏ.க்கள்,எம்.பி.க்கள் ஆயிற்றே, 17 இலட்சம் வாக்காளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கழகத்தவராயிற்றே, எங்களை அந்தக் கேவலத்துக்கா, ஆளாகவிடுவார்கள்; மேல் துண்டுகளை ஒன்றுவிடாமல், எடுத்து வைத்துக் கொண்டனர்!! வெறும் கல்லிலேதான் படுத்தோம்!!

அமைச்சர் பக்தவத்சலம், எங்களைச் சாடினுர்—பொறுப்பற்றவர்கள், போக்கிரிகள், என்பதாக வெல்லாம். சீரழிவும் வன்செயலும் கண்டிக்க, நாம் தயங்கோம்; கயவர் செயலெல்லாம் கழகத்தைக் காய்வதற்குப் பயன்படுத்தல் முறையல்ல.

எங்களை நாடு அறியும்; நல்லோர் எமது நோக்கம் அறிவர்; ஆனுல், எங்களை இந்த ஆட்சியாளர் நடத்தியதை, நாடு அறியாதல்லவா? அதற்காக, 'அடையாறு' சம்பவம் கூறினேன்!! வேறு, யாரையும் குறைகூற அல்ல.

நடுநிசி! நா வரண்ட நிலையில், தர்மலிங்கம் எம்.பி. தண்ணீர் கேட்டார்; தர இயலாத போலீஸ்காரர், கண்ணீரைச் சொரிந்தார்!!

அடையாற்று லாக்கப்புக்கு, சைதை சப்-ஜெயில், 'அரண்மனை' போலத்தானே!! மூத்திரச் சட்டியாவது, தந்தார்கள்! லாக்கப்பில், அறையில் ஒரு மூலையைத்தான் காட்டினுர்கள்!

நாங்கள்தான், சட்டசபையில் உட்கார்ந்து, சட்டங்கள் பற்றிப் பேசுகிருேம், திட்டங்களைக் குறித்து விவாதிக்கிருேம்!!

எங்களைப் போட்டடைத்ததோ, சாதாரணக் கைதிகள் தங்கிடும், கொட்டடியில்தான்.

எனினும், அந்த 9-ம் எண் கொட்டடியில், நாங்கள் தங்கி இருந்தோமே தவிர, எங்கள் எண்ணம், சிறகடித்துக்கொண்டு தமிழகத்தையே ஒரு சுற்றுச் சுற்றிவிட்டது!

கழகம் அடைந்துள்ள வளர்ச்சியைக் கண்டறிய இயலாதார், எம்மைக் கேவலமாக நடத்துகின்றனர்; ஆனுல், எமது கொள்கையின் நேர்த்தியை அறிந்து, கொண்டாடிப் போற்றுபவரின் தொகையோ, வளருகிறது, வளருகிறது, வளர்ந்த வண்ணம் இருக்கிறது—என்பதை எண்ணிடும்போதே, அந்த இருட்டறையே, ஒளிப்பிழம்பாகத் தெரிந்தது!

தண்ணீர் கேட்கிருேம், தர மறுக்கிருர்கள்! இவர்கள் அறியார், நாங்கள் சிறைப்பட்டோம் என்ற செய்திகேட்டு,கண்ணீர் உகுத்தோரின் தொகையை!!

பெற்றவர் காட்டிடும் பரிவினும் மிக்கதான அன்புகாட்டி, உறவுகாட்டி, உற்சாகமூட்டி, நம்மை ஆதரிப்போர், 'ஆலெனத் தழைத்து, அறுகுபோல் வேர்விட்டு, வளர்க, வளர்க! என வாழ்த்துவோர், எண்ணற்றவர்', என்பதனை அறிந்துகொள்ளும் கண்ணற்றவர்கள், கஞ்சிக் கலயத்தை எமது கரத்தினில் தருகின்றனர்; கேவலம் என்று எண்ணிக் கவலைப்படுவோம்!!

மனைதோறும் மனைதோறும், மகிழ்கிருர்கள், தமிழகம் தாழ்நிலை நீக்கிக்கொண்டு, தன்மானம் பெற்று வாழ்ந்திட உழைத்துவரும் நமது கழகத்தின் மாண்பு கண்டு! இதனை உணர்ந்து உவகை பூத்திடும் உளத்தினராகிப் பணியாற்றி வரும், நம்மைச் சிறையிலே, சீரழிவாக நடத்தினுல், இரத்தம் சிறிது சுண்டிவிடும், உடல்சற்றே இளைத்துவிடும், வாலிபருக்கும் வயோதிகம் மேலிடும், இஃதேயன்றி, வேறென்ன நட்டம்?

சிறையிலே, தகுதிபற்றியும், பொதுமக்களிடம் பெற்றுள்ள ஆதரவு பற்றியும், அலட்சியம் காட்டி, அருவருக்கத்தக்க விதத்தில் நடத்துவதனுலேயே, நாட்டிலே, நமக்குகிடைத்துள்ள நன்மதிப்புக்குன்றிப் போகுமா, குறைந்து போகுமா! வரலாறும் வீரக் காதையும் அறியாதாரே அங்ஙனம் எண்ணுவர்; துளியேனும் அவை அறிந்தோர், அரைபடும் சந்தனம் மணத்தல் போல, சிறை தரும் இன்னல், கழகத்தின் புகழைத்தான் பெருக்கும் என்பதனை அறிந்து அகமகிழ்வர். அவ்விதத்தில், உடன் பிறந்தோரே! நீவிர், மகிழ வேண்டும் என்பதற்கே, சிறையில் நாங்கள் பெற்ற சீரழிவைக் கூறினேன்—சிந்தை நொந்து மட்டுமல்ல, உமது சிந்தை நொந்திடச் செய்யவுமல்ல.

அதோ, உமது உள்ளம் வென்ருள், குத்திப் புடைத்தெடுக்கும் செந்நெலைப் பயிரிட்டோன், முழங் காலளவு சேற்றிலே இறங்கினுன். இன்னல் முதலில், பிறகே கன்னல்! முத்து முத்தாக வியர்வை உதிர்த்திடும், முல்லை, வாழை பரப்பி, வண்ணச் சேலை புரள, வகைவகையான உண்டி நிரப்பி, நீ உண்ணும் போது, கண்ணுல் கொத்திடத்தானே போகிருள்! முத்து முத்தாக வியர்வை—முதலில்! பிறகு, முத்தம், முத்தம், முத்தம்—உனக்கல்ல—பெற்றெடுத்த மகவுக்கு!!

கொட்டடி, எண் 9-ல் நாங்கள் தள்ளப்பட்டால், என்ன? அதனினும் கொடிய இருட்டறையில் அடைக்கப்பட்டால்தானென்ன, கருவில் உருவான போது, கண்டது கதிரவனை அல்லவே! இருள் மயம் தானே! பிறந்த பிறகோ? அஃதே போலத்தான், கொட்டடியில் பூட்டி வைக்கப்படும் கொள்கை வீரர்கள், இன்னலைத் தழுவிக்கொள்கின்றனர்; ஈன்றெடுக்கப்போகும் செல்வத்தை எண்ணி மகிழ்கின்றனர், என்பதனைத்தான் நீவிர் அனைவரும் எண்ணிடல் வேண்டும்.

உறுதி வளர வேண்டும்! உழைக்கும் திறன் ஓங்க வேண்டும்! இடுக்கண் கண்டு அஞ்சாமை மிகவும் வேண்டும்! இன்னல் செய்வாரை வெறுத்திடாத தூய்மை வேண்டும்! மறந்தும் தீச்செயலை நாடாதிருத்தல் வேண்டும்! தமிழ் மரபென்பதனை மனதிலிருத்த வேண்டும்! தன்மானம் நாட்டினிலே தழைத்திட உழைக்கும்போது, நம் மானம் பறித்திடவே மாற்ருர் செய்யும் கொடுமைதனைத் துச்சமென்று தள்ள வேண்டும்! இச்சகம் பேசிடினும், ஏசிடினும், இடித்திடினும், இகழ்ந்திடினும், மனம் உடைந்திடாமல், என் நாடு பொன்னுடு, இஃதோ மற்றவர்க்கு அடிமைக் காடு? என் முன்னேர் மாப் புகழை மறந்து நானும், நத்திப் பிழைத்திடவோ, நானென்ன எத்திக்கும் கொடி கட்டி, எவருக்கும் திறை கட்டா, ஏற்றமிகு தமிழ் இனத்தில் உதித்தேன் அல்லனே? என்றெண்ணி, இதயம் தன்னில் ஏற்புடைக் கொள்கை கொண்டு, உழைத்திடவே வேண்டும்!

நாடு பல உள, நாமறிவோம்! காடும் மேடும் கொண்டனவாய், கழனி நலமற்றதுவாய், பொன்னும் மணியும் காணுது, கரும்பும் இரும்பும் கிடைக்காது, கனல் கக்கும் மலையும் நிலநடுக்கமும் கொண்டதாய், உள்ள நாடுகளும் உள்ளன. பாறை மீது தூவிய விதையாகும், அத்தகு நாடுகளிலே, பாட்டாளி தரும் உழைப்பு என்று எண்ணத்தக்க விதத்தில், இயற்கை வளமற்று, உள்ள நாடுகள் பல.

நாமிருக்கும் நாடு அஃதல்ல! இயற்கை கொஞ்சும் எழிலகம்! இங்கு இல்லாத பொருள் இல்லை; எவர்க்கும் ஈந்திடத்தக்க அளவு கண்டிடலாம். இந் நாடதனில், காடு காட்டும் கனிவுங்கூட பல்வேறு நாடுகளில் காண இயலாதென்பது கட்டுக் கதை அல்ல; கணித்துரைப்போர் கூறுவது.

உடன் பிறந்தோரே! இத்தகு திருநாட்டில் வந்துதித்தோம், இருந்து வருகிருேம்;

**நாமிருக்கும் நாடு நமதல்ல என்ற நஞ்சினும் கொடியதோர் நிலை நம்மைப் பிடித்தாட்டுகிறது.**

ஏடெல்லாம், நம் நாட்டின் புகழ் பாடுகின்றன!

புலவர் தரும் சொல்லோவியத்தில், பூம்புகார் காணுகின்ருேம், பூரிப்படைகின்ருேம்; அல்லங்காடி செல்கின்ருேம், ஆடலரங்கம் நுழைகின்ருேம்; சுங்கம் கொள்வார் காண்கின்ருேம், அங்கம் தங்கம் என்று அகமகிழ்ந்து கூறிடத்தக்க அரிவையர் தெரிகின்றனர்! பழமுதிர் சோலைகள் — பாங்கான வயல்கள்! களிறு உராயும் சந்தனக் காடுகள்! வாளை துள்ளும் வயல்கள்! தேன்சொரியும் தேமாங்கனிச் சாலைகள்! சிற்பக் கலையின் சிறப்புகள்! அம்மவோ! தமிழகத்தை இந்தப் 'பொல்லாத' புலவர்கள் காட்டும் போது, தெரிந்திடும் திருவுடன், நம் கண்முன், தோன்றிடும் தமிழகத்தின் 'உருவினை' ஒப்பிட்டுப் பார்க்கும்போது உள்ளம் வெதும்பாதிருத்தல் இயலுமோ?

எலும்புருக்கிக்கு ஆளாகி நாம் காணும்போதே இளமையும் எழிலும், குன்றியும் குறைந்தும்போகும், மனையாட்டியையும், மணக்கோலத்துடன் காட்சி தரும் அம்மங்கை நல்லாளின் ஓவியத்தையும் மாறி மாறிப் பார்த்திடும், மணவாளன் மனம் என்ன பாடு படும்!

நாட்டுப்பற்றுடையார், இன்று பெறும் வேதனை அத்திறத்தது; ஐயமில்லை.

ஊரில் இருக்கும் துள்ளு நடையுடன் கூடிய ஆண் குருவி, கருப்பம் முதிர்ந்திருக்கும் பெண் குருவிக்குப் பிரசவிக்கும் இடம் ஏற்பாடு செய்வதற்காக, இனிமை பொருந்திய கரும்பின் வெள்ளிய பூவைக் கோதி எடுக்கிறதாம்! புலவர் கூறுகிருர்!!

ஊர்ச் சிறப்பு, ஊராள்வோன் சிறப்பு, வீரம் ஈரம், காதல் கவிதை, வளம் கொடை, அறம் அன்பு, போர்முறை பொருள்தேடுமுறை, எனும் எத்துறை பற்றிய தாயினும், புலவர் தீட்டிடும் ஓவியம் காண்போர் உள்ளத்தைத் தொடுவதாகவே இருந்திடக் காண்கிருேம்,

வளம் நிறைந்து, வாழ்க்கைத் தரம் சிறந்து, ஆட்சி முறையில் அன்பும் அறமும தழைத்து வீடெல்லாம் மகிழ்ச்சிக் கூடங்களாகி இருந்த திரு நாடு, நம்முடையது.

இங்கு, யானைகொண்டு போரடித்தனர்; முத்துக் கொண்டு கழலாடினர்; சந்தனம்கொண்டு நெல் குத்தினர்; தந்தம்கொண்டு 'இருக்கை' அமைத்தனர்; கரும்புகொண்டு கூரை வேய்ந்தனர்; அறிவுகொண்டு ஆண்டுவந்தனர்; ஆற்றல்காட்டி வெற்றி கண்டனர்; புலவரைப் போற்றிப் பெருமை பெற்றனர்.

அத்தகைய நாடு, இன்று பழுதுபட்ட சித்திரமோ, பழங் கதையோ, என்று நினைத்திடத்தக்க கோலம் கொண்டுளது; மக்களிற் பெரும் பகுதியினர் ஓலமிட்டு உழல்கின்றனர்; ஆட்சியாளர், 'ஏனென்றால் சிறைவாசம், இம்மென்றால் வனவாசம் என்பார்களே, அந்நிலைக்கு வேகமாகத் தாவிக் குதிக்கின்றனர்.

இந்நிலை மாற, நமக்கெனத் தமிழ்ப் பண்புடன் கூடியதோர் அரசு வேண்டும் என்கிறோம்; ஆர்ப்பரிக்கின்றனர், அரசுக் கட்டிலில் அமர்ந்திட அனுமதிக்கப்பட்டுள்ள அடிவருடிகள்.

கிடைக்கும் இன்பத்தைக் கொண்டு, மகிழ்ந்திருக்கும் இத் திருநாளன்று, நாடு வாழவும் கேடு தீரவும் பாடுபடும், நமது கழகத்தவர் அனைவருக்கும், அறிவாற்றல் வளரவேண்டும், என்ற வாழ்த்துரையை வழங்குவோமாக!

அறிவாற்றல் மிகுந்து, அது மிகுந்தோர் தொகை வளர்ந்து, அதற்கேற்ப அறமும் திறமும் வளர்ந்து, நமது குறிக்கோள் ஈடேறினால்......! பாலை சோலையாகும், பைங்கிளிகள் கொஞ்சும், பங்கப் பழனத்து உழும் உழவர் பலவின் கனி பறித்து, தெங்கு திருகிடும் மந்தியைச் சாடுவர்; மலரை வாளை தாக்கி, தேனினைச் சொரியச்செய்யும்; தேமதுரத் தமிழோசை கேட்டுப் பல தேயத்தார், தருக! தமிழ்! தருக! என்று, வருவர்! இல்லாமை இல்லாது ஒழியும், இடுக்கண் எனில், என்ன என்று கேட்பர் மக்கள். தொழிலெலாம் துலங்கும், தொல்லை அகலும்! பகலென ஒளி பரவி, பேத இருளினைப் போக்கி வைக்கும், அறநெறி நிலைக்கும், அன்பு அரசோச்சும், இன்பநிலை எவ்வெவர்க்கும்; இதிலே அட்டியில்லை, என்று எடுத்தியம்பும் காலம் காண்போம்.

மின்னிடும் பொன்னினைக் காண, எலும்பு நொறுங்குமோ என்பது குறித்து எண்ணாது, உழைப்பாளி குடைந்து சென்றிடக் காண்கிறோம்! சுறுவும் சுழலும் கண்டு அஞ்சாது, மூழ்கித்தான், முத்துக் கொணர்கின்றனர்!

அவரையும் துவரையும், இஞ்சியும் மஞ்சளும், வாழையும் தெங்கும், வரகும் தினையும், சேமையும் பிறவும், கிடக்கும் இடம்பார்த்து எடுத்து வரப்பட்டன அல்ல! நிலம் திருத்தி, நீர் பாய்ச்சி, காத்து வளர்த்த பின்பு, கண்டோர் கை சிக்கிடாமல், விழிப்பாக இருந்து, பின்னர், கொண்டுவரப்பட்டவை!

படர்வனவும், வளர்வனவும்கூட, உழைப்பின் துணை பெற்றாக வேண்டும் எனில், பட்ட மரம் துளிர்த்திடும் பான்மைபோல, எந்தையர் நாட்டிலே இன்றுள்ள இழிநிலை போக்கி, இடர்களை நீக்கி, மிடியினைத் தாக்கி, சுடர்தனைக் காணவேண்டுமாயின், நாம் ஒவ்வொருவரும், எத்துணை அளவுக்குப் பாடுபட வேண்டும், தொல்லைகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும், என்பதனை எண்ணித் துணிவுகொள்ள வேண்டாமோ?

அதனை எண்ணிடும்போது, கொட்டடி ஒன்பதும், அதிலே நாங்கள் பெற்ற கொசுக்கடியும், சகதியும், சட்டியும் அவை பரப்பிய கெடுநாற்றமும், அழுலும் அதட்டலும், அவை தரும் அல்லலும் அருவருப்பும், ஒரு பொருட்டாகா!!

எனவே, கடினமான உழைப்புக்கு, கண்ணிய மிக்க தொண்டினுக்கு, கண்டோர் வியக்கும் கட்டுப் பாடுணர்ச்சிக்கு, ஏற்றவர்களாக, நாம் ஒவ்வொருவரும் ஆகவேண்டும். திருநாள் தரும் தித்திப்பு, இந்தப் பயனை நாம் பெற உதவவேண்டும்.

சுற்றிலும் காணும், பொருள் ஒவ்வொன்றும், வினையின் விளைவு — மதியுடன் கலந்த வினையின் விளைவு! உழைத்துப் பெற்றது! சுவை கண்டு மயங்கி, பொருள் வந்த விதம் மறத்தலாகாது!! மறந்திட மாட்டீர்!! மரபறிவீர், நானறிவேன்!!

எனவே, இன்று மகிழ்ந்திருப்பீர், எனினும், நாட்டுக்குழைக்கும் கடமையினை மறவாதீர்! வீட்டிலே இன்று காணும் பாட்டொலி, வளைகூட்டொலி, பேச்சொலி, 'இச்'சொலி, இவை யாவும் நலிவில்லை என்று நாட்டிலோர் நல்லொலி எழ வேண்டும், அதற்கான செயலினிலே புக வேண்டும், அச்செயலில் அறமும் திறமும் இணைந்திருத்தல் வேண்டும், என்ற கருத்தினைக் கெடுத்திட அல்ல; வளர்த்திட!—என்பதனை, காணும் சுவையுடனே, நான் அளிக்கும் தேனெனவே கலந்து உண்பீர்!!

நாட்டுக்கு நாம் உழைத்து, பாட்டு மொழியாம் தமிழ் பாரெல்லாம் மணம் பரப்பும் பாங்கு கண்டு, பழம் ஏடதனில் பார்த்திடும் ஓர் சீரும் சிலமும், துலங்கிடவும் விளங்கிடவும், காண்பதுதான் திருநாளிற் திருநாள் — தீதெலாம் தீர்ந்தொழிந்த திருநாள்!

அதற்கான ஆவலை எழச் செய்ய வருவதுதான், ஆண்டுக்கு ஒரு நாள், ஆன்றோர் காலந் தொட்டு அகமகிழ்வுதானளிக்கும் அறுவடைத் திருநாள், பொங்கற் புது நாள்!!

இதனை உமக்குக் கூறிடவும், இவ்வாண்டு இசைவு பெற இயலாதோ என்றெண்ணி, இருட்டறையில், கொட்டடியில், முடங்கிக் கிடந்திட்டேன்! உமது விருப்பம் உணர்ந்தார்போல், ஊராளும் பேறு பெற்றோர், உனை விடுத்தோம்! என்றல்ல, வெளியே சென்றிரு, விளிப்போம், வந்து சேர்! என்று கூறியே எனை அனுப்பினர்! வந்தேன்—செந்தேனென இனித்திடும் திருநாளில், நலமெலாம் பெருக! என்று என் நல்லெண்ணந்தனைத் தந்தேன். இருந்துவிட்டுவந்த, எண் ஒன்பது கொட்டடியைக் காட்டினேன்—மீண்டும் அஃதோ, வேறோ, நானறியேன்! எங்கு எனைக் கொண்டு செல, இன்று ஆட்சியிலுள்ளார் எண்ணம் கொண்டிருப்பினும், என்றென்றும், உமது நெஞ்சில் எனக்கோர் இட முண்டன்றோ! இச்சிறப்புப் பெற்ற பின்னர், இருட்டோ இடரோ, இழிவோ பழியோ, எதுவந்து தாக்கிடில் என், எதையுந்தாங்கும் இதயம் உண்டு, என்னினும் ஆற்றல் மிக்கார் எண்ணற்றோர் உண்டு. எனவே, நாடு நன்னிலை அடையப் போவது உறுதி! நமது இலட்சியம் வெற்றி பெறப்

போவது திண்ணம். பால் பொங்கும்! பொங்கிட, தழலிலிட விறகு வேண்டும்!! நாட்டிலே நல்லாட்சி எனும் பால் பொங்கிட, தழலில் நாம் விறகாக்கப்பட்டால், அதனினும் சிறந்ததோர் பேறு வேறில்லை அல்லவா!!

சிறை புகுதலும் அங்கு சீரழிவு காணுதலும், ஒவ்வொரு நாட்டு விடுதலைக்காகப் பலர் பட்ட இன்னலுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, மிகச் சாதாரணமானவை!

ஆனல், இவைகளைத் தாங்கித் தாங்கி, நெஞ்சுரம் கொண்டு, பின்னர் காவியம் புனைவோனும், ஓவியம் தீட்டுவோனும், கருத்திலே கொண்டிடத்தக்க, 'வீரத் தியாகி' ஆகிடும் வாய்ப்பைப் பெற வேண்டும்.

கேட்டுப்பாருங்கள், உழவனை! முளைவிட்டு, பச்சைப் பசேலென்று வளர்ந்து, முனையில் கதிர் காட்டி, குலுங்கிக் கூத்தாடி, முற்றிச் சாய்ந்தது தான், இன்று முனை முறியா அரிசியாகி, ஆவின் பாலுடன் கருப்பஞ் சாற்றுடன், அடுக்களை ஏறி, உமது அன்புக்குரிய அல்லியோ அஞ்சுகமோ, அன்னமோ, சொர்ணமோ, மலர்க்கொடியோ செல்வியோ, "ஒரே ஒரு பிடி! என் கையால்! இந்த ஒரு முறை மட்டும்" என்று கொஞ்சிப் பேசி, உமக்கு வட்டிக்கும் பொங்கலாகிறது!!

சிறுவிரலாற் துழாவி,வாயிலிட்டு மீண்டும்வழித்தெடுத்து இலையிலிட்டதை வாள் நுதலாள் கண் காட்ட எடுத்துண்ணுகின்றீர்; அல்லது மீண்டும் செல்வத்திற்கே ஊட்டுகின்றீர்!


நம்க்குப் பிறகு இங்கு வாழ்ந்திடும் வாய்ப்பினைப் பெற இருக்கும், வழித் தோன்றல்களுக்கு, முக்கனி பிழிந்து வடித்து ஒன்ருகக் கூட்டி ஊட்டினல் மட்டும் போதாது, நாவுக்கு மட்டுமே சுவை கிடைக்கும்; நாட்டுக்கோர் நல்ல நிலை நாம் கண்டு தந்திட்டால், வீட்டுக்கு வீடு, விழாக்கோலம், என்றென்றும், அறிந்திடுவீர் இவ்வுண்மையினை, அதற்கேற்பச் செயல்படுவீர்!

இன்றல்ல! இன்று, திருநாள்! காண களிக்க, பேண பேருவகை கொள்ள, நாணம் கொண்டாளின் நல்லிதழில் ஒளி ஏற்ற, வீணை மொழிகேட்டு வியர்த்திருக்க, பாணன் துணைதேடாமல் பாவையரின் பரிவு பெற, இன்புற்றிருக்க ஏற்ற நாள்!

இந்நாளில், நீவிர் கொள்ளும் இன்பம், எந்நாளும் எங்கெங்கும் இருந்திடத் தக்கதான, 'திருநாடு' நாம் காண்போம், திறமெல்லாம் அதற்களிப்போம், என்ற உறுதிபெற்று, எழுவீர் விழா முடித்து.

விழா நாளன்று, உடன்பிறந்தோரே! என் மகிழ்ச்சியை, நல்லெண்ணத்தை அளிக்கிறேன்; பெறுவதிலே நீவிர் அடையும் மகிழ்ச்சியினும், தருவதிலே நான் பெறும் பெருமிதம் அதிகம்.

அன்பன்,



# உறுதிகொள்வீர்!


[சு. சிவப்பிரகாசம், புதுவை]

அறியாமை எனுமிருளே உலகு தன்னில்
அரசோச்சி ஆர்ப்பரித்த முற்கா லத்தில்,
திறனுரும் அறிவொளியைத் துணையாய்க் கொண்டு
சீரியநன் னெறிகண்டு பண்பு கொண்டு
விறலாரும் வீரர்களாய் நாக ரீக
மேம்பாடு மிக்கவராய்த் தமிழர் என்போர்,
இறவாத வரலாற்றுப் புகழை ஏற்றே
எழில்பெற்று வாழ்ந்திட்டார் வியக்கும் வண்ணம்!

அத்தகைய சிறப்புடைய தமிழர் வாழ்வில்
அறிவார்ந்த ஒருதிருநாள் அமைந்த துண்டு!
பித்தரது செயல்போன்று விளங்கு கின்ற
பீடழிக்கும் இந்நாளின் விழாப்போ லன்றி,
எத்திறத்தா ரும்அதனின் சிறப்புக் கண்டே
இயம்புகின்ற புகழ்மணக்கும் பெருமை நன்னாள்!
இத்தரையில் 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்'
எனஉரைக்கும் பழமொழியும் கொண்ட தந்நாள்!

புதுமையெழில் வளர்விக்கும் அந்தப் பொன்னாள்
பொங்கலெனும் தனித்திருநாள்! தமிழ ரில்லம்,
வதுவைகொண்ட கோலமதாய்க் காட்சி கொள்ளும்!
மகிழ்ச்சிநிறை யுள்ளத்தால் மாந்த ரெல்லாம்
புதியஉடை விதவிதமாய் அணிந்தே இன்பப்
புத்தமுதை வருபவருக் கன்பாய் ஈந்து,
மதுரமொழி யால்உறவின் நலம் உசாவி,
வளர்த்திடுவார் சமுதாய உயர்வை மேலும்!

சிந்தனைக்குக் காரணமாய் அமைந்த பொங்கல்,
சிறுநெறியைப் புறமொதுக்கிப், புதுமை சேர்த்து
விந்தையுறு வாழ்வுதனை மலரச் செய்யும்
மேலான ஒருதிருநாள்! இந்த நாளில்,
நிந்தனைக்குக் காரணமாய் அமைந்த தீய
நெடுஞ்சாதி பேதங்கள் பிறவும் போக்கிச்,
செந்தமிழைக் காத்திடவும், உரிமை வாய்ந்த
திராவிடத்தை மீட்டிடவும் உறுதி கொள்வீர்!



# டில்லி நடப்புகள்

ஈ.வெ.கி. சம்பத், எம்.பி.

இரண்டாண்டுகளுக்கு முன்பு வடநாட்டுச் சுற்றுப் பிரயாணம் சென்றிருந்தபோது டில்லியில் ஆறு நாட்கள் தங்க நேரிட்டது. அது சமயம் பாராளுமன்றத்தையும் அங்கு வளரும் அரசியல் சூழ்நிலைகளையும், நடப்புகளையும் ஓரளவு கண்டறிய முடிந்தது. உலகின் கண்கள் இந்தியத் துணைக்கண்டத்தை அறிய டில்லியின்மீது பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன். நமது கழகத்தைப் பற்றி அங்குள்ளோரும், வந்துபோவோரும் அறியவொட்டாமல் அரசும் பத்திரிக்கைகளும் முழு இருட்டடிப்புச் செய்வதில் வெற்றி கண்டிருந்தன. ஏகாதிபத்திய எண்ணங் கொண்ட வடநாட்டுத் தலைவர்கள், உலகோர் உள்ளங்களில் இடம் பெற, உரிமை, விடுதலை, குடிஅரசு ஆகியவை குறித்து உரத்த குரலில் முழக்கிக் கொண்டிருந்தனர். தமது பிடியில் அகப்பட்டுள்ள இப்பரந்த பூமியில் உள்ள அனைவரும் ஓரின மக்களென்றும், அவர்களனைவரும் உரிமை பெற்று, விடுதலையடைந்து குடிஅரசு முறை கண்டு வாழ்வில் இன்பம் துய்க்கின்றனர் என்றும் பலபடக் கூறிக்கொண்டிருந்த செய்தி விளம்பர இலாகா வானொலி, வெளியீட்டு நடப்புகளையும் கண்டேன்.

எனதுள்ளத்தில், நமது கழகப் பணி சிறு அளவிலேனும் இப்பெருநகரில் நடைபெற வேண்டுமென்ற எண்ணம் பிறந்து வலுப்பட்டது. இந்தியப் பேரரசு என்பது நடைமுறையில் வடவராதிக்கமேயன்றி வேறல்ல என உலகுக்கு மெய்ப்பிக்க டில்லி தக்கதொரு அரங்காகப் பயன்படும் என்றும் பட்டது.

நமது கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தவுடன், இந்நிலைமைகளை நமது தோழர்களுடன் விளக்கி விவாதித்தபோது பாராளுமன்றத் தேர்தலிலும் நாம் ஈடுபடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தேர்தல் முடிந்தது. திருவண்ணாமலை தோழர் தர்மலிங்கமும், நானும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றோம். திராவிடத்தின் விடுதலை கோரும், மாபெரும் கழகத்தின் தூதுவராக டில்லி செல்லும் பேறுபெற்றோம். இருவர் மட்டுமே செல்கிறோம் என்பதிலும், நமது தோழர்களைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்று, அடிக்கடி பல நாட்கள் தங்க நேரிடுமே என்று அறிந்தபோதும் எனக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

டில்லிக்குப் புறப்படும் நாளன்று அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் அவர்களும் ஏனைய கழகத் தோழர்களும் இரயிலடிவரை வந்து எங்களுக்குத் தைரியம் சொல்லி, அனுப்பியபோது உள்ளம் நெகிழ்ந்தது. சென்ற வண்டி 'குளுகுளு' வண்டியே தவிர உள்ளம் 'குளுகுளு' என்றிருக்கவில்லை. எங்களுடன் வழக்கறிஞர் இராமன் அவர்களும், கரூர் மாணிக்கம் அவர்களும் வந்தனர். கனத்த உள்ளத்தோடு நமது பகைப் புலத்தின் ஆதிக்க புரியான டில்லியில்போய் இறங்கினோம். அங்கு பத்துப் பதினைந்து தோழர்கள் எங்களை வரவேற்றபோது, டில்லியிலும் நமது வருகையை விரும்பும் உள்ளங்கள் இருப்பதை யறிந்து ஒருவகை ஆறுதல் ஏற்பட்டது.

டில்லி! எட்டாவது டில்லி! ஆம், இதற்குமுன் ஏழு டில்லிகள் இருந்து அழிந்து போயிருக்கின்றன என்ற வரலாற்றுக் குறிப்பு, டில்லியைச் சுற்றிப்பார்ப்போருக்குத் தரப்படுகிறது. டில்லியில் இதற்குமுன் எத்தனையோ வல்லரசுகள் இந்தியா முழுமையும் கட்டி ஆளும் வெறி எண்ணத்துடன் கோட்டை கட்டி வாழ்ந்திருக்கின்றன. ஒவ்வொரு அரசு அழியும்போதும் நகர் தரை மட்டமாக்கப்பட்டதும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியதும், வரலாற்று வாழ்க்கை என மற்றொரு குறிப்புக் கூறுகிறது. 1947-ல் வெள்ளையரிடமிருந்து வடவரிடம் ஆட்சி மாறிய போதும் டில்லியில் கொலை வெறியாட்டம் நிகழ்ந்து இலட்சக் கணக்கானவர்கள் படுகொலைக்காளாகி பிணமலைகளும், இரத்த ஆறுகளும் தோன்றி, கடைசியில் உத்தமர் காந்தியாரின் உயிர் குடித்த பிறகே வெறியாட்டம் ஓய்ந்தது என்ற குறிப்பு மட்டும் ஏனோ ஏனைய குறிப்புகளோடு தரப்படுவதில்லை. அது சமயம் டில்லி மக்கள் ஆடிய வெறியாட்டத்தை நேரில் கண்ட தமிழர்கள் கதை கதையாய்ப் பல நிகழ்ச்சிகளை என்னிடம் கூறியபோது செங்கிஸ்கானும், தைமூரும், கான்களும் மாண்டு போன மனிதர்களே தவிர, மாண்டுபோன உள்ளங்களல்ல, உணர்ச்சிகளல்ல என்பதை உணர்ந்தேன். இன்றும், அதுசமயம் இருபது பேரைக் கொன்றவன், அந்த வகுப்பாரின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் புகுந்து, குழந்தைகளைக் கொன்றவன், இத்தனை பெண்களைக் கொன்றவன் எனத் தனது 'அரசியல்' சுயசரிதம் கூறித் தனது நண்பர்கள் மத்தியில் பெருந் தேசியத் திருப்பணிக்குரிய பாராட்டுதலைப் பெறும் 'வீரர்'களை, டில்லியில் சர்வ சாதாரணமாகக் காணலாம். டில்லியில் சுதந்திர தினத்தன்று, தேசியக் கொடியை ஏந்திப் பவனிவரும் இலட்சக் கணக்கான கரங்களில் பல, படுகொலை புரிந்தவை. பாதகம் புரிந்தவை. இவை அங்கு திடுக்கிடும் உண்மைகளாகக் கருதப்படவில்லை. பெருமைக்குரியவையாகக் கருதுவோரும், வெளிப்படையாகக் கூறி மகிழ்வோரும் பலர் உண்டு என்பதை நேரில் கண்டுணர்ந்தபோது திடுக்கிட்டுப் போனேன். ஆனால் மறுகணம் இத்தகைய இடத்திலிருந்து, இத்தகைய மக்களால் நாம் ஆளப்படு

கிறோம் என்பதை எண்ணியபோது வெட்கத்தால் நான் குன்றிப் போய்விட்டேன்.

மக்கள் சபை தொடங்கியது. ஆர்ப்பாட்டங்களுக்கும் ஆரவாரங்களுக்கும் பஞ்சமில்லை, ராஷ்டிரபதியின் ராஜாங்கப் பவனியை கண்ணும் கருத்துமாக, மிக ஆடம்பரத்துடன் நடத்துகிறார்கள். பஞ்ச சீலப் பண்டிதர் எதிர்க் கட்சியினரைத் துச்சமென மதிக்கிறார் என, அடிக்கடி அவருடன் கருத்து மாறுபாடு கொண்டோரைக் கண்டிக்க அவர் கையாளும் இழி மொழிகளிலிருந்து நாம் அறிந்திருந்தாலும், சபையின் உயர வீற்றிருக்கும் உலகத்தின் கண்முன், தான் உலகிலேயே அதிதீவிர ஜனநாயகவாதி எனக் காட்டிக்கொள்ளப் பண்டிதர் கையாளும் முறைகள் எவரையும் மலைக்கவைக்கும். சபைத் தொடக்க நாளன்று துள்ளிக் குதித்து எதிர்க் கட்சியினர் வீற்றிருக்கும் வரிசைக்கு ஒவ்வொருவரிடமும் புன்சிரிப்புடன் கைகுலுக்கும் காட்சியைக் காணும் வெளிநாட்டவர், 'ஆகா எத்தகைய குடியரசுப் பேரொளி இந்த நேரு' என்றே வியப்பர்.

கல்லூரிகளிலும், நூல் நிலையங்களிலும் குடிஅரசு தத்துவம் பற்றியும், மக்கட் பேரவை நடைமுறை விதிகள், வழக்கங்கள் ஆகியவை குடிஆட்சிக்குக் காப்பாக விளங்கும் சிறப்பினையும், எவ்வளவு கற்றாலும், இவைகளின் பெயராலேயே, இவைகளை மாய்க்கும் கயமை முறைகளையும், அவைகளைத் திறமையாகக் கையாளும் 'விற்பன்னர்' களையும் நேரில் பார்த்தால் மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும். தாம் பெருந்தொகையினராக இருக்கிறோம், தாம் விரும்பிய எதனையும் சட்டமாக்கும் வாய்ப்பிருக்கிறது என்பதோடு திருப்தி அடையாது, சிறுபான்மைக் கட்சியினரின் கருத்து சபையில் எவ்வளவுக் கெவ்வளவு கூறப்படாமல் இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு திருப்தி கொள்ளும் உள்ளம் படைத்தோரே ஆளும் கட்சியினராக வீற்றிருக்கின்றனர்.

குறை கூறுவோரை விலை பேசுவதும், மசியாதவரை அச்சுறுத்தி அடக்கப் பார்ப்பதும், டில்லியில் வளர்ந்துள்ள நவீன ஜனநாயக நடைமுறைகள்.


ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட மக்கள் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம் இருவரை மட்டுமே அனுப்பியிருக்கிறது. எனினும் கழகக் குறிக்கோள்களில் உள்ள நியாயத்தின் திண்மை அனைவரையும் அதன்பால் ஈர்க்கின்றது. வெறுப்புடனாயினும், முகச் சுளிப்புடனாயினும் கழகத்தினைப் பற்றி அறிந்தாகவேண்டுமென்ற உணர்வு எவரிடமும் தலைதூக்கி நிற்பதைக் காணலாம். சபையில் பேசும் வாய்ப்புகள் மிகக் குறைந்து இருப்பினும், சபை உறுப்பினர்களும், பத்திரிக்கையாள

கற்பனை உலகமே ஒரு தனி உலகம் தான். அதில் பல இன்பங்களையும் ஏக காலத்தில் அனுபவிக்கலாம். பல்வேறு பருவங்களும் கற்பனையுலகிலே சந்திக்கும்; எந்த மலரையும் எந்தக் கனியையும், எந்த நிலையிலும் சந்திரனையும் சூரியனையும் நினைத்த உடனே சந்தித்து இன்புறலாம்; கவிஞன் உலகமே கற்பனை உலகம்தானே!

ரும் நாளும் கழகத்தைப் பற்றி நிறையச் செய்திகளை அறிவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். வங்கத்தைச் சார்ந்த சில உறுப்பினர்களும், மராட்டியத்து உறுப்பினர் சிலரும், ஒரிஸாவைச் சேர்ந்தவர்கள் பலரும் மிக அனுதாபத்துடன், நாம் மேற்கொண்டிருக்கும் தனி நாடு பிரச்னையை அணுகி ஆராய்கின்றனர். அரசின் இந்தித் திணிப்புக் கொள்கை, நமக்கு அவர்களுடைய ஆதரவைப் பெருமளவுக்குப் பெற்றுத் தந்துள்ளது. மக்கள் சபையிலும், அதன்மூலம் ஆட்சியிலும், உத்தரப்பிரதேசமும் பீகாரும் வகிக்கும் ஆதிக்கம், இந்த அரசியல் சட்டப்படி என்றுமே நீடிக்கும் ஒன்று என்பதை நம்மைத் தவிர பிறரும் உணரும் நிலை வளர்கிறது. வெள்ளையன் வெளியேறிய மகிழ்ச்சி மயக்கத்தில் இந்த ஆபத்தை உணர்ந்திருந்தோரில் மராட்டியரும், வங்க மக்களும் மிக முக்கியமானவர்கள். அவர்கள் இன்று விழிப்படைந்து வருகின்றனர்.

உத்தரப் பிரதேச, பீகார் அரசியல்வாதிகள் அனைவரும் இந்தியா ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதைவிட, இந்தியா தம் வசம் இருக்கவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ளனர். இனி, மற்றவர்கள்தான், ஒன்றாய் இருக்கும்இந்தியா எனின், அவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட இந்தியாதானா என்பதைப்பற்றி முடிவு செய்து கொள்ளவேண்டும், என வங்கத்தினரும், மராட்டியரும், ஒரியர்களும் எண்ணுகின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பே நமது கழகம் இதனை எண்ணி, இந்தியா ஒன்றாய் இருப்பதெனில் அதன் ஆட்சி வடவர் வசமேதான் இருக்கும் என்பதைக் கண்டுணர்ந்து, பெரிய தேசத்துக்குடிகள் என்பதைவிட நமது தேசத்தின் குடிகள் என்ற நிலையேதான் நமக்கு வாழ்வளிக்கும் நிலை என்ற முடிவுக்கு வந்தது. அதனை ஒப்புக்கொள்ளும் உணர்ந்துகொள்ளும் திராவிடர் தொகை நாளும் வளர்ந்து வருவது கண்கூடு. இன்று திராவிடர்க்கு மட்டுமேயன்றி மராட்டியருக்கும், வங்க, ஒரிய மக்களுக்கும் வழிகாட்டும் பெரும்பணியைக் கழகம் ஆற்றப்போவது உறுதி.



# விழித்துக் கொண்டான்!

அஸ்லி

**அன்று** ஊர்க் காவல் நிலையத்தில் ஒரே பரபரப்பு. அன்றுடம் சாராயம் காய்ச்சியவர்கள், இரவில் சூதாடியவர்கள் போன்றவர்களையே விசாரித்துச் சலித்துப்போன இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஒரு தனிக் களை குடிகொண்டிருந்தது. தூங்கி வழிந்த பலரும் எழுந்து உட்கார்ந்துகொண்டு சோம்பல் முறித்துக் கொண்டிருந்தார்கள். மொத்தத்தில், அங்கிருந்த யாவருமே ஒரு சுறுசுறுப்புடன் காணப்பட்டனர். இதற்கெல்லாம் காரணம் என்ன? அன்று அவர்களுக்கு மேலிடத்திலிருந்து அறிக்கையொன்று வந்தது. அந்த வட்டாரத்தில் முற்போக்குக் குழுவினர் மொழிப் போர் நடத்தப் போவதாகவும், அப்போர் நடைபெறுதவாறு போலீசார் பாதுகாக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கண்டிருந்தது. அதனால்தான் எப்போதும் தூங்கிக் கிடக்கும் அந்த அலுவலகத்தில் அன்று அத்தனை பரபரப்புக் காணப்பட்டது.

மாணிக்கம் மட்டும் மிகவும் கவலை தோய்ந்த முகத்தவனகக் காணப்பட்டான். அன்று காலை வந்திருந்த கடிதத்தின் மூலம் அப்போரினைப் பற்றி முன் கூட்டியே அறிந்திருந்தான் அவன். மேலிடத்தினின்று இத்தகைய கட்டளை வரும் என்பதையும் அவன் எதிர்பார்த்திருந்தான். ஆகவே மற்றவர்களைப்போல் அவன் பரபரப்படையவில்லை. அமைதியாக இருந்தான். ஆனல் அவன் உள்ளத்தில் பெரிய சூருவளி அடித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அவன் நெஞ்சை அரித்துக்கொண்டிருந்த துன்பத்தை யார் அறிவார்!



கான்ஸ்டபிள் கந்தப்பன் மாணிக்கத்தின் முதுகில் அறைந்து, "நல்ல சான்ஸ் அப்பா நமக்கு! இந்தப் போராட்டத்தில் நாம் சாமர்த்தியமாக நடந்துகொண்டால் நல்ல பலனை அடையலாம்" என்று சொன்னபோது மாணிக்கம் ஒரு வறட்டுப் புன்னகை புரிந்தான். அதன் காரணம் அப்போது கந்தப்பனுக்குப் புரியவில்லை.

மாணிக்கத்துக்கு, தான் அலுவலகத்திற்குப் புறப்படும்போது தன் மனைவி கூறியது இப்போது நினைவு வந்தது. "என்னங்க, இன்னிக்கு மாப்பிள்ளைக்கு ஒரு கடுதாசி எழுதிடுங்க. மாப்பிள்ளைக்குத் தான் இப்படிப் புத்தி போச்சுதுன்னு எழில்மணியாவது அவரைத் தடுக்கக்கூடாதா? அவளும் அவரோடே சேர்ந்து கூத்தடிக்கிறது கொஞ்சமும் நல்லாயில்லை. என்ன போராட்டமோ என்ன எழவோ! உசிரைக் கொடுத்துக் கெட்ட பெயர் வேறே வாங்கிக்கிறது! ரெண்டு பேரும் உடனே இதிலிருந்து விலகி விடணும்னு எழுதிடுங்க" என்று சொன்னள் மாணிக்கத்தின் மனைவி மணியம்மை.

மாணிக்கத்துக்குத் தன் தங்கை எழில்மணியைப் பற்றித் தெரியாதா? கரிகாலன் சற்றே சோர்ந்திருந்தாலும் அவனைத் தட்டி யெழுப்பிப் போராட்டத்திற்கு அனுப்பும் வீரமங்கையல்லவா அவள்? அவள் கரிகாலனை மணந்து கொண்டது இன்ப வாழ்க்கை நடாத்துவதற்கல்ல. நாட்டை மீட்கும் பணியிலே ஒரு துணை கிடைத்தால் நல்லது என்று எண்ணியே அவனைத் திருமணம் செய்துகொண்டாள். அவளுக்குக் கிடைத்த துணையும் அவளுக்குத் தக்கபடியே இருந்தது. இருவரும் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் செல்வதோடு தங்கள் நாட்டுப் பற்றை நிறுத்திக் கொள்ளாது, கிளர்ச்சி, அறப்போர் முதலியவற்றில் கலந்துகொண்டு உண்மையாக நாட்டுக்கு உழைத்தார்கள். தடியடி, கண்ணீர்ப் புகை, சிறைவாழ்க்கை அனைத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

மாணிக்கத்துக்கு எழில்மணியும் கரிகாலனும் சேர்ந்து நடத்திய பல போராட்டங்களின் நினைவு வந்தது. இந்தி எதிர்ப்புப் போரின்போது எழில் மணியும், கரிகாலனும் விளைத்த வீரத்தினை எண்ணினல் இப்போது கூட உடல் சிலிர்க்கும். மாணிக்கம் கண்மண் தெரியாமல் தடியடிப் பிரயோகம் செய்து

கொண்டிருந்தான். கரிகாலன் இடத்தைவிட்டு அசையாமல் இருந்ததால் மாணிக்கம் அவனது முழங்கையில் தடியால் பலமுறை அடித்துவிட்டான். கரிகாலன் தன் முழங்கையிலிருந்து பெருகும் குருதியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தன் தோழர்களை ஊக்கிக் கொண்டிருந்தான். இதனைத் திகைப்போடு பார்த்துக்கொண்டிருந்த மாணிக்கம் தன் மனத்தைக் கட்டுப்படுத்த வேறிடம் நோக்கிச் சென்றான்.

o

மாணிக்கம் தன் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். யாராவது பார்க்கிறார்களா என்று நாற்புறமும் நோக்கினான். அந்த அமர்க்களத்தில் அவனை யார் பார்க்கப் போகிறார்கள்!

“சீ! என்ன பிழைப்பு!” அவனது வாய் அவனையும் அறியாமல் முணுமுணுத்தது. ‘எழில்மணியின் சொல்லில் எத்தனை உண்மை இருக்கிறது!’ என்று எண்ணினான்.

கல்லக்குடிப் போராட்டத்திற்கு முன் எழில்மணி ஒரு கூட்டத்தில் பேசினாள்; “தாய் நாடு, தாய் மொழி, தாய் நாட்டு மக்கள்—இவை நம் உயிரைவிட உயர்ந்தவை. இவற்றில் எதற்குத் தீமை நேர்ந்தாலும் உயிர் கொடுத்தேனும் அதனை நீக்க முற்பட வேண்டும். வடநாட்டான் பெயரால் திராவிடத்தில் ஒரு ஊர் அழைக்கப்படுகிறது என்பது எதைக் காட்டுகிறது? நாமனைவரும் ஏமாளிகள், உணர்ச்சியற்றவர்கள் என்பதையல்லவா காட்டுகிறது? தோழர்களே! உயிர் வாழ்வதுதான் முதன்மையானதா? விலங்குகள் கூடத்தான் உயிர் வாழ்கின்றன. எது முக்கியம்? சோறா மானமா? மானம்தான் பெரிது. அதுதான் மனிதனுக்கும் விலங்குக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது. சில மனிதர்கள்கூட விலங்குகளைப்போல் பிழைப்பின் பொருட்டு இழிதொழில் செய்கிறார்கள். போராட்டத்தின்போது குறுக்கே புகுந்து நம்மை அடக்க முயலும் ‘ஊர்க் காவலர்’களைத்தான் எடுத்துக் கொள்வோமே. அவர்கள் மனிதர்கள் இல்லையா? அவர்களுக்கு உணர்ச்சி இல்லையா? இருக்கிறது; ஆனால் அதை அடக்கி வைத்திருக்கிறார்கள், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு! இதுவும் ஒரு வாழ்க்கையா? அன்பர்களே! நாம் வாழ்வது நமக்காக அல்ல, நாட்டுக்காக!......”

கூட்ட நடவடிக்கையைக் காண வந்திருந்த மாணிக்கத்தின் உள்ளத்தில் இந்தச் சொற்கள் ‘சுரீ’ரெனத் தைத்தன. அது முதலே அவன் எண்ணத் தொடங்கிவிட்டான், ‘சீ! இதென்ன வாழ்வு’ என்று. கல்லக்குடிப் போராட்டத்தின் போது ஒருவருக்கும் தெரியாமல் பெயர்ப் பலகையில் ‘கல்லக்குடி’ என்ற பெயரை மறைவாக ஒட்டியவர்களில் மாணிக்கமும் ஒருவன்.

o

ஒரே செடியில் வெவ்வேறு நிறங்கொண்ட மலர்களைப் பார்ப்பது அரிது. ஆனால் மனித சமுதாயத்திலே இத்தகைய நிகழ்ச்சிகள் மிகச் சாதாரணமானவை. ஒரே தாய் வயிற்றில் பிறந்த மாணிக்கத்திற்கும் எழில்மணிக்கும் எத்துணை வேறுபாடு! தந்தையார் இறந்தபோது அக்குடும்பத்தைக் காப்பாற்ற ஏதேனும் ஒரு தொழிலைச் செய்தே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது மாணிக்கத்துக்கு. நகர்க் காவலன் ஆவதற்கு வேண்டிய தகுதிகள் யாவும் அவனிடம் பொருந்தியிருக்கவே, அவ்வேலை அவனுக்கு எளிதில் கிடைத்தது. எழில்மணி வளர்ந்தாள். அவள் வளர வளர அவளது உள்ளத்திலே முற்போக்குக் கருத்துக்கள் இடம் பெறலாயின. பள்ளிப் படிப்பை முடித்தபோது அவள் ஓர் புதுமைப் பெண்ணாக நின்றாள். சீர்திருத்தவாதிகள் பேசும் கூட்டங்களுக்குச் செல்லலானாள். மாணிக்கம் தடுத்தான்; அவள் மதிக்கவில்லை. மணம் செய்விக்க அவன் எண்ணியபோது முற்போக்காளனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று கூறிக் கரிகாலனை மணாளனாக ஏற்றுக்கொண்டாள். அடி தொழுதேத்தும் மாணிக்கத்தின் ‘தங்கையாகத் தன்மான எழில்மணி தோன்றியதேன்? விந்தைதான். ‘சோறா — மானமா?’—எழில்மணி கேட்டாள். அதே கேள்வியைத்தான் மாணிக்கமும் கேட்டான். ஆனால் இருவரது விடைகளில்தான் வேற்றுமை இருந்தது. ‘மானம்!’ என்றாள் எழில்மணி. மாணிக்கத்தின் பதில்: ‘சோறு!’

இத்தொழிலை ஏற்றுக்கொண்ட புதிதில் மாணிக்கம், தான் நாட்டுக்கு நன்மை செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகவே எண்ணினான். ஆனால் கரிகாலன் - எழில்மணி இவர்களின் பேச்சுக்களைக் கேட்கக் கேட்க ‘நாம் நாட்டுக்குத் தீமை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோமா? நாட்டை மீட்கப் போரிடும் சக்தியை அடக்க முற்பட்டிருக்கிறோமா?’ என்ற ஐயம் தோன்றலாயிற்று.



மணிமங்கலத்திலே கரிகாலன் — எழில்மணி பேச்சுக்கு நல்ல வரவேற்பிருந்தது. அவ்வூரார் அடிக்கடி அவர்களைப் பேச அழைப்பார்கள். அச் சமயங்களில் அமைதி காக்க அங்கே மாணிக்கம் அனுப்பப்படுவான். இவ்வாறு அவர்கள் சொற் பொழிவுகளை விடாது கேட்கும் வாய்ப்பு அவனுக் குக் கிடைத்து வந்தது. அதன் விளைவு, முன்பெல் லாம் தான் நாட்டுக்குத் தொண்டு செய்வதாகக் கருதிய மாணிக்கம், இப்போது 'சீ! இதென்ன பிழைப்பு!' என்று வெறுத்துக் கொள்வான். வேலையை விட்டால் குடும்பம் தவிக்குமே என்ற ஒரே நோக்கோடுதான் அவன் அந்த வேலையை இப்போது செய்துவருகிறான்.

"என்ன அண்ணே, அப்படி உட்கார்ந்திட்டே?" என்ற குரல் கேட்டுத்திடுக்கிட்டு நிமிர்ந்தான் மாணிக் கம். கந்தப்பன் முகம்மலர நின்றுகொண்டிருந் தான். அவன் ஒரு வெறி நாய். விடுதலைப் பட்டா ளத்தைச் சிதைத்துச் சீரழிப்பது அவனுக்குப் பிடித்தமான வேலை. அதிகாரிகள் 'த' என்பதற்குள் தடியடிப் பிரயோகத்தில் இறங்கிவிடுவான். எதற்கா வது 'து' என்று சொன்னால் கூடத் துப்பாக்கியை எடுத்து நான்கு முறை சுட்டுத்தீர்க்கும் இயல்பினன். கல்லக்குடிப் போராட்டத்தின்போது காவியமணி பட்ட துன்பத்திற்காக உண்மையான மகிழ்ச்சி அடைந்தவன் இவன் ஒருவன்தான். வெள்ளையர் ஆட்சியின் போது கிளர்ச்சி செய்த காங்கிரசாரை ஆத்திரம் தீர அடித்து நொருக்கிய இவன், காங்கிர சார் ஆளும் இந்நாளில் அவ்வேலையை விடாது தொத்திக்கொண்டு, இன்று விடுதலை வீரர்களின் உடலைப் பதம் பார்த்துக்கொண்டிருக்கிறன். இந்த அடித்தல், உதைத்தல் எல்லாம் அவர்களுடைய உடலைத்தானே தாக்கும்! உள்ளத்தை என்னசெய்ய முடியும் இவனால்! எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களல்லவா அவர்கள்!

கந்தப்பனின் வெறி நிறைந்த மகிழ்ச்சியைக் கண்டு வெறுப்படைந்தான் மாணிக்கம். 'உஸ்......' என்று நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந் தான் அவன்.

O O O

தங்களுக்காக அமைக்கப்பட்ட அந்த விடுதியில் ஊர்க்காவலர் கூடிக் கும்மாளமடித்துக் கொண்டிருந் தனர். ஒவ்வொருவரும் முற்போக்குக் குழுவினரைத் தம் வயிற்றெரிச்சல் தீரத் திட்டிக்கொண்டும் கிண் டல் செய்துகொண்டும் இருந்தனர். மாணிக்கம் மட்டும் கவலை தோய்ந்த முகத்தினனாய் ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்திலே பெரிய போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. இவனது கவலையைச் சற்றும் அறியாதவர்களாக மற்றவர்கள் கொட்டமடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரத்தில் மற்றோர் இடத்திலே கிளர்ச்சி வீரர்கள் குழுமியிருந்தனர். யாவரது உள்ளத்திலும் உவகை பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அன்று நடக்கவேண்டிய போராட்டத்தைக் குறித்து அனை வரும் களிப்பு நிரம்பிய குரலில் பேசிக்கொண்டிருந் தனர்.

## அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறை காரணமாகத் "திராவிட நாடு" இதழ் நிறுத்தப்பட்டு, **1—2—58**-ல் மீண்டும் வெளிவருகிற தென்பதை விற்பனையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள் கிறோம்.

**பொறுப்பாளர்.**

இங்கே விடுதலை வீரர் பட்டாளம்; அங்கே விடு தலை உணர்ச்சியைத் தட்டியடக்க முயலும் ஊர்க் காவலர் கூட்டம்; இங்கே அன்பு நிறைந்த கலகலப்பு; அங்கே ஆணவம் நிறைந்த கலகலப்பு! இங்கே வீரச் சிரிப்பு; அங்கே வெறிச் சிரிப்பு!

'அமைதிகாக்க'ப் புறப்படும்போது மாணிக்கத் தின் முகத்திலே தெளிவு. ஆம்; அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

போராட்டம் மும்முரமாக நடந்துகொண்டிருந் தது. அதனை அடக்கப் போலீசார் தடியடிப் பிர யோகம் செய்துகொண்டிருந்தனர். ஆனால் வீரர்கள் சிறிதும் அசையவில்லை. தங்கள் மேல் விழும் அடியை அவர்கள் பொருட்படுத்தவேயில்லை. 'ஆணவம் சீறலாம்; இராணுவம் பாயலாம்; சிற்றத் தைக் கண்டு சிதறாதே' என்று அவர்கள் தலைவர் கள் அறிவுரை கூறியிருக்க, அவர்களா இதற்கெல் லாம் அஞ்சி அடங்கிவிடுவர்? அவர்கள் அங்கிருந்து அசையவுமில்லை; அடக்கவந்த காவலரைத் தாக்கவும் இல்லை. ஆனால் போலீசாரால் 'நிலைமையைச் சமாளிக்க' இயலவில்லை!

அதிகாரிகள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த் துக் கொண்டனர். "'காலிகள்' போலீசாரைக் கல்லாலடித்ததால் வேறு வழியின்றித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யநேரிட்டது" என்று செய்தி வெளி யிட்டுத் தப்ப அவர்களுக்கா தெரியாது? இரத்த தாகம் ஏற்படும்போதெல்லாம் அவர்கள் கையாளும் தந்திரமாயிற்றே அது! அவ்வளவுதான்; அடுத்த கணம் 'சுடு!' என்ற உத்தரவு பிறந்தது.

மாணிக்கம் துப்பாக்கியை எடுத்தான்; கண்களை இறுகமூடிக்கொண்டான். கிளர்ச்சி தீவிரமாக இருந்த இடத்தை நோக்கித் துப்பாக்கியை நீட்டினான்.

'டுமீல்! டுமீல்!'

'ஆ' என்ற குரல்! கரிகாலன் குருதி பெருகும் மார்பை ஒரு கையால் அழுத்திக்கொண்டு, "வெற்றி! வெற்றி! வெற்றி நமக்கே! அஞ்சாதீர்கள்; அசையா தீர்கள்! நன்கு போராடுவோம்; நாட்டை மீட்போம்!" என்று எழுச்சியோடு கூறினான். அடுத்த கணம் தடாலென்று கீழே விழுந்தான். 'கரிகாலன் வாழ்க! வாழ்க!' என்ற குரல் எங்கும் நிறைந்து ஒலித்தது.

பிறந்த நாட்டின் மீட்சிக்காகப் போரிட்டு, அது மீளுகின்ற இன்பக்காட்சியினைக் காணுமலே மறைந்து விட்டான், பாராண்ட திராவிடர் வழித்தோன்றல் கரிகாலன். எழில்மணி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள், "வீரமரணம்! அன்பரே, தாங்கள் வீர மரணம் அடைந்துவிட்டீர்கள்!" என்று கூவினுள்.

திறந்த கண்களை மீண்டும் மூடிக்கொண்டான் மாணிக்கம்.

"தோழர்களே!"—வீரர்கள் நிமிர்ந்து நின்றனர்.

"தோழியர்களே!"—பெண்களனைவரும் வரிசை வரிசையாக எழில்மணியை நோக்கி வந்தனர்.

"அடிமை நாட்டிலே தோன்றிய அறிவு மணிகளே! நமது படைத் தளபதி கரிகாலன் அவர்கள் விடுதலைக்குப் போரிட்டு வீர மரணம் அடைந்து விட்டார். அவர் விட்டுச் சென்ற பணியை நாம் பொறுப்புடன் ஏற்று முடிப்போமாக. தோழர்களே! 'தேனெனனும் வாழ்வே தேளாய் மாறும், போர் முனைச் சாவே பொது வாழ்வில் இன்பம்' என்ற நமது போர்ப்பரணியைச் சற்றே நினைவுக்குக்கொண்டு வாருங்கள். நம் வாழ்வு இப்போது தேளாய் மாறியுள்ளது. போர்முனைச் சாவு நம்மை அழைக்கிறது. எழில்மணி பாய்ந்துவந்தாள் கரிகாலனிடம். அவன் தோள்களைப்பற்றி அசைத்தாள். அடிமை நாட்டிலே கரிகாலனைச் சுட்டுத் தன் தாகத்தைத் தணித்துக் கொண்டு விட்டதிந்த அரசாங்கம். 'வானத்தை நோக்கிச் சுட்டால் அங்கிருக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் தொல்லை ஏற்படுமோ' என அஞ்சுபவர் நம் அரசாங்கத்தார். ஆளைக் குறித்துச் சுடும் விந்தையை இங்கேதான் கண்டோம். தோழர்களே! நம் கரிகாலர் மறைந்துவிட்டார். ஆனல் நம்மிடையே இன்னும் ஆயிரமாயிரம் கரிகாலர்களும் செங்குட்டுவர்களும் இருக்கையிலே கவலையேன்? தோழியர்களே! சீறி வந்த சிறுத்தையை முறத்தால் அடித்து விரட்டிய மறத்தியர் வழி வந்த நாம் இந்தச் சுண்டெலிகளுக்கா அஞ்சுவோம்? நாட்டை மீட்கப் போராடி உயிர் கொடுப்போம் வாரீர்! வாரீர்!!"

மாணிக்கம் தன் உடுப்புகளைப் பரபரவென்று கழற்றினுன்; தொப்பியை எடுத்தான்; துப்பாக்கியையும் அவற்ருேடு வைத்து அதிகாரிகள் இருந்த பக்கம் வீசினுன். உள் சட்டையுடனும் அரைக்கால் சட்டையுடனும் தோன்றி அவன் கிளர்ச்சிக் குழுவில் பாய்ந்து அவர்களுடன் கலந்தான். யாவரும் வியப்போடு பார்த்துக்கொண்டிருக்கையிலே மாணிக்கம் கூவினுன், "**திராவிட நாடு திராவிடருக்கே!**"

# "தங்கைக்கு"

[ சொ. அடைக்கலம் ]

வெள்ளி முளைத்தவுடன் எழுந்து — வீட்டு
வேலைகளைச் செய்வோம் தங்காய்
எள்ளிப் பிறர் நகைக்கத் தூக்கம் — நீ
ஏற்றுப் படுத்திராதே தங்காய்.

பள்ளிப் படிப்புனக்கு வேண்டும் — வேலைப்
பழக்க வழக்கங்களும் வேண்டும்
துள்ளி விளையாடு தங்காய் — எவரிடமும்
தோழமை கொண்டிடு தங்காய்.


தாயை வணங்கிடு தங்காய் — உந்தன்
தந்தை சொல்லை மீருதே தங்காய்
வாயைப் பெரிதாக்கித் தங்காய் — வீண்
வம்பு சண்டை செய்யாதே தங்காய்.

கூட்டிப் பெருக்கி மெழுகி — அடுப்பை
மூட்டிச் சமையல்செய்யப் பழகு
ஏட்டில் தமிழ் மறை குறளை — என்றும்
ஏற்றுப் படித்ததுபோல் ஒழுகு.

நாட்டுக்குப் பெருமதிப்பு உன்போல் — பிறர்
நாடும் படித்தஇளம் பெண்கள்
வீட்டு விளக்காகித் தங்காய் — சான்ருேர்
விருப்பம் நிறைவேற்று தங்காய்.



கண்ணை இமைகாத்தல் போல — குடும்பம்
கட்டிக் காக்கும் பெண்களாலே
மண்ணில் தமிழ்மாதர் பெருமை — இமய
மலையிலும் உயர்ந்தது தங்காய்.




# அமெரிக்காவில் அறுவடைத் திருநாள்

முகவை:
**மீ. மனோகரன்**

**பயிர்** விளையத் தன் உடலளித்து இடமளித்த நிலமடந்தையை நினைக்கும் நாளே பொங்கல் நாள்; பருவம் பொய்க்காது பெய்தளித்த மாரியையும் போற்ற மறந்ததில்லை; இவ்வளவுக்கும் மேலாக செந்நெற்பயிரைத் தன் செங்கதிர்க்கரங்களால் அணைத்து வளர்த்து அன்பொளி வீசிய ஞாயிற்றை வாழ்த்தத் தவறியதில்லை. இந்த நன்றி மறவாக் கடப்பாடு தமிழரிடம் தொன்று தொட்டு வந்த பண்பு. இத்தகைய ஓர் உன்னதமான கருத்தின் அடிப்படையில்—உயிரனைய பயிர் விளைய தனக்கு ஆண்டு முழுதும் துணை நின்ற இயற்கைக்குத் தமிழர்கள் தம் நன்றியைத் தெரிவிக்கும் நன்னாளே பொங்கற் புது நாள்.

○ ○ ○

இதே பெயரில், அதாவது "நன்றி தெரிவிக்கும் நன்னாள்" என்ற பெயரில், புதிய உலகம் என்று வழங்கப் பெறும் அமெரிக்கக் கண்டங்களுள் ஒன்றான வட அமெரிக்காவில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. அந்நாட்டு அரசாங்கம் விழா நாட்களில் விடுமுறை அளிக்கிறது. பெருவாரியான மக்களால் கொண்டாடப் பெறும் இவ்விழா எந்த மத அடிப்படையிலும் தோன்றியதல்ல; தனி ஒரு மனிதர் போற்றுதலுக்காகவும் தோற்றியதல்ல, ஆனால் இந்தப் பெரும் விழா தமிழர் கொண்டாடும் பொங்கல் திருவிழா கொண்டாடப்படும் அதே நெறியின் அடிப்படையில் அமைந்திருப்பதுதான் விந்தையாகும்; சிந்தனைக்குரியதுமாகும்.

○ ○ ○

கி. பி. 1585-ல் சர்வால்டர் ராலே என்பவர் எலிசபெத் அரசியாரின் சார்பில் வடஅமெரிக்காவில் வர்ஜினியா குடியேற்ற நாட்டை உருவாக்கிய நாள் முதல், ஸ்பானியர், போர்ச்சுக்கீசியருடன் ஆங்கிலேயரும் புதிய உலகத்தில் குடியேறத் துவங்கினர். அது முதல் அமெரிக்கா ஐரோப்பியருக்குத் திறந்த வீடாயிற்று.

கி. பி. 1620-ல் இங்கிலாந்திலிருந்த தூய மதவாதிகள் என்போர் அங்கு தமக்குச் சமய விடுதலை கிடைக்காததால் சமய விடுதலை வேண்டி அமெரிக்க மண்ணில் தஞ்சம் புகுந்தனர். இவர்களே வரலாற்றில் யாத்ரீகத் தந்தையர் என்று அழைக்கப்படுகின்றனர். வட அமெரிக்காவில் காட்முனையில் இறங்கிய இவர்கள் ஏற்கனவே அங்கு வாழ்ந்த பழங்குடிகளைத் துன்புறுத்தும் கயமையில் இறங்கவில்லை. அமெரிக்க மண்ணிலும் தம் உழைப்பிலும் நம்பிக்கை வைத்து நிலங்கிள்ளிப் பயிரிட்டனர்; பாடுபட்டனர்; ஆண்டு இறுதியில் பலன் கிடைத்தது. நன்றி பெருக்கெடுத்தது.

முற்றிலும் புதிய மண்ணிலே தாங்கள் பெற்ற அறுவடை எனும் பெரு வெற்றிக்கு அறிகுறியாக அதனை ஓர் விழாவாகவே கொண்டாட எண்ணினர். புதியதாக விளைந்த சோளத்திலே களி சமைத்தனர். பூசனிப் பழத்திலே பணியாரம் செய்தனர். வான்கோழிப் புலால், இன்னபிற படைக்கப்பட்டன. விருந்துண்டு, ஆட்டமும் கூத்தும் நடத்திக் களிப்பெய்தினர்.

கி. பி. 1621ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் நான்காவது வியாழக்கிழமையில் "நன்றி தெரிவிக்கும் நன்னாள்" எனும் இப் பொன்னான விழா கொண்டாடப்பெற்று நாளடைவில் பொலிவுபெற்று, இன்று அது ஒரு பெரிய "தேசீயத் திருநாள்" ஆகச் சிறப்படைந்துள்ளது.

○ ○ ○

அமெரிக்காவின் அறுவடைத் திருநாளைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் தரும் விளக்கங்களோ வேறு விதமாக இருக்கின்றன. நன்றி தெரிவிக்கும் கடப்பாடு இயற்கையாகவே பழங்குடி மக்களிடம் காணப்படும் சிறப்பியல்புகளுள் ஒன்று. இன்றைய மேலைநாட்டு நாகரிக மக்களிடம் இப்பண்பு உதட்டளவில்தான் உண்டு. உலக விழாவெடுத்துக் காட்டும் உணர்ச்சி—எண்ணம்—இங்கிலாந்திலிருந்து குடிவந்த ஐரோப்பியருக்குத் தாமாகவே உதித்த ஒன்று? அல்லது அந்நாட்டில் ஏற்கனவே இருந்த பழங்குடி மக்களிடமிருந்து கடன் வாங்கிய ஒன்று?" என்ற கேள்வி ஆராய்ச்சியாளரின் உள்ளத்தில் எழுந்தது. அதற்குக் காரணம் இருந்தது. ஏனெனில் ஏற்கனவே அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்கள் மயா, அஃச்தெக் போன்ற சிறந்த பண்பாடுகளைப் பெற்றிருந்தவர்கள். அவர்கள் இது போன்ற பல விழாக்களைக் கொண்டாடிவந்தனர் என்று வரலாற்றுச் சான்றுகளிலிருந்தும் தெரிய வருகிறது.

○ ○ ○

– 1956ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நம் நாட்

டுக்கு வந்த டாம்டு ஏரோசு என்ற செவ்விந்திய நடனக்காரர், நமது பொங்கலைப் போன்ற திருநாளை அவரது இனத்தவரும் கொண்டாடுவதாகவும் ஞாயிற்றையும் மாரியையும் போற்றி சடங்குகள் நடத்துவது உண்டெனவும் தெரிவித்துள்ளார்.

இது எவ்வளவு உண்மையென்பது செவ்விந்தியர்கள் நடத்திய 'மழை நடனம்' பற்றி வரலாற்றாசிரியர் குறிப்பிடுவதிலிருந்து தெரியவருகிறது. அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வந்த 'ஞாயிற்று நடன விழா' கி. பி. 1884ல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தால் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டது.

பழைய பெருவியப் பேரரசை ஆண்ட 'இன்கா' எனப்படும் அரச பரம்பரையினர் ஞாயிற்றுக் கடவுளுக்கு கோவில்கள் கட்டினர். அவைகளின் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

தவிரவும், செவ்விந்தியர்களது மிகச் சிறந்த நாகரிகங்களை வளர்த்ததும் அழித்ததும் அவர்களது பிரதான உணவாகிய மெயிஃச் எனப்படும் சோளம் என்பர் வரலாற்றாசிரியர்கள். அவர்கள் தாங்கள் பயிராக்கி வந்த நிலம் வரண்டுவிட்டால் உரமிடுவதில்லை உடனே தாம் சீரும் சிறப்புமாக வாழ்ந்த நகரங்களை விட்டுவிட்டுக் கூட்டங் கூட்டமாக வேறு இடங்களை நோக்கி நகர்ந்தனர். இவ்வாறு பாழான பல நாகரிக நகரங்கள் மத்திய அமெரிக்காவிலுள்ள யுகாடன் காடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இத்தனைச் சிறப்பு வாய்ந்த சோளப்பயிரை அறுவடை செய்யும் ஒவ்வொரு முறையும் அவர்கள் விழாக் கொண்டாடியதில் வியப்பில்லை.

பழந் தமிழரும் அறுவடைக் காலத்தை விழாக் காலமாகக் கருதி வாழ்த்தினர். பழந் தமிழர் நல்ல அறுவடையைப் போர்க்களத்திலே காணும் பெரு வெற்றிக்குச் சமமாகக் கருதினர் என்பது முத்தொள்ளாயிர வரிகளால் தெரிகிறது :-

காவல் உழவர்
களத்(து) அகத்துப் போர்ஏறி,
நாவலோ ஓ! என்றிசைக்கும்
நாளோதை, காவலன்தன்
கொல்யானை மேலிருந்து
கூற்றிசைத் தாற்போலுமே,—
நல்யானைக் கோக்கிள்ளி
நாடு.

வீரர்கள் செந்நீர் சிந்தும் போர்க்களத்திலே கொட்டும் வீரச் சொற்களும் சோழநாட்டுச் செந்நெல் வயல்களிலே எழும் அறுவடைக்கால வாழ்த்தொலியும் ஒன்ருக மதிக்கப்பட்டன.

பழந் தமிழ் வேந்தருள், சிறப்பாகச் சோழ வேந்தர்கள் கோவில்கள் பல கட்டினர். இது போன்றே தென்அமெரிக்காவில் பெருநாட்டின் செவ்விந்திய அரச பரம்பரையினரான இன்காக்கள் ஞாயிற்றுக் கடவுளுக்கு தங்கத்தால் இழைக்கப்பட்ட பல கோவில்கள் கட்டினர். இன்கா என்ற செவ்விந்திய அரச பரம்பரையினருள் "சோலா' என்ற ஒரு குழுவினர் உண்டு.

இவ்வாறு செவ்விந்தியர்கள் கொண்டாடி வந்த விழாவினைத்தான் வட அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் கடன் வாங்கினர் என்று திரு. டெஸ்மான்ட் என்ற ஒரு அமெரிக்க ஆய்வாளர் கருதுகிருர்.

செவ்விந்தியரிடை பல விழாக்கள் இருந்தபோதிலும் இந்த அறுவடைத் திருநாளை, அது அமைந்திருக்கும் அடிப்படையின் கருத்துயர்வினை எண்ணித் துணிந்துதான் மற்ற விழாக்களை விடுத்து — அதனை மட்டும்—ஐரோப்பியர் ஏற்றுக் கொண்டாடி வருகின்றனர். இத்தகைய விழா தமிழரிடையேயும் செவ் விந்தியரிடையேயும் தான் சிறப்பாகக் காணப்படுவதால் இவ்விரு இனத்தவரிடமும் உள்ள ஒருமைப்பாடுகள் ஆராய்ச்சிக்குரியனவாகும்.

ㅇ ㅇ ㅇ



மெக்சிகோ நாட்டில் காணப்படும் பழைய கோவிற் கோபுரங்கள் சோழர் கோவிற் கோபுர அமைப்பினைப்பிரதிபலிப்பதாக திரு. டானல்லி என்பார் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

ㅇ ㅇ ㅇ

இலங்கைத் தமிழறிஞர்கள் டாக்டர் திரு. சேவியர் தனிநாயக அடிகளாரும் திரு. ந. சி. கந்தையா பிள்ளையவர்களும் இத் துறையிலே பல உண்மைகளைத் தமது நூல்களில் வெளியிட்டுள்ளனர்.

எனவே புதிய உலகத்துப் பொங்கல் விழாவாகிய 'நன்றி தெரிவிக்கும் நாள்' ஆதியில் தமிழரிடமிருந்து சென்றது என்பதில் நமக்குப் பெருமிதப் பொங்கல் ஏற்படுவது இயற்கையே.

★

# கலை வழி

சி. என். அ

**கலைத்துறை** இன்று செழிப்புடன் வளர்ந்து கொண்டு வருகிறது; சிறப்புடன் என்று கூறாமல் செழிப்புடன் என்று கூறுவது, பொருளாழத்துடன் தான். செழிப்பான வளர்ச்சியே, சிறப்பு என்று கொள்ள விரும்புகின்றவர்களை நான் தடுக்கவில்லை!

கலைத்துறையுடன் மக்களுக்கு உள்ள தொடர்பு வளர்ந்த வண்ணம் இருக்கிறது. 'நடை உடை பாவனை'யில் கலையின் 'வண்ணம்' அறிந்தோ அறியாமலோ ஏறி இருந்திடக் காண்கிறேன்.

அழகுக் கலையிலிருந்து அடுக்களைக் கலை வரையில், ஒரு புதுமையும் வளமையும் மின்னிடக் காண்கிறோம். மின்னுவதெல்லாம் பொன்னல்லதான்; ஆனால் மங்கிக் கிடப்பதுதான் மாண்புக்கு அடையாளம் என்றும் தீர்ப்பளித்துவிட முடியாதல்லவா?

கலைத்துறை குறித்து எண்ணுவதும் பேசுவதும், ஆய்ந்தறிவதும் எழுதுவதும், வளர்ந்து வருகிறது. ஏராளமான ஏடுகள்! இதழ்கள்! மலர்கள்! துண்டு வெளியீடுகள்! எல்லா இதழ்களுமே, கலைக்காக ஒரு இடம் அமைத்துக்கொண்டுள்ளன; கலைக்காக என்றே உள்ள இதழ்கள் பல வெளிவருகின்றன. இந்த இதழ்கள், கலை குறித்துஎண்ணிட உதவுகின்றன; மக்கள் கலைபற்றி எண்ணுவதைத் துணைகொண்டு இதழ்கள் பயன் பெறுகின்றன; ஒருநல்ல தொடர்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

கலை, சமுதாயத்தின் நிலையை உயர்த்துகிறது என்பார் உளர்; இல்லை, சமுதாயத்தின் நிலையைக் கலை தாழ்த்தி வருகிறது என்று கூறுவார் உளர்; இருசாரார் கூறுவதினின்றும், நிலையை மாற்றும் வலிமை கலைக்கு இருப்பது புலனாகிறது; அதிலே ஒரு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது; ஏனெனில், கலையின் வலிமை போயே விட்டது என்றும், கலையின் மூலம் காணக் கிடைத்த பலன்களை இன்று காண முடிவதில்லை என்றும் கூறிக் கவலையைக் காட்டுகிறார்களே, சிலர், அவர்தம் உரை உண்மை அல்ல என்பது விளங்குகிறதல்லவா! கலை, வலிவுள்ளதாக இருக்கிறது, பொலிவு வளருகிறது, மக்களிடம் உள்ள தொடர்பு வேகமாகப் பெருகிவருகிறது, செழிப்பாகவும் இருக்கிறது.

வலிவும் பொலிவும், மக்கள் தொடர்பும், செழிப்பும் கொண்டதாகக் 'கலை' இருக்கும்போது, அந்தத் துறையை அலட்சியப்படுத்துவதோ, அதன் 'வளர்ச்சியையும் வகையையும்' இயற்கைக்கு விட்டு விடுவதோ, அதன் மூலம் பெறப்படவேண்டியவைகள் எவை எவை என்பது குறித்துப் பொறுப்புக் காட்டாதிருப்பதோ, நல்லதல்ல.

மலடிக்கு மகவுடன் கொஞ்சத் தெரிகிறதா இல்லையா என்பது பற்றி அதிகக்கவலை கொள்ளத் தேவையில்லை; பெற்ற 'செல்வத்தை'ப் பேணி வளர்த்திடும் ஆற்றல் அன்னைக்கு இருக்கிறதா என்று அறிந்தாகவேண்டுமல்லவா?

கலை, மலடி அல்ல; படக்காட்சி 'பாஷை'யில் கூறுவதானால், கலை, "மக்களைப் பெற்ற மகராசி!" எனவே, கலை மூலம் கிடைப்பது கிடைக்கட்டும், பெறுவோர் பெறட்டும் என்று இருந்துவிடக் கூடாது. மக்களைப் பெறக்கூடிய மகராசி என்று தெரிந்தான பிறகு, சீராட்ட, பாராட்ட, சிறப்புடன் வளர்த்திட வழிவகையுடன் 'மகராசி' இருந்திடத் தக்க ஏற்பாடு இருந்தாக வேண்டுமே.



நல்லதங்காள் கூடத்தான் 'மக்களைப்பெற்ற மகராசி'-ஆனால் பாபம், கிணற்றில் போட்டல்லவா குழந்தைகளைக் கொல்லவேண்டி நேரிட்டது.

அதுபோலத்தான், கலை, பல்வேறு 'பலன்களை' ஈன்றெடுக்கும் வளமுள்ளது என்பது உணரப்பட்டான பிறகு, அதன் போக்குக் கவனிப்பாரற்றதாக, இருந்துவிடச் செய்வது கூடாது, என்கிறேன்.

கலை, வலிவுடையதுதான்; ஆனால் அந்த வலிவு, அழிவு வேலைக்கா? ஆக்க வேலைக்கா?

கலை, பொலிவுடையது; மறுப்பாரில்லை; ஆனால்

அந்தப் பொலிவு, உள்ளத்திலே ஆசாபாசங்களை மூட்டிவிடவா? அல்லது தூய்மையைத் தழைத்திடச் செய்யவா?

கலை, மக்களிடம் நெருங்கிய தொடர்புடையது தான்; ஆனால் அந்தத் தொடர்பு ஆசான், மாணவன் என்ற விதமாகவா? போலீஸ்காரன் குற்றவாளி என்ற வகையிலா? தோழர்கள் என்ற போக்கிலா? தொடர்பு எங்ஙனம் இருத்தல்வேண்டும்?

கலை, செழிப்புடையதுதான், ஆனால் அந்தச் செழிப்பு, மக்களின் வளத்தை—உடல்—உள்ளம்—பொருள்—பண்பு—ஆகிய எல்லா வளங்களையும்—பெருக்கும் விதத்தில் இருத்தல் முறையா? அல்லது, ஈடுபட்டோரைச் செழித்திடச் செய்வதுடன் மட்டும் இருந்திடல் போதுமா?

இன்னோரன்ன கேள்விகள் எழுகின்றன.

எவரும் இதுபோல எழுப்புதல் காணோமே, என்கிறீர்கள்; கலைத் துறையிலே ஈடுபட்டவர்களுக்குள்ளே அடிக்கடி காணப்படும் 'சச்சரவுகள்' கலைத் துறையினருக்கும் மற்றத் துறைகளில் உள்ளோருக்கும் உள்ள வேறுபாட்டுணர்ச்சிகள், இவையாவுமே, மேலே குறிப்பிட்டுள்ள 'கேள்விகள்' உள்ளத்திலே ஊசலாடுவதன் விளைவுதான்; வேறென்ன?

முறைப்படுத்தி, பக்குவப்படுத்தி, விளக்கம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தக் கேள்விகளை அணுகாததால், அணுகுவது கடினமாக இருப்பதால்தான், எளிதான வேறோர் வழியைக் கையாண்டு, கலை உலகிலுள்ளோர் ஏளனம்——ஏச்சு — பழித்தல்—சபித்தல் — என்பன போன்ற கணைகளை ஒருவர்மீதொருவர் ஏவிக்கொள்கின்றனர்.

சச்சரவுகளாகிவிடுகின்றன, இயற்கையாக எழுந்துள்ள பிரச்சினைகள்.

கலைத்துறையினர் எவரும் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடியாது; இந்தப் பிரச்சினைகளுக்குப் 'பரிகாரம்' ஒருவருக்கொருவர், 'வசை' வழங்கிக்கொள்வதுமல்ல.

கலை, வலிவும் பொலிவும்கொண்டது; மக்களிடம் அதற்கு உள்ள தொடர்பு வளர்ந்தவண்ணம் இருக்கிறது; அதன் செழிப்பும் பளிச்சிடுகிறது. உண்மை! இந்த 'வாய்ப்பு' எவ்வழி செல்லல்வேண்டும்?

ஈதென்ன கேள்வி? எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி செல்லவேண்டும்—என்று பதிலளிப்பீர்கள்; பதிலளிக்கிறீர்கள்; எளிதாகவும் நம்பிக்கையுடனும் பதிலளிக்கிறீர்கள்; பதிலிலே பாகு கலந்தும் அளிப்பவர்களைக் காண்கிறேன், நாராசத்தைக் கலப்பவர்களையும் பார்க்க நேரிடுகிறது.

இவ்வளவு எளிதான ஒரு பதில் இருக்கும்போது, கேள்வியில் ஏதோ கடினம் இருப்பதுபோல ஏன் காட்டிக்கொள்கிறீர்? என்று என்னைக் கேட்க எண்ணுவீர்கள். தொடுக்கும் கேள்வியில் அல்ல; கிடைத்திடும் பதிலில்தான், நான் கடினம் ஊடுருவி இருந்திடக் காண்கிறேன்.

எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி என்கிறீர்கள். மெத்த மகிழ்ச்சி.

நல்வழி, எது?

நல்வழி கூற வல்லார் எவர்?

நல்வழி என்பது, நம் காலத்துக்கு மட்டும் பொருந்துவதா, என்றென்றும் நிலைத்து நிற்பதா?

நல்வழி இஃது என்று கூறுபவர், கூறிடத் தகுதி படைத்தோர்தான் என்று ஏற்றுக் கொள்வது எங்ஙனம்?

இவைகள், நீங்களும் நானும், எண்ணி எண்ணிப் பார்த்துப் பதில் தேடித் தீரவேண்டிய கேள்விகளிலே சில.

"மலேரியா காய்ச்சல் இது; கொயினா தந்திருக்கிறேன்"—

என்று மருத்துவர் கூறும்போது, இவருக்கு எப்படி இது தெரிந்தது? இவர் கூறுவதை நாம் எங்ஙனம் சரியானது என்று ஏற்றுக்கொள்வது? என்று எவரும் ஐயப்பாட்டுக்கு ஆளாவதில்லை; 'ஆம்' என்கின்றனர். பணமும் தருகின்றனர்.

அஃதேபோல, குறிப்பிட்ட சிறப்பறிவுத் துறைகளிலே ஈடுபட்டிருப்பவர்களின் 'கருத்துகள்' மற்றவர்களால், ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; மறுப்பார், ஐயுறுவார், வழக்காடுவார் அதிகம் இரார்.

ஆனால் எது நல்வழி? என்பதற்கு, இன்னின்னவர் பதிலளிக்கும் தகுதி பெற்றார், பிறர், கேட்டு இசைவு அளிக்கும் கடமையுடையார், என்று அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது, கூடாது; தேவையுமில்லை.



எனவேதான், எது நல்வழி என்பதற்கு, அளிக்கப்படும் பதில், வழக்கை முடிவுபெறச் செய்வதாக இல்லை, புது வழக்குகளுக்கு வழி செய்கிறது.

இதற்கு முடிவுதான் என்ன?

உண்டு! நல்வழி, எது என்பதைப் பிறர் கூறக் கேட்டு, எண்ணிப் பாராமல் ஏற்றுக்கொள்வதோ, அல்லது மறுத்துப் பேசி மாச்சரியங்களை மலியச் செய்வதோ, உண்மையான பலனைத் தராது.

வெற்றி, பெற்றவர்களையே வீழ்த்திவிடுவதுண்டு, வாதியே பிரதி வாதியாகிவிடும் விசித்திரமும் எழக்கூடும்.

எனவே, 'நல்வழி' என்பதற்குப் பொருள், பிறர் கூறுவதைக் கொண்டும், நாமே எண்ணிப் பார்ப்பதைக் கொண்டும் மட்டுமல்லாமல், நாம் எங்கு செல்ல விரும்புகிறோம்? நமது சமுதாயம் எங்கு செல்ல வேண்டுமென்று நமக்கு உறுதியாகத் தோன்றுகிறது? என்பது பற்றி ஒரு 'முடிவு கண்டு' பிறகு, அந்த இடம் செல்ல, எவ்வழி சிறந்ததோ அது நல்வழி என்று கொள்ள வேண்டும்.

இதிலே இன்னல் அதிகம்; ஆனால் இந்த முறையில் தேர்ச்சி ஏற்பட்டால், இனிமையும் கிடைக்கும்.

இனி, எங்கு செல்ல வேண்டும்? என்பதைத் தகுந்த முறையிலே காண வேண்டுமானால், இன்று எங்கு இருக்கிறோம் என்பதனை அறிந்தாகவேண்டும்; இன்றுள்ள கேடுபாடுகள் யாவை என்பதையும் தெரிந்துகொண்டாக வேண்டும்.

வெயிலில் இருந்தவனுக்கல்லவா, நிழலின் அருமை தெரியும்?

இன்று, நாமும், சமுதாயமும் 'எங்கு' இருந்து வருகிறோம்?

ஜாதியும் அதனாலாய பேதங்களும், மூடநம்பிக்கைகளும் அவைகளால் மூண்டு விடும் நாசங்களும், பொருளாதார பேதங்களும், அவைகளால் கொதித்து எழும் குரோதங்களும், ஆட்சி முறை அலங்கோலங்களும், அவைகளால் ஆர்த்தெழும் ஆவேச உணர்ச்சிகளும், அருவருக்கத்தக்க நடவடிக்கைகளும் — தன்னம்பிக்கையற்ற தன்மையும், பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கும், சலிப்பும் —குழம்பிக்கிடக்கும் இடத்திலே இருக்கிறோம்.

சேற்றிலுள்ள செந்தாமரையைக் காட்டினால், மலருக்குப் பெருமையே தவிர, சேறு சிறப்படைந்து விடாது. அதேபோல, இவ்வளவு இழி தன்மைகளுக்குமிடையிலே, காணப்படும் கருத்துத் தெளிவுள்ளோரை, அவர் தம் பேச்சினைக் காட்டிவிடுவது, சமுதாயம் சிறந்த நிலையில் உள்ளது என்று காட்டுவதாகாது.

இந்த 'இழி தன்மைகளை' நீக்கிக்கொண்டு, இவை ஒழிந்த, பண்புகள் நிறைந்த ஓர் 'நல்லிடம்' செல்ல வேண்டும்.

அதற்கான வழிதான், நல்வழி!

காசிக்குச் செல்ல எண்ணிக்கொண்டு, காஞ்சிபுரம், பஸ்ஸில் ஏறிப் பயன் என்ன?

பம்பாய் போகும் வண்டி பளபளப்பாக இருக்கிறது என்பதால், அதிலே ஏறிக்கொண்டு, பாபநாசம் எங்ஙனம் போய்ச் சேர முடியும்?

அதுபோலத்தான், செல்லும் இடம் எது என்று ஏற்படுத்திக்கொள்ளுகிறோமோ, அந்த இடத்துக்குக் கொண்டு செல்லும் பாதை, எதுவோ, அதுதானே நம்மைப் பொறுத்தவரையில் நல்ல பாதை!

இந்த முறையிலே, ஒரு 'பக்குவம்' ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; பிறகு பாதையும் புரியும்; பயணமும் எளிது.

ஏடெடுத்துப் படித்திடும் போதும், பாடலைக் கேட்டு இன்புறும் வேளையிலும், ஆடலைக் கண்டு அகமகிழும்போதும், படக்காட்சி கண்டு பரவசப்படும் வேளையிலும், ஓவியத்தைக் கண்டு உள்ளத்தில் கிளர்ச்சி எழும்போதும், பேச்சுக் கேட்டுப் பேரின்பம் பெறும்போதும், அழகு கண்டு ஆனந்தமடையும் போதும், இந்த 'ஒரு நோக்கம்' அளவு கோலாகவும், துலாக் கோலாகவும், உரை கல்லாகவும், இருந்திட வேண்டும்; இந்தக் கலை நிகழ்ச்சிகளை ஆக்கித் தருவோருக்கும், இது முழுதும் தேவை.

இந்த வகையிலே 'கலை' கவனிக்கப்பட்டால், அதன் மூலம் செழிப்புக் கிடைக்கும்; அந்தத் துறையும் செழிப்புடன் இருந்திடுவது மட்டுமல்லாமல், சிறப்புடன் திகழும்.

*

> அழுக்கான உடைகளிலோ, ஆடம்பரங்களிலோ, திருநீற்றிலோ, தலை மொட்டை அடித்துக்கொள்வதிலோ, கொம்பு, தப்பட்டை முழங்குவதிலோ பக்தி இல்லை. —குரு நானக்



# அவனே அவள்!

Aykan

**மாலை!**

பகலவன் தன் வேலையை முடிக்கின்ற நேரம்! அணையப்போகும் விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசிப்பது போல் அந்திவானம் அழகுடன் காட்சி அளித்தது. இசையுடன் ஓசை கிளப்பியது ஆற்றில் ஓடும் நீர். ஆற்றில் உள்ள மீன்கள் நீர் மட்டத்திற்கு வந்து அந்திவான அழகை இரசித்துக்கொண்டிருந்தன! உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கும், வந்திருந்த மீன்களைப் பார்க்காமல் அந்திவான அழகை இரசித்துக்கொண்டிருந்த நேரம்!

ஆற்றில் நீராடிவிட்டு, அவிழ்ந்த அளகாபாரம் முதுகில் புரள, பச்சைப் புல் பாதத்தைக் குத்தும் மெய்வருத்தம் பாராமல் பூ தொடுத்துக்கொண்டிருந்தாள், அந்நாட்டு இளவரசி பூங்கொடி. தேனை உண்டு கொண்டிருந்த வண்டுகள், மலரை விடுத்து, அவள் கூந்தலில் உள்ள மணத்தை முகர்ந்து கூந்தலைச் சுற்றிவந்து, இன்பகீதம் பாடி, வண்டுமனம் என்று உலகத்தார் சொல்வது உண்மை, உண்மை எனப் பறைசாற்றின. ஓசைகேட்டு நிமிர்ந்து பார்த்த பூங்கொடி கண்டது, கட்டழகன் ஒருவனை.

அ. பரிமளம்

தலைவன் தன்னைநோக்குவதைக் கண்ட தலைவி, தன் தலையைத் தாழ்த்தி நிலம் நோக்கினள் எனும் வள்ளுவர் வாய்மொழி அங்கு செய்கையானது. அவனும் பேசவில்லை, அவளும் பேசவில்லை. தவறு, தவறு! அவர்களால் பேசமுடியவில்லை.

அந்தக் காளையும் சென்றுவிட்டான். அவளுக்கோ கன்னிப்பருவம். கண்டதோ கட்டழகனை. அவள் மனதில்......?

கன்னியின் மனத்தில் பதிந்த அந்தக் காளையின் உருவத்தைப் படமாக எழுதிவிட்டாள் அந்தக் கலை அரசி.

தோழி! எனக் கூப்பிட்டாள்; கனிமரச் சோலை அதிரவில்லை; ஆனால் அந்தச் சொல், சோலை முழுவதும் எதிரொலித்தது. அந்திவானத்து அழகு மறைந்து இருள்சூழ ஆரம்பித்ததும், இன்ப மயக்கத்தில் இருந்த மீன்களும், கொக்கும் இவள் குரல்கேட்டு விழிப்புற்றன.

நிலவு வானில் எழும்பியது. பூங்கொடி தலை நிமிர்ந்து பார்த்தாள். நிலவுப் பெண் "நானல்ல உன் தோழி! அதோ வருகிறாள் அமிர்தம்" எனச் சொல்லாமல் சொல்லிற்று.

"அழைத்தீர்களா இளவரசி"

"இல்லையடி!...... பறந்துவரச் சொன்னேன்".

"என்ன அவ்வளவு அவசரம்" எனக் கேட்டுக் கொண்டே பூங்கொடியின் பட்டுக் கைகளுக்குள் சிறைபட்டிருக்கும் அந்தச் சிங்காரனின் உருவப் படத்தைப் பார்த்தாள்.

"யாரம்மா இவர்"

"அதைக் கேட்கத்தான் உன்னை அழைத்தேன்"

"நீங்கள்தான் இதயச் சிறையில் பூட்டிவிட்டீர்களே"

"அமிர்தம், அவரின் உள்ளம் மட்டும்தான் என் இதயச் சிறையில் இருக்கிறது. அறிந்து வாடி இவர் யாரென்று?"

"தோழிகளின் வேலையே இதுதானம்மா"

இருவரும் சிரித்தனர்.

○ ○ ○

நிலவுப் பெண் இதுவரை ஐந்து, ஆறுமுறை வான வீதிக்கு வந்து நடைபோட்டுப் போய்விட்டாள். பூங்கொடி பஞ்சணையில் அனலிட்ட புழுப்போல் நெளிந்து கொண்டிருந்தாள், மருத்துவர்கள் வந்து போன படி இருந்தனர். மருத்துவம் பார்க்கப்பட்டது. மருந்து கொடுக்கப்பட்டது. நோய் தீரவில்லை!! அடுத்து வந்த ஒரு முதிர்ந்த மருத்துவர் தன் அனுபவத்தினால் இது மனநோய் எனக் கூறிச் சென்றுவிட்டார். அரசனும் அரசியும் துடித்தனர் மனநோய் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள!

○ ○ ○

"அமிர்தம்"

"அரசே!'

"பூங்கொடியின் மனநோய்க்குள்ள காரணத்தை நீ அறிந்திருக்கலாம் என நம்புகிறேன்."

"மன்னா, இளவரசி, நந்த வனத்தில் ஒரு கட்டழகனைக் கண்டார்கள். ஆகையால் இது காதல் நோய் என்கிறேன் நான்" என்று சொல்லிவிட்டாள் அந்தக் காதல் மருத்துவச்சி.

"யார் என்று நாம் கண்டோம், அமிர்தம்?"

"அரசே அவரின் உருவப்படத்தை நான் பார்த்திருக்கிறேன். இன்னும் சில நாட்களில், அவரைப் பற்றி விசாரித்துச் சொல்லுகிறேன்."

மன்னன் மனதிற்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டது.

○ ○ ○

அமிர்தம், தன் அடுத்த வீட்டுத் தோழி சுந்தரியைக் காண அவள் வீட்டின் உள்ளே சென்றாள். சுந்தரி அங்கு இல்லை. ஆனால்...? அந்த உருவப்படம்! மன்னன் மகளின் மனக்கலக்கத்திற்குக் காரணமான படம் அங்கு மாட்டப்பட்டிருந்தது.

தோழி திகைத்தாள். ஆம், அமிர்தம் திகைத்து நின்றாள். சுந்தரியின் தாயார் அங்கு வந்தார்கள்.

"அம்மா இந்தப்படத்தில் இருப்பவர் யாரம்மா? நம் சுந்தரியின் முகச்சாயல் இருக்கிறதே! அவளின் அண்ணனா தம்பியா?

"ஏம்மா, அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" சுந்தரியின் தாயார் பேச்சில் கேலி கலந்திருந்தது.

"போங்கம்மா......இல்லை, அவர்......"

"அமிர்தம் நீயும் ஏமாந்துவிட்டாயே. இது சுந்தரிக்கு ஆண்வேடம் போட்டு எழுதப்பட்ட படம்."

அமிர்தத்திற்கு வியப்பு மேலிட்டது.

அந்தப் பட்டு மேனியாள் சிட்டெனப் பறந்தாள், பட்டத்து அரசனிடம்—செய்தியைச் சொல்ல.

அரசனுக்கும் வியப்புத் தாங்க முடியவில்லை செய்தி அறிந்ததும்.

அமிர்தாவின் காதில், ஏதோ விடயத்தைச் சொல்லி அனுப்பிவிட்டான் மன்னர் மன்னன்.

அமிர்தம் ஓடிவிட்டாள்.

மன்னன் மனத்திற்குள் சிரித்தான்

காதலின் விசித்திரத்தைக்கண்டு!!

அன்று மாலை, அரசன் பூங்கொடியை அழைத்துக்கொண்டு, மலர்த் தோட்டத்தை அடைந்தான். மன்னன், மகளைத் தனியே விடுத்துச் சென்றுவிட்டான்.

அவளின் வாடிய முகத்தைக் கண்ட இயற்கையும் அவளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் அவளுடைய துன்பத்தில் பங்குகொண்டு வாடியது. சோலையின்கண் உள்ள மலர்கள் மணம் பரப்ப மறந்து அவளின் துன்பத்தை நினைந்து வருந்தின; நம்மைப்போன்ற மலர் மேனியாள் என்ற காரணத்தாலோ என்னவோ வண்டுகள் இவளைச் சுற்றிக் கொண்டு இசைபாடின. உன்னால் துன்பமடைந்த எங்கள் காதலியர், எங்களை, மனம் மகிழ்ந்து அழைக்கவில்லை. இதற்குக் காரணம் நீதான் எனக் குற்றப்பத்திரிக்கை படிப்பதுபோல்இருந்தது அவைகளின் ரீங்காரம். பூங்கொடியின் மென்மையான தோள்களின்மேல் யாருடைய கையோ படுவதை அறிந்த பூங்கொடி துள்ளி எழுந்தாள். எதிரே! அவளின் இன்பம்—எதிர்கால மணாளன் தன்கைகளை நீட்டி அவளை அழைத்தான். காந்தத்தால் கவரப்பட்ட இரும்புபோல், அவள் ஓடி அவனை அணைத்துக்கொண்டாள். தந்தையின் சிரிப்பொலி கேட்டு, காதலனின் அணைப்பில் இருந்து விடுபட்டுச் சற்றுத் தள்ளி நின்றுகொண்டாள். 'அப்பா இவர்தான்' என்று அவள் 'முடிப்பதற்குள், மன்னன் குறுக்கிட்டுப் பேசினான். "பூங்கொடி உன் காதலனின் தலைப்பாகையை கையில் எடம்மா!"

பூங்கொடி தலைப்பாகையைக் கையில் எடுத்தாள். திகைத்தாள்!!

அவள் காதலித்தது ஒரு பெண்ணை என்பது தெரிந்ததும், வெட்கித் தலைகுனிந்து நடந்து சென்றாள்.

சுந்தரி தன்னுடைய விசித்திர அனுபவத்தைக் கண்டு பயந்து நடந்து சென்றாள்.

அரசனும், அமிர்தமும் சிரித்தனர்,

இந்தக் காதலைப் பார்த்து!!

★  ★




# வேலையில்லாத் திண்டாட்டம்

"கவிஞர் வாணிதாசன்"

**வா**னில் செம்மை வளர்ந்து மலிந்து
கானாறு போலக் காட்சி யளித்தது!
செம்மேட்டு வெள்ளத் தேக்கம் போலவும்,
அம்மேட்டு மருங்கு வயல்வெளி போலவும்,
செங்கடல் திசையெலாம் சீறிப் பாய்ந்து
பொங்கி மோதும் புதுமை போலவும்,
சிந்திய சுடரொளி சிரிப்பால் அழைக்கும்
அந்தி வான அழகு முகில்கள்
புந்தியை மயக்கின; புதுப்புது ஓவியம்
தந்து மறையும் செந்தீத் தொடுவான்
இடையில் மலையின் இடையில் பரிதி
உடைந்த தட்டென ஒளிமங் கியதே!

கடற்கரை யோரம் காற்றாட வந்த
நடைபயில் நிலவுகள் நகரக் கன்னியர்
இடையில் இடையில் எழிலோ டிறுக்கிய
உடையில் உடலில் ஒளிசேர் விழியில்
கடற்கரை மணலில் கரைதவழ் அலையில்
படரும் இருளொடு படரும் செம்மை,
செக்கர் சிந்திய செவ்வொளிச் சிறுசுடர்
இக்கரை காட்டும் எழில்மது மாந்தி
இருந்தான் 'இளைஞன்'; மனம்எங்கோ இருந்தது.
பெருவெளி வானப் பிறையும் மீனும்
பூந்தாழை மடலும் பித்தளைப் பொடியுமாம்!
சிந்துவா ரற்றுக் கிடப்பதைப் போலக்
கிடந்தான்; சோர்ந்து கிடந்தான் இளைஞன்.

○

படர்ந்தோடி ஆடும் பைங்கிளிச் சிறாரும்
பின்னல் அசையப் பேசிச் சிரிக்கும்
கன்னல் மொழியார் கடைக்கண் தேனும்
எங்கோ அலறும் வானொலி இசையும்
பொங்கு கடலின் புதுத்தமிழ்ப் பாட்டும்
வெறுப்பே தந்தன. விரிவான் பரப்புக்
கறுத்தது; மெல்லக் காரிருள் படர்ந்ததே.

எழுந்தான்; நடந்தான்; ஏதேதோ எண்ணினான்
தொழுநோய்ப் பசியின் தொல்லை தாங்காது
காற்றாடு வோர்முன் கையை நீட்ட
ஆற்றனாகி அமர்ந்தான் ஓர்பால்.
வறுமையா தெரியும் வயிற்றுப் பசிக்கு?
பொறுமையாய் இருவெனப் புகன்றால் கேட்குமா?
ஒருநா ளல்ல இருநாள் பட்டினி;
பொருளும் இல்லை; புகலிடம் இல்லை;
ஏங்கித் தவித்தான்; எதிர்ப்படு வோர்முன்
தாங்காப் பசியின் தகைமை கூறினான்.
பரிகசச் சிரிப்பே பரிசாய்க் கிடைத்ததே.

எரியும் வயிற்றை இறுக்கவா முடியும்?
நின்றான்; ஏங்கினான்; நீள்மூச் செறிந்தான்.
சென்று திருடெனச் செப்பிய துள்ளம்
நன்றல இச்செயல் என்றது நுழைபுலம்
நின்றான்; பசியே வென்றது. தொலைவில்
வருவான் ஒருவனின் வழியினைப் பார்த்து
தெருவின் முடக்கில் இருளில் மறைந்து
சுண்டெலி தொடரும் பூனையைப் போல
ஒண்டி இருந்தான் ஒதுக்கிடம் பார்த்தே.

"திருடன்! திருடன்!" சுவர்எதிர் ஒலிக்க,
அருகில் வாழ்நகர் அங்குள மக்கள்
ஒருவ ரேனும் உடன்வர வில்லை.
தெருவில் நிகழும் சிறுசண் டைக்கே
வருவதும் பார்ப்பதும் வாடிக்கை இல்லை;
பட்டின வீரப் பண்புஇப் பண்பாம்!

○

பட்டினம் பார்க்க 'வந்தவன்' திருடனை
எட்டிப் பிடித்தே இரண்டறை கொடுத்தே
கையும் களவுமாய்க் காரிருள் இல்லா
மைய்ய விளக்கின் மருங்கில் வந்தான்.

இருவரும் விளக்கில் ஒருவரை ஒருவர்
அருகில் பார்த்தனர்: "அப்பா சாமியா"?
என்றுன் வந்தவன் இருவரும் திகைத்தனர்.

"பொன்னு என்னை மன்னித்து விடடா;
என்நிலை வறுமை என்செய்கோ நான்?
ஒன்றிய நட்போ(டு) உயர்நிலைப் பள்ளியில்
படித்து முடித்தோம்; பட்டமும் பெற்றும்;
நடுத்தரக் குடும்ப நலிவைப் போக்க
அலைந்தேன் பட்டினம் முழுமையும் அலைந்தேன்;
தொலைந்தது கைப்பொருள் தோழா" என்றே
நடந்ததை அப்பா சாமி நவின்றான்.
அடங்காப் பசிவந் தவர்களை அலைக்கச்
சென்றனர் இருவரும் சிற்றுண் டருந்த
"இன்றைய செயலொன் றென்றிட மில்லை;
நாளைக் கெதுவோ? நான்சொல மாட்டேன்;
தோளை, நம்பிடும் தொழில்பல கற்றும்
வாழும் நிலையோ வருத்துள தரசியல்?
சூழும் பஞ்சம் தொலைவ—தெந்நாளோ?
வாழ்க்கை உயர வழிசெயாப் படிப்புப்
பாழா கட்டும்; படித்தது போதும்"
என்று நொந்தே இரவெலாம் பேசிச்
சென்றனர் இருவரும் வெவ்வேறு திசையில்.

O

கப்பிய குளிரில் கந்தையு மின்றி
அப்பா சாமி அலைந்து திரிந்து
வேலை தேடி வெறுங்கை யாகிச்
சோலை இடையில் தோன்றும் மிருகச்
சாலை வந்து தன்னிலை கூறினன்.
காலையில் செத்த, சாலைக் குரங்கின்
கவலையில் இருந்த காட்சிச் சாலையோர்
கவலை போக்கும் வழியினைக் கண்டார்!!

"எந்தத் தொழிலும் இழிதொழில் அல்ல!
இந்தக் குரங்கின் தோலை ஏற்று
சிந்தை களிக்கச் செய்வாய் ஆனுல்
வந்தது புதிய குரங்கென மகிழ்வோம்,—
கூலியும் கூடுதல்; கூறு"எனக் கேட்டார்.
வேலை இலாதான் வேறென்ன செய்வான்?
குரைத்துப் பெற்ற செல்வம் குறைக்குமா?
உரைத்தான் இணக்கம் உயிர்வாழ லானுன்.

O

மிருகக் காட்சிச் சாலையில் கூட்டம்
பெருகி இருந்தது; பேரூர் வாழ்நர்
பந்தி பந்தியாய் வந்து குவிந்தனர்.
தொந்தி பருத்த மந்திக் குரங்கின்
கூண்டிற் கருகில் கூண்டொன் றிருந்தது.
நீண்ட வெளியில் கம்பிகள் நிறுத்தி
வேண்டும் போழ்து விளையாட் டயர
ஆண்டு சமைத்த அழகிய கூண்டுள்
ஒருபுறம் புலியொன் றுலவித் திரியும்;
ஒருபுறம் மனிதக் குரங்கொன் றிருக்கும்.

குரங்கைப் பற்றிக் கூறுவர் இல்லை;
வருவோர்க் கெல்லாம் வணக்கம் செய்யும்;
வாழைப் பழமும் வட்ட முறுக்கும்
கூழைவால் குரங்கு கொடுஎனக் கேட்கும்,
ஓடும்; ஆடும்; உயர்மரம் ஏறிக்
கூடினுர் களிக்கக் குப்புற வீழும்.

ஒருநாள் குரங்கின் ஒப்பிலா ஆடலை
வருவோர் கண்டே வாழ்த்துரை நல்கினர்;
பழம்பல தந்தனர்; பண்ணியம் தந்தனர்;
அழகிய குரங்கின் ஆடலை வியந்தனர்.
மீண்டும் ஏறித் தாண்டிக் குதிக்கையில்
கூண்டில் வாழும் கொல்புலி அருகில்
வீரிட் டலறி விழுந்தது குரங்கும்.
கூர்நகப் புலியும் கொல்லப் பாய்ந்து
குப்புறக் கிடக்கும் குரங்கின் காதில்
"அப்பா சாமி! அஞ்சேல்!" என்று
புலித்தோல் போர்த்த பொன்னன் உரைத்தான்.
ஒலித்தது சிரிப்பொலி ஒலித்த நீடே!!






இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு மேற்கு திசையில், சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன், நடந்ததாகப் பேசப்பட்டு வரும் ஒரு காதல் கதையின் சாரம் இது, சுருக்கித் தரப்பட்டிருக்கிறது.

**ஊரின்** நடுவிலே உள்ள சாவடிப் பொட்டலில் பாவைக் கூத்து நடந்துகொண்டிருந்தது. தெற்குச் சீமையில் பேரும் புகழும் பெற்று விளங்கிய அந்த வேடிக்கையைப் பார்க்க, கிராமத்து மக்கள் அனைவருமே மைதானத்திற்கு வந்திருந்தார்கள். வெளியிலே வரக்கூடாத பருவமடைந்த பெண்கள்கூடத் தலையிலே முக்காடிட்டுக் கொண்டு கூத்தை இரசித்தார்கள். நடந்தது சந்திரமதி கதை. எங்கேயுமே சந்திரமதி நாடகத்திற்கு ஆண்கள் அதிகம் வருவதில்லை. பெண்கள்தான் முட்டி அடித்துக் கொண்டு மாலையிலேயே கொட்டகைக்கு முன்னால் பாயை விரித்து வைப்பார்கள்—இடம் பிடித்துக் கொள்வதற்காக! அன்றைய தினம் திருப்பாச்சேத்திக் கிராமத்திலேயும் பெண்கள்தான் அதிகம் வந்திருந்தார்கள்.

○

தமிழர் நெஞ்சு இரக்கமுள்ளது. எந்த அளவு காதலை மதிக்கிறதோ, அந்த அளவுக்கு சோகத்தைக் கண்டு கண் கலங்கி நிற்கிறது. சந்திரமதியை, யார், எந்த நாட்டுக்காரி என்று அவர்கள் பார்ப்பதில்லை. அவளுக்குத் துயர் என்றால் தங்கள் வீட்டில் தீப்பற்றிக்கொண்டதாகவே தமிழ்ப் பெண்கள் நினைக்கிறார்கள்; அழுகிறார்கள்.

வேந்தன் மனைவியாக வாய்த்த சந்திரமதி, வேற்றாள் ஒருவனிடம் அடிமையாகி வேலைக்காரியாக வந்து வீடு கூட்டும் கட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மைதானத்தின் பெருமூச்சு மேக மண்டலத்தைக் கலைக்கிறது. அப்போது கூட்டத்தின் நடுவே இருந்து ஒரு வாலிபன்—இரும்புக் குண்டைப்போல் உடற்கட்டுடையவன் எழுந்து நடந்துகொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து ஒரு பெண் நடந்தாள். அவளுக்கு அவன் வயதுதானிருக்கும். இருவருக்கும் நல்ல பொருத்தம், அவர்களின் தோற்றம் அகநானூற்றுக் காதலர்களையே நினைவூட்டியது. ஆடை அணிகலன்கள் அதிகமில்லை. கழுத்தில் கருமணி மாலை. அதில் ஒரு பொன்வில்லை. காதுகளில் பூடி—அது ஒருவித அணி. கைகளில் ஒற்றைக் காப்பு. வாரிக் கலைத்த தலை. மல்லிகைப் பூ சொருகியிருந்தாள்.

அவன் சாய வேட்டிகட்டி இருந்தான். இடது கையில் பவளவேர்க்காப்பு அணிந்திருந்தான். இடுப்பில் ஒரு பிச்சுவா கத்தி, தொங்கியது. தலையில் எண்ணெய் சத்து இருந்தது; ஆனால் வாரிவிடப்படவில்லை. அவனுக்கு அந்தச் சிகை அலங்காரத்தில் பற்று இருப்பதாகவே தெரியவில்லை, உழுந்துக்கு எண்ணெய் தடவி வெயிலிலே உலரவைத்தால் எப்படி மின்னுமோ அப்படி மின்னியது அவன் மேனி, அவரைக்காய் அளவு படர்ந்த — அழகிய கருமீசை அவனுடைய கம்பீரத்தைப் பறை சாற்றியது.

○

சந்திரமதியின் துக்கத்தில் பங்கு கொண்டு கேட்டுக் கொண்டிருந்த பொது மக்களின் கவனம், இவர்கள் பக்கம் திரும்பியது, எல்லோரும் இவர்கள் இருவரைப்பற்றியே ஒருகண நேரம் பேசினார்கள்.

அவளுக்கு வெட்கம்—வாயை மூடிக்கொண்டாள். அவளுடைய நடையுடை பாவனையெல்லாம் அந்த வாலிபன் எது சொன்னாலும் கேட்கும் தோரணையில் இருந்தது.

அவர்கள், கூட்டத்தைத் தாண்டினார்கள். ஊரைத் தாண்டினார்கள். அடுத்து கண்மாய்க் கரை! வீடு அந்தப்பக்கம்தானிருந்தது! அவன் வேகமாக நடந்தான். அவள் ஓடினாள். அவனைத் தொடர்ந்து அவளால் நடக்க முடியுமா?

கரையிலே நின்றுகொண்டு கிராமத்தைப் பார்த்தான். லோகிதாசனுக்குப் பாம்பு கடிக்கும் கட்டம் நடந்துகொண்டிருந்தது—கூத்தில்!

"அத்தான் இன்னிக்கி இருட்டு அதிகம்! பாதையே தெரியல்லையே!"

"ஆமாம், இருட்டு அதிகம்தான். பழகிப்போன எனக்கே பாதை மட்டுப்படவில்லை!"

"பாத்துப் போங்க! நாளைக்கி வேலை ரொம்ப இருக்குது! படுத்துக்கிட்டா, அவ்வளவுதான்! கழுத்துக்குள்ளே சிரிக்கிறவங்க கைதட்டிச் சிரிப்பாங்க!"

"நீ ஒன்னு! முத்தாயி, ஒன்னையே நெனைச்சேன்; நீ கெடைச்சுட்டே! இனி நான் செத்தா என்ன!"

"அத்தான்!"—என்று கதறினாள் முத்தாயி.

வேலியோரத்தில் பதுங்கியிருந்த இருவர் திடீரென்று வாலிபன்மீது பாய்ந்து தாக்கினார்கள்.

மையிருட்டு! யார், யாரை அடிக்கிறார்கள் என்று அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

"டேய் செந்தட்டி! நீயும் ஒரு ஆம்பிளைதானா? ஈரல் செத்தவனே! ஒழிஞ்சிருந்தா வெட்டுறாய்? ஒத்தைக்கு ஒத்தை வந்து பாருடா? அப்போ தெரியும்!" என்று அந்த வாலிபன் சத்தம் போட்டுக்கொண்டே சண்டை போட்டான். கல்லை உடைப்பதுபோல் மூவரும் பல்லைக் கடித்துக்கொண்டு யுத்தம் புரிந்தார்கள். ஆனால் அந்தச் சண்டை அவ்வளவு விரைவில் முடிந்து விடுமென்று அவள் நினைக்கவில்லை. தாக்கியவர்கள் இருவரும் ஓடிவிட்டார்கள். வாலிபன் மட்டும் கீழே கிடந்தான். முத்தாயி ஓடிப்போய் அவனைக் கட்டிப் பிடித்தாள். அவள் உடம்பெல்லாம் ஈரப் பசை தட்டுப்பட்டது.

'ஐயோ! இரத்தம்!'—என்று புலம்பினாள். முகத்தைப் பார்ப்பதற்கு அவன் உடலைப் புரட்டினாள். உடலைத்தான் அவளால் புரட்ட முடிந்தது. முகத்தைப் பார்க்க முடியவில்லை—ஆமாம், தலையையே காணோம். அவன் பிணமாகக் கிடந்தான்.

## 2

**திருப்பாச்சேத்தி** என்பது சிற்றூர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைக்கு அருகாமையில் இருக்கிறது. வாள் வீச்சுக்காரர்கள், சிலம்பாட்டக்காரர்கள் நிறைந்த வட்டாரம் அது. அந்தப் பகுதியிலேதான் இன்றும் பண்டைத் தமிழகத்தின் வாடையைக் காணலாம். ஆடவர்கள் கொண்டை போட்டிருப்பார்கள். வைதிகக் கொண்டையல்ல! அன்றையத் தமிழர் வைத்திருந்த வீரமுடி! மீசையில்லாத ஆடவரைப் பார்க்கமுடியாது. எல்லோருமே கொத்து மீசைக்காரர்கள்தான். பாளையக்காரர் காலத்திய வாட்ட சாட்டமான உருவங்களைப்போல் இருப்பார்கள். இன்றைக்கும் அப்படித்தான்!

செந்தட்டிக் காளை என்பவன் செல்வாக்குப் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் நான்கைந்து வெற்றிலைக் கொடிக்கால்களுக்குச் சொந்தக்காரனாக இருந்தான். அதை வைத்து, பல குடும்பங்களுக்கு அவன் வேலை கொடுத்துக்கொண்டிருந்தான். இத்தனைக்கும் அவன் இருபத்தைந்து வயது இளைஞன்தான். திருமணம்கூட ஆகவில்லை.

> அறிவாளி ஒரு மனிதனை, நீ எந்த இனத்தான், எந்த ஜாதியான் என்று கேட்க மாட்டார். நீ செய்திருப்பது என்ன என்றே கேட்பார்.

முத்தாயி அவன் தங்கை. ஒரே தங்கை, அடுப்புக் கரியைக் காட்டிலும் அவள் கருப்பு. ஆனால் கடைந்தெடுத்த உடற்கட்டு. எல்லோரும் அவளை நினைத்தார்கள். அவர்களில் சிலர் அவளைப்பற்றிப் பேசித் தீர்த்துக்கொண்டார்கள். ஆனால் யாரும் அவளை நெருங்கவில்லை. பாதிப் பேர், அவள் எரிந்து விழுவாளே, ஏசித் தீர்ப்பாளே என்பதற்காக அஞ்சினார்கள். மிகுதிப் பேர் அவள் அண்ணன் செந்தட்டிக் காளைக்குப் பயந்தார்கள். சேம்பர்லினும் குடையும்போல், சர்ச்சிலும் சுருட்டும்போல் எந்த நேரமும் வெட்டு அரிவாளை அல்லவா அவன் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தான்!

○

பணக்காரன் குரலில் அர்த்தமில்லாத அதிகாரம் தொனிக்கிறது; திறமைசாலியின் பேச்சிலே சர்வாதிகாரம் இழையோடுகிறது; அழகியின பார்வையில் அலட்சியம் நர்த்தனம் புரிகிறது. முத்தாயிக்கு, தான் கருப்புத்தான் என்று அவளுக்குத் தெரியும்; தன்னைக் காட்டிலும் சிவப்பானவர்கள் அவளோடு தண்ணீர் எடுக்க வருவதையும் அவள் உணர்வாள். அவர்களுக்கெல்லாம் இல்லாத 'ரப்பும்', 'அரங்கத்தனமும்' முத்தாயிடம் இருந்தது என்றால், வாலிபர்கள் மத்தியில் அவளுக்கொரு 'மார்க்கெட்' இருப்பதை அவள் நன்கு உணர்ந்திருக்கிறாள் என்றுதானே பொருள்.

பலபேர் ஒருத்திமீது குறிவைப்பதைக் கதைகளில் படிக்கிறோம்; நாடகங்களில் பார்க்கிறோம். திரையிலும் திரும்பத் திரும்ப அந்தக் காட்சிகளே வருகின்றன. ஆனால் பல பெண்கள் ஒரு ஆடவன் மேல் குறிவைப்பதுண்டா? உண்டு; யாரும் அதை மிகைப்படுத்துவதில்லை. திருப்பாச்சேத்தியில் அது வெளிப்படையாகத் தெரிந்தது. முத்தாயியைப் பலர் விரும்பினார்கள். அதற்காக 'கர்ணம்' போட்டார்கள்; காசைக் காட்டினார்கள்; அதைப்போல் பல முத்தாயிகள் ஒருவனுக்காகக் காத்துக் கிடந்தார்கள். கருமுயல் அவன் பெயர்! கீர்த்திபெற்ற சிலம்பாட்டக்காரன். அவன்தான் உண்மையான சிலம்புச் செல்வன். பெண்ணுக்கு எவ்வளவு போட்டியிருக்கிறதோ, அந்த அளவுக்கு ஒரு ஆணுக்கும் இருக்கத்தான் செய்கிறது. ஆடவர்கள் காதலை - பெண்ணாசையை — தற்பெருமையாகக் கருதுகிறார்கள் — பறையடிக்கிறார்கள். பெண்கள் அப்படியல்ல; காதலைத் தங்கள் வாழ்க்கையோடு பிணைத்து விடுகிறார்கள்—இரகசியமாகவே வைத்துக் கொள்ளுகிறார்கள். மனம், பருவம், எண்ணங்கள்—இவை இருபாலாருக்கும் ஒன்றுதானே! ஆடவர்கள் சுரைக்கூடுகள்—பெண்கள் நிறைகுடங்கள்!!

○

அண்ணன் வரும்வரை அவள் சாப்பிடமாட்டாள். காத்திருப்பாள். பத்து மணிக்குமேல் செந்தட்டிக் காளை வீட்டுக்கு வருவான். அவனுக்காகச் சாப்பாடு பரிமாறி இருப்பதையும், அதற்குப் பக்கத்தில் முத்தாயி தூங்கிக்கொண்டிருப்பதையும் பார்ப்பான். பாசம் வளர்ந்தது. அவளை எப்படியும் வைரஊசிக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்த ஆசையை ஊர்ஜிதப்படுத்தி விட்டான். இந்த எண்ணத்தை அவளிடம் எப்படியாவது தெரிவித்து விட அவன் பலதடவை முயற்சி செய்தான். முடியவில்லை. தமிழினத்திற்கும், பிற இனத்திற்கும் இங்கேதான் விரிந்த வேறுபாடு உண்டு. எதை எப்படிச் சொல்லவேண்டுமோ, யார் யாரிடம் கூறவேண்டுமோ அதைத்தான் தமிழர்கள் சொல்லுவார்கள். முத்தாயியை அதிகாரம் செய்வதற்கு உரிமை படைத்தவன்தான் செந்தட்டி; எத்தனையோ காரியங்களுக்கு அவளை மிரட்டியிருக்கிறான், பயம் காட்டியிருக்கிறான், அடிக்கக்கூடக் கையை ஓங்கியிருக்கிறான்; ஆனால் அவளுடைய மணவினைத் தகவலை

அவளிடம் நேரடியாகச் சொல்லத் தயங்கினன். பயம் அல்ல! பண்பாடு அத்தகையது.

ஒருநாள் செந்தட்டி திடீரென்று ஒரு கட்டளை பிறப்பித்தான்.

"முத்தாயி, இன்னக்கி நீ கொடிக்காலுக்குப் போய்ப் படுத்துக்க. ஆடு மாடுகள் அழிச்சிடப் போகுது!"

"ஒத்தையிலேயா?"

"வைரஊசியை வரச்சொல்லியிருக்கேன்"

"உஹூம்! பயமாயிருக்கு! நா மாட்டேன்."

"பயமா இருக்கா? ஊரிலே இருக்கிற பயலுகளெல்லாம் ஒன்னைப் பேய், பிசாசுங்கிருனுக, நீ என்னடான்னு, பயமா இருக்குதுங்கிறீயே"—என்ருன் செந்தட்டி கொஞ்சம் குறும்பாக!



செந்தட்டியின் கட்டளை, அவளுக்குப் பயத்தைக் காட்டிலும், கவலையைத்தான் அதிகமாகத் தந்தது. ஏனென்ருல், அன்று இரவு பன்னிரண்டு மணி அளவில் ஆற்றுப் படுகையில் கருமுயலைச் சந்திப்பதாக அவள் அவனுக்கு அறிவித்திருந்தாள்!

மனித இனம் தனக்கு விருப்பமான முடிவுக்கு எதிராக எத்தகைய பயங்கரக்கட்டளைகளையும் மதிப்பதில்லை. அதிலும் பெண்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள். போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதில்—ஆடவரிலும் பெண்கள் கைதேர்ந்தவர்கள். காதலர்களைச் சந்திப்பதில், வெள்ளைக்காரர்களைக் காட்டிலும் நேரத்தைத் துல்லிதமாகக் கையாளுவார்கள்; காதலன் பேச்சின் பல்பொருள் விளக்கத்தை அவர்களிடம் கேட்டால் சுவை மிகுந்த விரிவுரையாளர்களின் சொல்லோவியங்கள்கூடக் கசக்குமாம்—அனுபவசாலிகள் கூறுகிருர்கள்!

O

தலையிலே முக்காடிட்டுக்கொண்டு ஒற்றையடிப் பாதை வழியாக முத்தாயி ஆற்றங்கரைக்குப் போனள். பனி கொட்டியது. அவள் கால் விரலில் போட்டிருந்த வெள்ளித் தண்டை, அந்த அமைதியான வேளையில் ஒரு இனிய நாதத்தை ஒலித்துக் கொண்டிருந்தது. காரிருள் வேளையில் காட்டுப் பாதையில் போகும்போது கருகல் வாடை வீசும். பாம்பு அடை காத்திருந்தால்தான் அப்படி மணக்கும் என்று கிராமத்தார் சொல்லுவர். முத்தாயிக்கு அது தெரியும். ஆனலும் குறிப்பிட்ட இடத்தில் வீசிய அந்த வாடையை அவள் பொருட்படுத்தவில்லை. தாழம் புதருக்குப் பக்கத்தில் அவள் உட்கார்ந்திருந்தாள். அந்த இடம் பயங்கரமான இடம். ஐந்தாண்டுகளுக்கு முன அந்த இடத்திலேதான் உள்ளூர் நாட்டாண்மைக்காரர் மகள் தற்கொலை செய்துகொண்டாள். அதனல் அந்த இடத்தைப் பேய்பிடித்த புதர் என்று அழைத்தார்கள்.

நடுநிசி! கருமுயல் தலையிலே சிகப்புத் துண்டு கட்டிக்கொண்டு அங்கு வந்தான். முதலிலே என்ன பேசுவது என்று இருவருக்கும் யோசனை! அவளுக்கு வெட்கம்! அவனுக்கோ பயம்! அவள் பொல்லாதவள் என்று பெயர் பெற்றவளாயிற்றே! அறிமுகமில்லாதவர்களுக்கு எழுதும்கடிதத்தைப் போல் உரையாடல் தொடங்கியது.

"வந்து வெகுநேரமாகிவிட்டதோ?"

"உ.........ம்!"

"வீட்டில் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?"

"துணிஞ்சாச்சு! வருவதை ஏத்துக்கத்தானேவேணும்!"

"இப்போது உன் அண்ணன் செந்தட்டி வந்தால் என்ன செய்வாய்?"

"நான் செய்வதிருக்கட்டும்! நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"எனக்கென்ன பயம்? உன் வீட்டுக்கு வந்தால் அவன் கேட்கலாம். இது ஆற்றங்கரை! செந்தட்டிக்கு அதிகாரமில்லை!"

"அடேயப்பா! ஒரே முறுக்கா முறுக்குறீங்களே!"—இப்போதுதான் அவள் வாழ்நாளில் ஒரு ஆடவனிடத்தில் மனம் விட்டுப் பேசுகிருள்.

கருமுயல், உலகம் தன் கையில் சிக்கிவிட்டதாகவே நினைத்தான். திருப்பாச்சேத்தியில் விக்டோரியா மகாராணியைப்போல் யாருக்கும் பணியாமல் எவர் சொல்லையும் கேட்காமல் நடமாடியவள், தன்னைப் பார்க்கவந்திருக்கிருள், தன் சொல்லைக் கேட்கத் தயாராக இருக்கிருள் என்ருல், மகிழாதிருப்பான?

அன்று முதல் காலைக் கதிரவன் அவனுக்குப் பணியாளாகத் தெரிந்தான். சந்திரிகை பணிப் பெண்ணனள். "நாட்டாண்மைக்காரர் மகன் இருக்கிருன், அம்பலகாரர் பேரன் இருக்கிருன், அவர்களையெல்லாம் விரும்பாமல் என்னை விரும்பினுள் என்ருல்—பெண்மைக்கு எதில்தான் அன்பு சுரக்கிறது"—இப்படித் தன்னை அவன் பல முறை கேட்டுக்கொண்டிருக்கிருன். அவள் மனம் அவனுக்குப் புதிராகவேபட்டது.

அன்றிலிருந்து அவள் வரச்சொன்ன இடத்திற்குப் போனன்; சந்திக்கச் சொன்ன இடத்தில் சந்தித்தான்.

"முத்தாயி!"

"ஊ...ம்!" — குரலிலே கர்வமும், குழைவும் பின்னிக்கிடந்தன. ஆண் — பெண் இருவருக்குமுள்ள உறவு, காதல் நிலையில் இருக்கும்வரை பெண் தான் எசமானியாக இருக்கிறாள். காதல்கடமையாகிக் கழுத்திலே தாலி ஏறிய பிறகு, அந்த எசமானி வேலைக்காரியாகிவிடுகிறாள். இப்போது எசமானியாக இருந்தாள் முத்தாயி.

நாம் எத்தனை நாளைக்கு இப்படி இருட்டு வேளையில் சந்தித்துக்கொண்டிருப்பது?"

"காலம் கனியும் வரை!"

"நம்பிக்கையில்லை முத்தாயி! செந்தட்டியின் மனம் ஒருபோதும் கரையாது! அவன் மதயானை. கர்வம் வைத்தால் எத்தனை யுகம் தாண்டினாலும் பலி வாங்காமல் விடமாட்டானே!"

"அப்படியின்னா என்னை மறந்திடுங்க!"

"உ ஹ·ம்! அதுக்கா சொல்கிறேன்! நிலைமையைச் சொன்னேன். புரிந்துகொள்."

○

கோடை காலம் முழுவதும் அவர்கள் சந்திப்பு இரகசியமாகவே இருந்தது. மாந்தோப்பு, கருவேலங்காடு, கண்மாய்க்கரை — இவைகளே அவர்களுக்கு உத்தியா நந்தவனங்களாகவும் உப்பரிகைகளாகவும் மாறின.

பனிக் காலம் ஆரம்பமாகியது. உழவுத் தொழில் மும்முரமாக நடைபெறத்தொடங்கிற்று. முத்தாயி பெரும்பாலும் வீட்டில் இருப்பதில்லை. வயற்காட்டிலேயே திரிந்தாள். கருமுயலைச் சந்திப்பதற்கு அதுவே அவளுக்கு பெரும் வாய்ப்பாக இருந்தது.

○

ஒரு நாள்!

செந்தட்டி முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டிருந்தான். முத்தாயி அவன் முகத்தைப் பார்க்கவே பயந்தாள். குனிந்தபடியே வீட்டுக்குள் நடமாடினாள்.

"முத்தாயி!"

"என்ன!"

"செந்தட்டி ஜெயிலுக்குப் போகப் பயப்படுறவனில்லே! ......தெரியாதா உனக்கு?"

"என்னண்ணே சொல்றீங்க!...புரியல்லியே!"

அடக்கத்தோடு சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான்.

அன்றைய தினம்தான் கிராமத்திலே பாவைக் கூத்து. மழை முகத்திற்காக ஊரார் ஏற்பாடு செய்திருந்தார்கள். மாரியம்மனுக்குப் பாவைக் கூத்து என்றால் அளவுகடந்த பிரியமாம்! அப்படி ஒரு நாளைக்கு கூத்தை ஏற்பாடு செய்தால் அந்த வருஷம் பஞ்சம் வராதாம்! தென்மாவட்டங்களில் இப்படி ஒரு நம்பிக்கை.

முத்தாயியும் கூத்துப்பார்க்க வந்திருந்தாள். கருமுயலும் வந்திருந்தான். வழக்கம்போல் அவர்கள் சந்திக்கும் நேரம் வந்தது. அவன் எழுந்தான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவளும் எழுந்தாள். பின் தொடர்ந்தாள். தாழம்புதரை நோக்கி நடந்தார்கள். அப்போதுதான் கருமுயல் கொல்லப்பட்டது.

○

## 3

கருமுயல் கொலை வழக்கு — அந்த வட்டாரத்தில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மதுரையில் வழக்கு நடைபெற்றது.

முத்தாயி வாக்குமூலம் தெரிவிக்கும் அன்று, மதுரை நீதிமன்றத்தில் கூட்டம் வழிந்தோடியது.

கண்ணீரும் கம்பலையுமாக நீதிமன்றத்திற்கு வந்திருந்தாள் முத்தாயி. அவள் அதிகம் பேசவில்லை.

என் மச்சான் கடைசியாகப் பேசியது இது: **"டேய் செந்தட்டி! நீயும் ஒரு ஆம்பிளைதானா? ஈரல் செத்தவனே! ஒழிஞ்சிருந்தா வெட்டுறாய்? ஒத்தைக்கி ஒத்தை வந்து பாருடா!"**

—கூடியிருந்தோர் அழுதார்கள். அவளும் கண்ணீர் வடித்தாள். எதிர்க்கூண்டிலே விலங்கு பூட்டி நிறுத்தப்பட்ட செந்தட்டியின் கண்களும் கலங்கத்தான் செய்தன. வழியும் கண்ணீரைத் துடைக்க அவனுக்கு மார்க்கமில்லை. கரங்களில் இரும்புச் சங்கிலி!

நீதிபதி தீர்ப்பை வாசித்தார். மன்றத்தில் அனல் காற்று நிறைந்தது. செந்தட்டிக்கு ஆயுள் தண்டனை! யார், யாருக்காக அழுவது? தங்கையை வாழ்விக்க நினைத்தான்; ஆனால் தங்கையின்

முன்னர் எந்த மனிதனும் தன்னுடைய உழைப்பினாலேயே முன்னுக்கு வருவது வழக்கம். ஒருவருடைய தயவையும் அவன் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை. இந்தக்காலத்திலோ, நல்ல செல்வாக்கு உள்ளவர் எவரையேனும் தொத்திக்கொண்டு மேலேற வேண்டியிருக்கிறது. அங்ஙனம் தங்களுக்கு சிபாரிசு செய்யக்கூடியவர் எவரேனும் ஒருவர் கிடைத்தால் அதுவே பெரிய அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது.

வாக்குமூலமே அவனைக் காராக்கிரகத்திற்கு அனுப்பி வைத்தது.

அவள் அண்ணனை மதித்தாள். ஆனால் அத்தானின் கடைசிப் பேச்சு அவளை உருக்கி விட்டது. அதை அப்படியே வழக்கு மன்றத்தில் சொன்னாள். அவளுடைய வாக்குமூலத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் அண்ணனுக்குத் தண்டனை கிடைக்குமென்று அவளுக்குத் தெரியுமா?

O

பதினான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன. பலர் சிறைக்குப் போகிறார்கள்; அதில் சிலபேர் உணர்ச்சி மழுங்கிப்போய் வெளிவருகிறார்கள். மிகுதிப் பேர் கூர்ப்படுத்தப்பட்டு 'பழிக்குப் பழி' என்ற எண்ணத்தில் வெளியேறுகிறார்கள்.

சூழ்நிலை சில நேரங்களில் சுத்தமானவர்களையும் தண்டித்து விடுகிறது. கருமுயல் கொலைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று வழக்குமன்றத்தில் பன்முறை சொன்னான் செந்தட்டி. ஆனாலும் தண்டிக்கப்பட்டான். என்ன செய்வது! வாதிக்கு நீதி எப்போதும் கொஞ்சம் வளைந்துதான் கொடுக்கிறது.

திருப்புவனம் ரயில் நிலையத்தில் இறங்கித் திருப்பாச்சேத்திக்கு நடந்தான், செந்தட்டி. வழியிலே அந்தக் கரை—கருமுயல் சொல்லப்பட்ட கரை வந்தது. அந்த இடத்தில் ஒரு கல்லறை கட்டப்பட்டிருந்தது. அந்தக் கல்லறை கருமுயலுடையது என்று தெரிந்துதான் செந்தட்டி அதன்மேல் குந்தியிருந்தான்.

"எப்படியும் இந்தப் பக்கம் அவள் வந்துதானே ஆகவேண்டும்! சதக்! ஒரே வெட்டு! இன்னொரு பதினான்கு வருஷம்! அவ்வளவுதானே" — பைத்தியக்காரனைப்போல் தானாகப் பேசிக்கொண்டான் செந்தட்டி.

இருட்டு வந்தது. ஒரு நாடோடிப்பாடல் ஊருக்குள்ளிருந்து மிதந்து வந்தது. செந்தட்டி, பாட்டைக் கூர்ந்து கவனித்தான். அது அவனைப்பற்றிய பாடல்தான். யாரோ மாடோட்டி பாடிக்கொண்டு போயிருக்கிறான். செந்தட்டி அந்தக் கீதத்திலே மெய்மறந்து போயிருந்தான்.

யாரோ அவன் அருகில் வந்து அதட்டினார்கள்.

"ஏய் பைத்தியம்! இதென்ன மதகடியின்னு நெனைச்சே! கருமுயலின் புதைகுழி!"

"கருமுயல்! அவன் யாரவன் கருமுயல்! மானங்கெட்டவன்!" என்று கரகரத்த குரலில் கேட்டான் செந்தட்டி.

மனம் ஒரு அமைதியற்ற பறவை போன்றது. எவ்வளவுக்கெவ்வளவு அதற்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் ஆசை மிகுதிப்படுகிறது. பின்னும் திருப்தியற்ற நிலையிலேயே இருக்கிறது. நாம் நமது மனோவிகாரங்களுக்கு எவ்வளவு மிகுதியாய் இடம் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மிகுதியாய் அவை கட்டுக்கு அடங்காதனவாய் விடுகின்றன.

வந்த ஆள் நடுக்கத்துடன் கையிலிருந்த தீப்பெட்டியைத் தீட்டிப் பார்த்தான்.

"ஆ! செந்தட்டி! மச்சான்! மச்சான்!" என்று கூவினான் அந்த ஆள்!

செந்தட்டி கண்களை அகலவிரித்துப் பார்த்தான். எதிரே நின்றவன் வைர ஊசி!

"மாப்பிள்ளை! சௌக்கியமா? நான் சொன்ன வாக்கை நிறைவேற்ற முடியல்லே! முத்தாயிக் குட்டியை உசிரோடு தரமுடியாவிட்டாலும் இன்னும் கொஞ்சநேரத்தில் பிணமாகத் தருகிறேன், மாப்பிள்ளை, அவள் வரட்டும்" என்று பொடுபொடுத்தான்.

வைரஊசியின் கண்களில் நீர் துளித்தது. என்னை மன்னிச்சுக்க செந்தட்டி! அதோ வருகிறான் உன் மருமகன். அவன் பெயர் சின்னச் செந்தட்டி! என்மகன்! ஆமாம் முத்தாயியின் மகன். முத்தாயி இப்போது என் மனைவி செந்தட்டி!

"டேய் ஊசி!!"

"ஆமாம் செந்தட்டி! நான்தான் கருமுயலைக் கொன்றேன். மறுநாளே அந்தமானுக்கு ஓடிப்போய் விட்டேன். வழக்கு முடிந்த பிறகுதான் எனக்கு எல்லா விபரமும் தெரிந்தது. காலம் எப்படியோ என்னையும் முத்தாயியையும் சேர்த்துவைத்துவிட்டது. இப்போது அவள் நிறைமாதக் கெர்ப்பம்! வீட்டில் இருக்கிறாள். உன் ஆணையை அவள் நிறைவேற்றிவிட்டாள் வா போவோம்" என்று கூறி மறுபடியும் தீக்குச்சியை பற்றவைத்துப் பார்த்தான் வைரஊசி. அந்த இடத்தில் செந்தட்டியைக் காணவில்லை. அவன் கரையில் வேகமாக நடந்துகொண்டிருந்தான்.

அவன் நடைக்கு ஒத்தாப்போல் மாடோட்டியின் பாடல் மறுபடியும் ஒலித்தது. அந்தப் பாடலும் செந்தட்டியின் புகழைப் பற்றிய பாடல்தான்.

**கார்த்திகை** பிறந்துவிட்டாலே வயல்களில் களையெடுப்பு ஆரம்பமாகிவிடும்! நன்கு களையெடுத்து நீர்பாய்ச்சிப் பயிர்களைப் பாதுகாத்தால்தான் அந்த ஆண்டு பொங்கல் விழாவைச் சிறப்போடு கொண்டாட முடியும் கிராம மக்களால்!

# கிராமிய இலக்கியம்!

கோவை இரத்தினம்

பொங்கல் திருநாளை எண்ணும் போதெல்லாம் அவர்களது இதயங்கள் மகிழ்ச்சியால் பூரிக்கும்.

சாதாரணமாகக் கிராமங்களில் வாழும் மக்கள் எப்போதுமே சுறுசுறுப்பாக இருப்பார்கள். அந்தச் சுறுசுறுப்புடன் சற்றுமகிழ்ச்சியும் சேர்ந்துவிட்டால் அவர்களுடையஉள்ளத்திலிருந்து பாடல்கள் கிளம்பிவிடும்! கவிதைகளுக்குரிய இலட்சணங்களான இலக்கணம், யாப்பு, மோனை போன்ற தடைகளைத் தாண்டியதாகவும் அது இருப்பதுண்டு! இவ்வகைப் பாடல்களைத்தான் "நாட்டுப்பாடல்கள்" அல்லது "நாடோடிப் பாடல்கள்" என்கிறோம். ஆனால் இவைகள் கிராமியக் காதலையே அடிப்படையாகக் கொண்டிருப்பவை என்பதும் குறிப்பிடத் தகுந்தது!

தனது வயலிலே களையெடுக்கும் பெண்களில் தன் அத்தை மகள் இரத்தினத்தைப் பார்த்துவிடுகிறான் ஒரு காளை. அவன் பெயர் பொன்னுசாமி. உடனே பாடல் பிறந்து விடுகிறது :—

"களையெடுக்கும் பெரியகுளம்,
கணக்கெழுதும் ஆலமரம்
கொத்தடிக்கும் கொட்டாரம்
கூறுவைக்கும் களத்துமேடு!"

அத்தை மகள் இரத்தினம் சும்மா இருப்பாளா? அவள்தான் முறைப் பெண்ணாயிற்றே. பதிலுக்குப் பாட ஆரம்பிக்கிறாள் :—

"வாய்க்கா வரப்புச் சாமி
வயக்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்குக்
காவலுக்கு வந்தசாமி!"

எப்படியிருக்கிறது? களையெடுக்கும் பெண்களுக்குக் காவலுக்கு வந்திருக்கிறானும் அவன்! காவலுக்கு மட்டுமா வந்திருக்கிறான்? அவளுடன் காதல் பேச்சுப் பேசி மகிழவும் அல்லவா வந்துள்ளான்?

அவள்மீது அவனுக்கு ஆசைதான். காதலை விட அவனுக்கு காரியம்தான் முக்கியம்! தனக்குப்போட்டிப் பாட்டுப் பாடிக்கொண்டே அத்தை மகள் வேலையில் பின்னடைந்தாள். அதைத் தந்திரமாகப் பாட்டு மூலமாகவே சொல்கிறான் :—

"கண்ணாடி வளவி போட்டு
களையெடுக்க வந்தபுள்ளே!
கண்ணாடி மின்னலிலே உன்
களையெடுப்புப் பிந்துதடி!"

அதுகேட்ட அவள் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டாள். இதைப் பார்த்த மற்றப் பெண்கள் 'கொல்'லெனச் சிரிக்கின்றனர். பொன்னுச்சாமிக்கு மேலும் 'குஷி' பிறந்துவிடுகிறது.

"வெள்ளிப்பிடி வளைவிநல்ல
விடலைப்புள்ளெ வளைவிகையி
சொல்லியடிச்சவளை நல்லா
சுழட்டுதில்லெ நெல்களையை!"

என்று பாடுகிறான். இந்தக் காதல் ஜோடிகளை இப்படியே விட்டுவிட்டு இன்னொரு ஜோடிகளைப் பார்ப்போம்.

○

தன் அத்தை மகனைப் பற்றிய நினைவிலேயே மூழ்கிக் கிடக்கிறாள் ஒரு குமரி. அவளுக்கு அத்தை மகன் செய்யும் தொழில் எல்லாம் இனிக்கிறது! எப்படி? சர்க்கரையைப்போல இனிக்கிறதாம். அவன்மீது அவளுக்கு எத்தனை அன்பிருந்தால் இப்படிச் சர்க்கரையாக இனிக்கும்? இதோ பாடுகிறாள் கேளுங்கள் :—

"செடியோரம் கிணறு வெட்டி
செவலக்காளை ரெண்டு கட்டி
அத்தை மகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரையே!"

"மலையோரம் கிணறு வெட்டி
மயிலைக்காளை ரெண்டுகட்டி
அத்தைமகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரையே!"

○

ஆற்றுக்கு அக்கரையிலுள்ள தன் தென்னந் தோப்பைக் காண ஒரு இளங்காளை போகிறான். அவன் அக்கரை சென்றதும் ஆற்றிலே பெருவெள்ளம் வந்துவிடுகிறது. திரும்ப வழியின்றித் தவிக்கிறான். புறப்படும்போது தன் ஆசைக் காதலியிடம் உடனே திரும்பிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தான். என் செய்வது?

இருவரது இதயக் குமுறலும் இங்கே ஒலிக்கிறது!

அவன் :—

"ஆற்றிலே தண்ணீர்வர
ஆளிறங்காத். தண்ணீர்வர
நீச்சலிலே நான்வருவேன்
நிலக்கிளி தூங்காதடி !"

தன் ஆசைக்காதலி காத்திருந்து பார்த்துவிட்டு தூங்கப் போய்விடுவாள் எனஎண்ணினுன் காதலன். ஆனல் அவளோ காதலன் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிருள். வழியில் வருவோரை யெல்லாம் விசாரிக்கிருள். துயரத்துடன்.

அவள்:

"ஆற்றுக்கு அந்தப்புறம்
ஐந்தாறு தென்னைமரம்
வச்சமரம் பார்க்கப்போன
மச்சான் வரக் கண்டீர்களா?"

○

இன்ஞெரு காதலன், தன் காதலியிடம் குறியிடம் கேட்கிருன்:

"புள்ளிபோட்ட ரவிக்கைக்காரி
புளியங்கொட்டைச் சேலைக்காரி
நெல்லறுக்கப் போகும்போது—நான்
நெல்லிமரக் காவலடி!
கஞ்சிக் கலயங் கொண்டு
கருக்கு வாளைத் தோளிலிட்டு
அறுப்பறுக்கப் போகும்போது—உன்
இருப்பிடத்தைச் சொல்லிடடி!"

○

நகர்ப்புறத்திலே அழகான சிமெண்ட் ரோடுகள் போட்டு அழகு பார்க்கும் சர்க்கார், கிராமப் பகுதிகளில் சாதாரண மண் பாதைகூடப் போட முயலுவதில்லை. அதனல் கிராம மக்கள் படும் தொல்லைகள் கொஞ்சமா? நாட்டுப்புற மக்களின் வாழ்வைப் போலவே, அங்குள்ள பாதைகளும் மேடுபள்ளம் நிறைந்ததாகவே இருக்கிறது! அப்படிப்பட்ட பாதை ஒன்றிலேதான் புதிதாகத் திருமணமான இளந் தம்பதிகள் இருவர் வில்வண்டி ஒன்றில் செல்கின்றனர். வ்ண்டியில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. விளையாட்டுகளுக்குக் கேட்கவேண்டுமா என்ன?

இடையே ஒரு சிற்ருறு. ஆற்றில் நீர் அதிகமாக இல்லாவிட்டாலும் சேறு அதிகம். வண்டியின் ஒருபுறச் சக்கரம் சேற்றில் சிக்கிவிடவே, வண்டி நின்றுவிடுகிறது. உதவிக்கு ஆளில்லாததால் கணவனை வண்டி மீது இருக்கச் சொல்லிவிட்டு மனைவி இறங்கிச் சேற்றில் பதிந்துள்ள சக்கரத்தைத் தள்ளுகிருள்! இப்போதுதானு அவனுக்குப் பாடல் கிளம்பவேண்டும்?

"ஆற்றுக்குள்ளே போன வண்டி
சேற்றுக்குள்ளே நிற்கையிலே
கொண்டை போட்ட குமரியிவள்
மண்டிபோட்டுத் தள்ளுருளே!"

இருவரும் சிரிக்கின்றனர். வண்டியும் சேற்றைக் கடந்து விடுகிறது! இருவரின் காதல் விளையாட்டுகள் மீண்டும் துவங்குகின்றன!!

○

அவனுக்கு அவள் முறைப்பெண். அவளை அவன் நேசித்தான். ஆனல் அவளுக்கோ அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை. முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொள்ளுவாள். இப்படிப்பட்ட அவளை எப்படி வாழ்க்கைத் துணைவியாக ஏற்பது என்பது அவனின் ஓயாத சிந்தனை. மலைப் பூப்போல அழகு நிறைந்தவள். என்ருலும் அதிலுள்ள சுகந்த மணம் இவளிடம் இல்லையே!



"மாமி வீட்டிலே
மலரொன்று பூத்திருக்கு
ஆய்ந்து முகர்ந்தேன்
அழகொளிய மணக்குதில்லை!",

என்ருன் அவன், அவளைப் பார்த்து. அவளோ சுட்டெரித்து விடுவது போலப் பார்த்தாள். அவள் ஒரு மணமில்லா மலராம். இந்த அழகு சுந்தரன் கூறுகிருன் என்று எண்ணினுள். பதிலுக்குச் சுடச்சுடக் கொடுத்தாள். அதில் கேலியும் கிண்டலும் நிறைந்திருந்தது.

"அத்தர் புனுகுகளாம்
அழகான (!) பவுடர் மணம்
இஞ்சிதின்ற குரங்குபோல
இவருக்கென்ன வந்த பசி!"

என்ருள். மாமியார் வீட்டுக்கு வருவதற்கென்றே பூசிய அத்தர், புனுகு

நறுமணமா என்று அவள் அவனைப்பார்த்துக் கேட்கிருள். "இஞ்சி தின்ற குரங்குபோல" என்று கூறி, கண்ட பெண்களை முறைத்துப் பார்க்கும் ஆண் இனத்துக்கே சவுக்கடி கொடுக்கிருள்! அவமானம் தாளாத அவனே,

"இடுப்பு சிறுத்த பொண்ணே
இருகாலும் நீண்டவளே!
கொக்குக் கண்பொட்டே—உனக்கு
கோபமென்ன என்னேட?"

என்கிருன். பதிலுக்குப் பதில்தானே!

அவள் ஒல்லியாகவும், சற்று உயரமாகவும் இருந்ததை எப்படிப் பொருத்தமாகக் கூறிவிட்டான்! கோபம் வந்துவிட்டது அவளுக்கு. சும்மா இருந்தால், ஆணுக்குப் பெண் அடங்கிவிட்டவள் என்றல்லவா நினைக்கவேண்டி வரும்?

"சுட்ட கட்டைபோலே
சுடுகாட்டுப் பேய்போலே
அட்ட முகனு — நீ
அடுப்படிக்கும் ஆகாதடா!"

அவன் கொஞ்சம் கருப்பாக இருந்தான். இதைத்தான் அவள் "சுட்டகட்டைபோல" என்ற உபமானத்தைத் தேடிப்பிடித்துக் கூறுகிருள். அவனுக்கு இருபற்கள் முன்னல் சற்று நீண்டபடி இருந்தது. அதற்குத்தான் "சுடுகாட்டுப் பேய் போல!" என்கிருள். அட கறுமி! நீ என் அடுப்படிக்கும் ஆகாதடா!" என்கிருள், எப்படி?

எல்லாம் ஒன்றுபடாத இரு உள்ளங்களின் வினை! அடுத்து ஒன்றுபட்ட இரு உள்ளங்களைக் காணலாம் வாருங்கள்,

○

ஒரு காதலி, தன் காதலனுடன் வெளியூர் போய்விடத் தீர்மானிக்கிருள். செல்லும் வழியிலுள்ள இடைஞ்சல்களைக் கூறி அவள் தன்னுடன் வர வேண்டாம் எனக் கூறுகிருன் காதலன்.

"ஈதி இடைஞ்சலிலே
இடிவிழுந்த கானலிலே
பாறை இடைஞ்சலிலே
பயமும்மெத்த ஆகுமடி!"

தலைவன் எவ்வழியோ அவ்வழி நிற்கும் தலைவி, அதுதானே தமிழ்ப் பெண்களின் உன்னதப் பண்பாடு! அவளா இதற்கெல்லாம் பயப்படுகிறவள்?

"இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்க
சாமவழிதனில் நடக்கச்
சம்மதமே எந்தனுக்கு!"

> நம் உடல் நலத்துக்காகப் பிறர் பாடு படுவது முடியாத காரியம். நமக்கு நாமே துணை. நம்மைப்பற்றி பூரணமாக அறிந்து கொள்ளவும், அந்த அறிவை நம் ஒவ்வொருவரின் தேவைகளுக்கும் ஏற்றவாறு பயன்படுத்தவும் முயலவேண்டும். இதற்குச் சுய முயற்சியும் ஒழுங்கும் உண்மையைக் கடைப்பிடிக்கும் உயரிய பண்பும் அவசியம்.

வேறு என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது? இருவரும் புறப்பட்டுவிட்டனர். காட்டு வழியில் நடந்துகொண்டிருந்தனர். கடுமையான வெயில். மெல்லியலாள் மெய் சோர்ந்துவிட்டாள்.

அவன்:— "கையோடு கைசேர்த்து
கானல் வழி நடக்கையிலே
மெய் சோர்ந்து விழ்ந்ததென்ன
மென் குயிலே கண்ணுட்டி?"

மெய் சோர்ந்துவிட்ட மெல்லியலாள் கூறுகிருள்:—

"கையோடு கை சேர்த்து
கானல் வழி நடக்கையிலே
கண்டேன் உனத முகை
கட்டழகா சோர்ந்து விட்டேன்"



எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? இத்தனை நாளாகத் தன் காதலனுடன் பழகும் இவளுக்கு அப்போதெல்லாம் தன் காதலனின அழகு தெரியவில்லையாம்! தன்னந்தனியாக—மனித சஞ்சாரமற்ற கானகத்தில் தன் மனதுக்குகந்த மணாளனேடு கைகோர்த்துக் கொண்டு செல்லும் போது தான் அவனுடைய அழகு அவளுக்குத் தெரிந்ததாம்!

அலர் தூற்றிய ஊரைத்தாண்டி நீண்ட தொலைவு வந்து விட்டனர். இனி இவர்களிடையே மகிழ்ச்சிக்கு என்னகுறை?

அவள்:— கண்ணுடித் தலையழகா!
காக்காயி மூக்கழகா!
அவன்:— என்னெப்த் தலையழகி!
எழுத்தாணி மூக்கழகி!

இவ்விதமாக இருவரும் பேசிமகிழ்ந்தபடியே நடந்தனர்!!

★

# அலங்காரக் கலை




அன்று பிற்பகல் மூன்று மணியிலிருந்தே 'காந்தள்' உடைப்பெட்டியைத் திறப்பதும் மூடுவது மாக இருந்தாள். எப்படியோ ஒருவகையாக, ஏதோ ஒருவாறு உடையணிந்து கொண்டு, புறப்படுமுன் கடைசியாக ஒருமுறை நிலைக்கண்ணாடிக்குள் தலையை நீட்டி நெற்றியில் இருந்த சாந்துவட்டத்தை அழுத்தி விட்டுக்கொண்டு சின்னக் குழந்தையை ஒரு கையில் பிடித்து 'மெல்ல மெல்ல' என்று சொல்லிக் கொண்டே படியிறங்கிப் போனாள். தலைமறையும் வரை அவளையே பார்த்துக்கொண்டிருந்த மாமியார் 'காலம் கெட்டுப்போச்சு' என்று முணுமுணுத்துக் கொண்டே உதடுகளை மடித்து 'அழகு' காட்டினாள்.

"கமலம், உன் மருமகள் எங்கோ சிங்காரித்துக் கொண்டு கிளம்பிவிட்டாளே, என்ன சிறப்பு?" என்று கேட்டுக்கொண்டே எதிர்வீட்டு அன்னம் மாள் வந்தாள்.

"ஐயோ அதையேன் கேட்கிறே—போ—பக்கத் துத் தெருவில் அவள் தோழி இருக்கிறாளே, அவள் குழந்தைக்கு இன்று பெயர் சூட்டுகின்றார்களாம்—அதற்குத்தான் இந்த ஒப்பனையும் அலங்காரமும்" என்று தன் வெறுப்பை வெளியிட்டாள்.

கமலம் மட்டும் அல்ல அப்படி. எல்லா மாமியார் மாரும் அப்படித்தான் தங்கள் மருமகமாரைக் கருது கின்றனர். இரண்டு குழந்தைக்குத் தாயாயிற்றே—இவளுக்கு எதற்கு இனனமும் அலங்காரம் என்று குறைபட்டுக் கொள்ளுகின்றார்கள்.

மாமியாரையாவது விட்டுவிடலாம். ஆனால் கொண்ட கணவன் என்ன சொல்லுகின்றான்? திருமணம்ஆன கையோடு ஒரு இரண்டு ஆண்டுகள்வரைகூட மனைவி செய்துகொள்ளுகின்ற அலங்காரங்களை ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றான். "இன்னும் கொஞ்சம் மாவு போட்டுக்கொள். உதட்டுச் சாயம் போடவில்லையே! இல்லை என்றால் சொல்வது தானே. வாங்கிவரமாட்டேனா நான்—இதென்ன முரட்டுப் புடவை. மெல்லியதாக எடுத்துக்கொள் அடுத்த முறை — இதோ பார் இதுதான் நகத்திற்குத் தீட்டும் வண்ணம்" என்று ஒவ்வொரு வகையில், புதிய புதிய முறையில் தன் மனைவியை அழகுபடுத்திப் பார்க்கின்றான்.

"ஐய!—இதெல்லாம் வேண்டாமே — உங்கள் அம்மா பார்த்தால் என்னவாவது சொல்லுவார் கள்" என்று மனைவி தடுத்தாலும் "அவர்கள் கிடக்கின்றார்கள் விடு. இப்படிக் காட்டு விரலை" என்று தானே வண்ணம் தீட்டிவிடுகின்ற கணவ னும் இருக்கின்றான்.

எல்லாம் ஒரு சில ஆண்டுகள்வரையில்தான்' பிறகு பாலும் புளித்துப் போகின்றது—ஆசையோடு அதையும் இதையும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்து அலங்காரம் செய்துகொள்ளச் சொன்ன அதே ஆள் "என்ன சின்னப் பெண் என்ற நினைப்போ? இதெல்லாம் என்ன வேடம், சினிமாக் காரியைப்போல?" என்று எரிந்து விழுகின்றான்.

மகனுக்குப் பெண் பார்க்கப் போகும் தாய், "பெண் நன்றாக இலட்சணமாக கண்ணுக்கழகாக இருக்கிறாள்" என்று சொல்லித்தான் தன் மகனை திருமணத்திற்கு இசையவைக்கிறாள். 'மூக்கும் முழியுமாக இருக்கிறது' என்று அழகுக்கு இரண்டு பிரதிநிதிகளையும் ஏற்படுத்துகின்றாள்.

ஆனால் பின்னரோ, "இந்த வயதில் கண்ணுக்கு என்னடி மை உனக்கு?" என்று அதே பெண்ணைத் திட்டுகினறாள்.

மையிட்ட கண்ணைக் கண்டு மயங்கிப்போன கணவன் "பூனைக் கண்போல் இருக்கிறது. போய் முதலில் கண்ணில் பூசியிருக்கும் கரியைத் துடைத்துக்கொண்டு வந்து சோறுபோடு போ" என்று விரட்டுகின்றான்.

இதெல்லாம்கூட வியப்பில்லை. அந்தப் பெண்ணின் நிலைதான் பெருவியப்புக்கு உரியதாகும். திருமணம் ஆகும்வரை அவள் எப்போதும் கண்ணாடி யும் கையுமாக, எண்ணெயும் சீப்புமாக, சுணேவும் மாவுமாகத்தான் இருக்கின்றாள். நொடிக்கு நொடி

விதவிதமான ஒப்பனைகள் செய்து கொண்டு ஒய்யார நடை நடந்துகொண்டிருக்கின்றாள். திருமணம் ஆனபின் மெல்ல மெல்ல அலங்காரம் செய்துகொள்ளுவதைக் குறைத்துக் கொள்ளுகின்றாள். குறைத்துக்கொள்ளுவது மட்டுமல்ல 'என்ன புடவையில் ஒரே கரியாக இருக்கிறதே' என்று கேட்பவர்களிடம் "ஆமாம் நான் இருக்கிற இருப்புக்கு இது போதாதா?" என்கிறாள். "இதென்ன எண்ணெய் வடியும் முகத்தோடு......" என்று கேட்டு முடிப்பதற்குமுன் "எல்லாம், இருக்கிற முகத்திற்குச் சோறு கிடைத்தால் போதும்" என்று சலித்துக் கொள்ளுகின்றாள்.

பெரும்பாலும் எல்லார் இல்லங்களிலும் இந்த நிலைதான் இருக்கிறது; ஒவ்வொருவர் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. அலங்காரம் செய்து கொள்ளுவதை ஏதோ தீயநெறியில் செல்லுவதைப் போல் நினைக்கின்றார்கள். அழகுபடுத்திக்கொள்வதை ஆடம்பரம் என்று எண்ணிவிடுகின்றார்கள். அதனால்தான் அழகுபடுத்திக்கொள்ளுகிறவர்களைக் கண்டால் 'மினுக்கிக்கொண்டு' திரிவதாகக் கூறிக் கண்டிக்கின்றனர்.

அப்படியானால் எப்போதும் 'வேடம்' போட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டுமா என்று கேட்கக் கூடாது. வேடம் போடவேண்டாம். அழகு படுத்திக் கொள்ளவேண்டும்.

வேடம் போடுவது என்பது வேறு; அழகு படுத்திக் கொள்வது என்பது வேறு. இல்லாததை இருப்பதுபோல் காட்டுவது வேடம். இருப்பதை எடுத்து விளக்குவது அழகுபடுத்துதல்—காகிதத்தில் பூவைப்போல் கத்தரித்து மாலையாகச் செய்துவைப்பது வேடம். கட்டிய மலர்மாலையை சரிகையால் சுற்றிவைப்பது அழகு படுத்துவது.



எந்தப் பொருளையும் அழகு படுத்தினால்தான் அதன் அருமை புலப்படும். இல்லை எனில் அதை விரும்புவார் இல்லாமல் போய் விடுவர்.

சுவையான பண்டங்கள் செய்யும் கடையைவிட அழகாகச் செய்யும் கடையில் வியாபாரம் மிகுதியாக நடைபெறுகின்றது. இதில்தான் உண்மையின் விளக்கம் இருக்கிறது. சுவையாக இருப்பது அழகாகவும் இருந்தால் அது 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பதைப்போல சிறப்புபெறும். அழகு இல்லை எனில் அங்கே சிறப்புப்பெறுதல் இல்லை; சீர் அழிதல்தான் நடக்கும்.

நம்முடைய இல்லங்களில் நடக்கும் பெரும்பாலான 'சச்சரவு'களைக் கூர்ந்துபார்த்தால் இந்த உண்மையை விளங்கிக்கொள்ளலாம். ஒன்றுமில்லாததற்கு 'ஓ' என்றஇரைச்சல் போட்டு சண்டை நடைபெறும். ஏன்? காரணம் எதுவும் இருக்காது. "அன்பாகத்தானே இருக்கிறேன், நான். இவர் என்னமோ, 'ஆகாயத்துக்கும் பூமிக்குமாக' குதித்துக் கொதிக்கின்றாரே, என்னவோ தெரியவில்லையே" என்று மனைவி புழுங்குகின்றாள். ஏன்?

எங்கோ அலைந்து திரிந்து அவரையும் இவரையும் பார்த்து அதுவும், இதுவும் நாடி, எவரும் உதவாமல், எதுவும் கிடைக்காமல் திண்டாடி வீட்டிற்கு வருகின்றான் கணவன். வீட்டிலாவது கொஞ்சம் மன நிம்மதி பெறலாம் என்று எண்ணி வருகின்றான். வீடு என்ற சொல்லுக்கே அதுதானே பொருள்! விடுதலை — வெளியில் உள்ள தொல்லைகளுக்கு விடுதலை—தரும் இடம் வீடு என்று சொல்லுகின்றனர். அந்த நிம்மதி நிலையத்திற்கு வந்தவுடன் என்ன நடக்கின்றது? வந்ததும் வராததுமாக எண்ணெய் வழிவும் முகம், காற்றில் அலையும் கூந்தல், கறைபடிந்த புடவை, என்று இந்தக் கோலத்தில்—கோலத்தில் அல்ல 'கோரத்தில்'—வந்து நிற்கும் மனைவியைக் கண்டதும் அவனுக்குக் கோபம் முன்னே வந்து நிற்கின்றது. வாயைத் திறப்பதற்கு முன்னே வம்பு பிறக்கின்றது.

ஆனால், பெண்கள், என்ன, ஆண்களின் கண்களுக்கு விருந்து தரும் பாவைகளா என்று கேட்டுப் பயன் இல்லை. பெண்கள் மட்டுமல்ல, நம்முடைய நண்பர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம்? தூய்மையாக உடை உடுத்தி 'அழகாக' விளங்கவேண்டும் என்று விரும்பவில்லையா? அழுக்கேறிய உடையுடன் உடன் வருகின்றவனிடம் "ஏன் கொஞ்சம் நன்றாகத்தான் வருவதுதானே" என்று கேட்கின்றோமே, அந்தக் கேள்வியைத்தான் மனைவியிடம் கேட்பதாகக் கொள்ள வேண்டுமே யன்றி 'அலங்காரப் பாவை'யாக இருக்கச் சொல்லுகின்றோம், பெண்ணுரிமை பேணவில்லை என்று சொல்லக்கூடாது. 'இருக்கலாம், ஆனால் பணம்?' என்று கேட்கத் தோன்றும். பணம் ஒன்றுமட்டுமல்ல இதற்குத்தேவை; மனமும் இருக்கவேண்டும். மனம் இருந்தால் கந்தையும் போதும், அழுக்கு போகக் கசக்கி, அழகு விளங்க மடித்துக் கட்டலாம்.

இது ஏதோ சின்னச்செயல் போல் நமக்குத் தோன்றுகின்றது. பெரிய பெரிய பிரச்னைகள் இருக்கின்றபோது இந்த அழகுக் கலைதானா அவ்வளவு முக்கியமாகி விட்டது என்றுகூடச் சிலர் நினைக்கலாம்.

அப்படி எண்ணுகின்றவர்கள், குடும்பத்தில் இந்தக் கலை இல்லாத காரணத்தினால் எவ்வளவு 'கொதிப்பு' உண்டாகின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். குடும்பத்தில் இருக்கும் நிலைதான் பரவலாக நாட்டிலும் இருக்கும். நாடு என்பது வேறு ஒன்றுமில்லை, பல குடும்பங்களின் தொகுப்பின் வளர்ச்சிதான். 'ஒரு நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்பதனை உணரவேண்டும்.

இந்தக் காலத்திலே மட்டுமல்ல நெடுங்கால மாகவே தமிழ் நாட்டில் குடும்பத்தில் 'அழகுக்கலை' இருந்திருக்கிறது என்பதையும்; அது இல்லாததினால் குடும்பத்தில் பல கோளாறுகள் ஏற்பட்டன என்பதனையும் நமக்கு இலக்கியங்கள் சொல்லுகின்றன.

கோவலன் கதை போதும், எடுத்துக்காட்டுக்கு.

கண்ணகி பேரழகு வாய்ந்த பெருமாட்டிதான். அவள் அழகை நுகர்ந்த கோவலன் 'தீராக் காதலின் திருமுகம் நோக்கி' 'உலவாக் கட்டுரை பல பாராட்டினன்' என்று இளங்கோவடிகள் சொல்லுகின்றார். அந்த அழகு அவனை என்றும் தன்வயத்திலேயே வைத்திருக்கப் பயன்படவில்லை.

மாதவியின் ஆடல் கண்டவுடன் 'நூறு பத்தடுக்கி எட்டுக்கடை நிறுத்த; (1008) பசும் பொன் கொடுத்து மாலையை வாங்கிக்கொண்டு மாதவியின் இல்லம் சென்று 'விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்.'

எப்படி இந்த விருப்பு அவனுக்கு வந்தது? அதுமட்டுமா, தன் மனையையும் மறக்கச் செய்தது? அங்குதான் ஆசிரியர் இளங்கோவடிகள் சொல்லாமல் விட்ட செய்தி ஒன்று ஒளிந்திருக்கிறது.

கண்ணகி அழகு மிக்கவள்தான்; ஆனால் அழகுபடுத்திக்கொள்ளும் பணியில் ஈடுபட்டதில்லை.

மாதவியும் அழகுமிக்கவள். அந்த அழகை மேலும் அழகுபடுத்திக்கொள்ளுவதிலும் வல்லவள்.

இருவரும் பொன் மலர்தான். அதில் கண்ணகி வெறு மலர்; மாதவி நறுமலர். இந்தச் சின்ன வேறுபாடுதான் கோவலன் வாழ்க்கையில் பெரும் பங்கு பெற்றிருக்கின்றது.

கொண்ட மனைவியை விட்டு மாதவி மனையில் இருப்பது தவறு ஆகாது, கூடாது, என்று யாராவது ஒரு நண்பன் கோவலனுக்கு இடித்துக் கூறி அவனை வீட்டிற்கு அழைத்து வருகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி வருகின்றபோது அவனை வா என வரவேற்கின்ற கண்ணகி எப்படி இருக்கின்றாள்?

எவ்வகை ஒப்பனையும் இன்றி, செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப, பவள வாணுதல் திலகம் இழப்ப, தவள வாள்நகை கோவலன் இழப்ப, துன்பமே உருவானவளாக இருக்கிறாள். இன்பமே உருவானதுபோல் இருந்த இடத்தைவிட்டு வந்தவன் எப்படி இந்தத் துன்பமே உருவானவளுடன் உளம் கலந்து பழகுவான்? அணி வேண்டாம், அலங்காரம் வேண்டாம், முறுவலுமாகூடாது. அதுவும் இல்லை என்பதைப் பாட்டு கூறுகின்றது. இந்த நிலையில் இருக்கும் கண்ணகியைக் கண்டு வெதும்புவதைவிட மாதவியின் இல்லமே மேல் என்று அவன் கிடந்திட்டான்.

இதேபோல் மறுபுறம் மாதவியின் நிலையைக் காணுவோம். ஒரு முறை மாதவியின் மீது கோபம் கொண்டுவிடுகின்றான் கோவலன். உடனே அவனிடம் போய் 'கோபம் தீது, தாபம் விடும்' என்றெல்லாம் அவள் சொல்லி உருகவில்லை. கோவலன் கோபம் தணியும் வழி நாடினாள். தன் மேனியை அழகுபடுத்திக்கொள்ளத் தலைப்பட்டாள்.



பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத்து இருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டி
புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி-

இவ்வாறு கூந்தலை முதலில் அழகுபடுத்திக் கொண்டாள். பின்னர் கால் விரல்களில் அலங்காரம் நடக்கிறது; அதன்பின் நீலஆடையின்மீது முத்துக்களின் அணி; தோளுக்கு அணி; கைகளுக்கு வளையல்கள்; அதிலே பலவகை; பின் கை விரல்களுக்கு மோதிரங்கள், தலையில் பல அணிகள் இவை எல்லாம் செய்து கொண்ட பின் கோவலனின் கோபம் எங்கோ போய்விடுகிறது. அதற்குப் பின் மாதவி கோவலனிடம் கோபம் கொள்ளுகின்றாள்.

கூடலும் ஊடலும் கோவலனுக்கு அளித்தாள் என்று மாதவியைப் பற்றிச் சொல்லுகின்றார். இந்த உரிமையைப் பெறுவதற்கு அவள் செய்துகொண்ட கடமைகளைப் பற்றி—அலங்காரங்களைப் பற்றி— இளங்கோவடிகள், முப்பத்து மூன்று வரிகள் எழுதுகின்றார்.

கண்ணகியுடன் கோவலன் ஆண்டுக் கணக்கில் நடத்திய இல்வாழ்க்கையை 'ஆண்டு சில கழிந்தன' என்று மூன்று சொற்களில் சொல்லிப்போகும் இளங்கோவடிகள் முப்பத்து மூன்று வரிகளில் என்றோ ஒருநாள் கோவலன் கொண்ட கோபத்தைத் தணிக்க மாதவி செய்துகொண்ட அலங்காரங்களைப் பற்றி மட்டும் சொல்லுகின்றார்.

கோவலனுக்கு மட்டும் அல்ல அந்த மனநிலை. நமக்கு எல்லோருக்கும்தான் இருக்கிறது. அதனால் தான் பெரும்பாலான இல்லங்களில் கணவனும் மனைவியும் கலந்து பேசுவதில்லை. நண்பர்களோடு எவ்வளவு நேரம் பேசுகின்றோமே, அவ்வளவு நேரம் மனைவியோடு பேசுகின்றோமா? வெளியில் எங்கேனும் அலையும் கண்கள் அகத்தில் அலைகின்றனவா? இல்லையென்றால் ஏன்? இதுதான்விடை; அழகுபடுத்திக் கொள்ளும் கலை.

பெண்கள் மட்டும்தான் இப்படி என்று இல்லை. ஆண்களின் நிலையும் இதுவேதான். நாம் வெளியில் போகின்றபோது மட்டுமே' அழகாக' செல்ல வேண்டும் என்று நினைக்கின்றோம். வீட்டில் 'எப்படி வேண்டுமானாலும்' இருக்கலாம் என்று எண்ணுகின்றோம்.

துணி எடுக்கும்போதே 'சும்மா வீட்டில் இருக்கும் போது கட்டிக்கொள்ள' என்று சொல்லிக்கொண்டே இரண்டு முரட்டு வேட்டிகளைவாங்குகின்றோம். பலர் வெளியில் போய்வந்ததும் வேறு



# ஏழை சொல் அம்பலம் ஏறிற்று

தில்லை வில்லாளன், எம்.ஏ




"**ஏழை சொல் அம்பலம் ஏறாது**" என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் எல்லா நேரத்திலும், எல்லா இடத்திலேயும் சரியாக இருப்பதில்லை, இந்த முதுரை.

இங்கு குறிப்பிடப்படுகிற ஏழை, சொல்லி வந்த சொல் ஒரு நாள் அம்பலம் ஏறிவிட்டது.

ஏழை சொல் அம்பலம் ஏறிற்று--அதற்கு விளக்கமாக அமைந்துள்ள சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன்.

## ஏழை

அம்பலவாணன் மிகவும் ஏழை—ஏழையா, பிச்சைக்காரன்! பொன்னூர் முருகர்கோவில் வாசற்படியிலே அமர்ந்து பிச்சை ஏற்பதுதான் அவனது பழக்கம்.

பிச்சை யெடுப்பதிலேயே அவன் புது ரகம்—வருகிற பிச்சையில் தனக்குப்போக மிகுதியை அன்றன்றுடம் மற்றப் பிச்சைக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவான்.

மாலையானால் கோயிலைச் சுற்றிவருவான்—முருகனைத் தரிசிப்பான். ஆனால் திருநீறு அணிய மாட்டான்.

பாடுவான்—ஆடுவான்—ஆனால் கடவுள் பெயர் கூறி கயமைத்தனம் புரிபவரைச் சாடுவதாகவே அவன் பாடல்கள் இருக்கும். சிலருக்கு அவனைக் கண்டாலே எரிச்சல்—வேறு சிலருக்கு உள்ளூர மகிழ்ச்சி—எப்படியோ, அவன் பிச்சைக்காரப் பிழைப்பு நடந்துவந்தது.

## சொல்

அந்த ஊர் முருகர் கோயில் அந்த வட்டாரத்திலே சக்திவாய்ந்த கோயில் எனப் பாராட்டுவர். தீராதவினை யெல்லாம் தீர்த்துவைத்துவிடுவான் எனக் கார்த்திகைதோறும் ஆயிரக்கணக்கான மக்கள்

---

அழுக்கு ஆடையை எடுத்து உடுத்திக் கொண்டு, முன்னதைமடித்து வைத்து பின் வெளியில் போகும் போது அதை அணிந்து கொள்ளுகின்றார்கள். வீட்டில் ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதை விட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளட்டும், பிறகு பெண்களும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ளுவர்.

இந்த உண்மையை உணர்ந்து உணர்த்திய ஒரு புலவர் பாடிய பாட்டு புறநானூற்றில் இருக்கிறது. என்ன, இந்தக் கருத்து புறநானூற்றிலா என்று திகைக்க வேண்டாம்.

பகைவன் போர்ப் படையுடன் வந்து தாக்க வெளியில் முற்றுகை இட்டிருந்த போது கோட்டைக்குள் அடைந்து கிடந்தான் நெடுங்கிள்ளி. அதனால் மக்கள் எவ்வாறெல்லாம் துன்பமுற்று வருந்துகின்றனர் என்பதனை எடுத்துச் சொல்லிடும் போது

> பாலில் குழவி அலறவும் மகளிர்
> பூவில் வறுந்தலை முடிப்பவும்......

என்று பாலில்லாமல் குழவி அலறுவதும் மகளிர் பூ இன்றித் தலை முடிப்பதும் பொறுத்தற்கரிய துன்பங்கள் எனக் காட்டுகின்றார். தலையில் பூ முடிப்பது என்றால் வாழ்க்கை நிறைவு எய்தியதோடு மட்டுமல்லாமல் அவர்கள் ஒப்பனைக் கலையில் தேர்ந்தவர்கள் என்பதனை விளக்குவதாகும்.

குழந்தைகளுக்குப் பால்—மகளிர்க்கு ஒப்பனை—இருந்தால் வாழ்க்கை நிறைந்தது எனப் புறநானூறு புகலுகின்றது.

இந்தப் பின்னணியைக்கொண்டு இப்போது அலங்காரக் கலையைக் காணுவோம். அலங்காரக் கலை அவசியமானது என்பதனை உணருகின்றோமே யன்றி ஆடம்பரம், பொழுதுபோக்கு என்று ஒதுக்கி விட இயலவில்லை.

ஆனால் எதுவும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சு தானே? அதைப்போல ஒப்பனைக் கலையும் குறையாது கூடாது வேண்டிய அளவுதான் இருக்கவேண்டும் என்பதனை உணர்ந்தால் நன்மை.

பொங்கற் புதுநாளில் இந்தப் புதிய கோணத்தில் நின்று அலங்காரக் கலையைக் காணுவோம்; பொலிவு பெறுவோம்.

★

கூடுவர். சந்தனக் குழம்பு வாங்கிப் பூசிக்கொள்வர். குழந்தைகளுக்கு இங்குதான் மொட்டையடிப்பது பழக்கம்—காதும் குத்துவர்.

முருகன் கோயில் பூசாரி முருகாண்டிக்கு அமோக மான செல்வாக்கு. அவன் அந்தக் கோயில் பூசாரி யான பிறகுதான் சொந்த வீடு கட்டினன். நான்கு காணி நஞ்சையும், இரண்டு காணி புஞ்சையும் வாங்கினன். சாதாரண உருத்திராக்கமாலை, தங்கத் தகடு வைத்த மாலையாயிற்று.

முருகாண்டிக்கு இவ்வளவு 'மவுசு' வந்ததற்குக் காரணம் என்ன? அவன் முருகன்கோயில் பூசாரி யானவுடன் குழந்தைகளுக்கு மொட்டையடிப்பதில் ஒரு புதுத் திட்டம் போட்டான். அதாவது நாலு சக்கரம் போட்ட ஒரு வண்டி செய்தான். அந்த வண்டியில் மொட்டையடிக்கவேண்டிய குழந்தையை வைத்துத் தள்ளிவிடுவான். கற்பக்கிருகம் பக்கம் ஓடும். குழந்தை காணமல் போய்விடும். அரை மணிநேரம் கழித்து, குழந்தைக்கு மொட்டையடித்து, சந்தனம் பூசி, காது குத்தவேண்டுமென்றல் காதும் குத்தி, கையில் வேலும் கொடுத்து, குழந்தை வரும். இந்தத் திட்டத்தினல்தான் முருகாண்டி அவ்வளவு செல்வாக்குப் பெற்றன்.

விசித்திர பிச்சைக்காரன் அம்பலவாணன், இந்த திட்டத்தைக் கிண்டல் செய்தே பாட்டு பாடு வான். அதனலேயே முருகாண்டி, அவனை அந்த ஊரைவிட்டே துரத்திவிட முடிவுசெய்தான்.

ஊரைக் கெடுக்க வந்தான் ஓர் ஆண்டி
அவன் பேரு முருகாண்டி
மொட்டை யடிக்கிருண்டி—அவன்
மூலை அறையிலே ஆளைவைத்து
காது குத்தருண்டி அவன்
காசுக்குப் பத்தனை அடிமையாக்கி
கேடுகெட்ட இந்த ஜனங்களுக்கு
கேட்கிற புத்தி இல்லே, இல்லே
இந்த ஏழையின் சொல் அம்பலம்
ஏறும் நாள் எந்த நாளோ?

இந்தக் கருத்தில் அவன் பாடுவான். ஊரார் முதலில் அலட்சியமாக நினைத்தனர். பிறகு யோசிக்க ஆரம்பித்தனர்.

## அம்பலம்

பெயர்தான் அம்பல வாணண். ஆனல் அவன் சொல்லுக்கு எந்த அம்பலத்திலும் மதிப்பில்லை. அம்பலம் என்றல் அவை என்று தானே பொருள் கூறுகின்றனர். முன்பெல்லாம் அம்பலத்தில் நிறைந் திருந்தவர்கள் வைதீகப் பிடிப்பும், மூட நம்பிக்கை யில் முரட்டுத் தொடர்பும் கொண்டவர்களே. காலம் தான் மாறி வருகிறதே — எவ்வளவு சிற்றூராக இருந்தாலும், பகுத்தறிவு வாடையடிக்கும் ஒரு வாலிபன் இல்லாமலிருப்பதில்லையே! பொன்னூரி லும் அத்தகைய வாலிபன் இருந்தான். அவன் பெயர் அறிவரசன் அவன் மணமாகி இரண்டாண்டு களுக்குப் பிறகு ஒரு அருமைக் குழந்தையைப் பெற் றெடுத்திருந்தான். அவன் மனைவி மலர்விழிக்குத் தன் குழந்தை மணிக்கு மொட்டையடித்து, காதுகுத்தி விழாக்கொண்டாட வேண்டும் என்ற ஆசையை அவளுடைய தாயார் தூண்டிக்கொண்டிருந்தாள். அறிவரசனிடம் இது பற்றிச் சொல்ல ஆரம் பித்தாள்.

பிச்சைக்கார அம்பலவாணன் மீது அறிவரசனுக்குத் தனிப்பிரியம்—அவன் என்ருவது ஒருநாள் இலை போட்டுச் சாப்பிட வேண்டுமென்றல் நேராக அறிவரசன் வீட்டிற்குத்தான் வருவான். அப்படி அன்றும் வந்திருந்தான். அப்பொழுது தான் கணவனும், மனைவியும் குழந்தைக்கு முடி யிறக்கி, காது குத்துவது சம்மந்தமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பலவாணன் குறுக்கிட்டுப் பேசிறன்.

'தம்பி, நல்ல சந்தர்ப்பம் — உங்கள் குழந்தை யின் முடியிறக்குகிற நாளிலேயே இந்த ஊராரின் மூட நம்பிக்கையின் முடியும் இறக்கப்படட்டும். அதற்கு நான் ஒரு வழி சொல்லுகிறேன். அதன் படி நடந்தா யானல் எல்லாம் நினைத்ததுபோல் முடியும் என்றன்.

அறிவரசனுக்கு அம்பலவாணன் கூறியது மிகவும் பொருத்தமாகப்பட்டது. உடனே, அவன் கூறிய திட்டப்படி நடக்கச் சம்மதித்தான்.

## ஏற்றம்

பொன்னூர் மக்கள் அனைவருமே அன்று முருகன் கோயிலில் கூடிவிட்டனர். அதுவும் நாத் தீகம் பேசி வந்த அறிவரசன், அறிவு தெளிந்து தன் குழந்தை மணிக்கு முருகர் கோயிலில் மொட்டை அடிக்கிருன் என்றல், ஏன் கூடமாட்டார்கள்? எப்பொழுதுமே, முருகாண்டி ஏக அமர்க்களமாக இருப்பான்—அன்று அவன் ஆர்ப்பாட்டங்களுக்கு அளவே இல்லை. அவன் தனக்கு ஒரு பெரிய வெற்றி நாளாகவே அன்றைய தினத்தை எண்ணிக் கொண்டான்.

முருக பூசை வெகு தடபுடலாக நடந்தது— குழந்தையை வாங்கினன் — சகடத்தில் வைத்தான். 'ஏ முருகா, பழனியாண்டவா, செந்தில் வேலா, குழந்தையைக் கைலாயத்திற்குக் கொண்டு போடா' என்று பெருங்குரலெடுத்துக் கூறினன். சூடம் எரிந்தது — சாம்பிராணி புகை 'கம்'மென்று எழுந்தது. சகடம் உருண்டது.


கால்மணி நேரந்தான் கழிந்திருக்கும். என்ன விந்தை! என்ன ஆச்சரியம்! ஒரு சகடத்தில் குழந்தை மணி கை கொட்டிச் சிரித்துக்கொண்டிருந் தான். மற்ற இரண்டு அடியாட்கள் கை கால்கள் கட்டப்பட்டு, வாயில் துணியும் கொடுக்கப்பட்டிருந் தனர்--மூன்று சகடங்களையும் ஏழை அம்பலவாணன் இழுத்து வந்தான்.

கூடியிருந்தோர் வியப்பால் வாயடைத்துப் போய்விட்டனர். முருகாண்டி ஓடுவதற்கு எத்தனித் தான்—அம்பலமா விடுபவன்? அவனையும் பிடித்துக் கட்டச் சொல்லி விட்டான்.

'பொன்னூர் பெரியோர்களே, தாய்மார்களே, ஏழை அம்பலம் பேசுகிறேன். கேளுங்கள்—பிச்சைக்

காரன் பேச்சு என்று இத்தனை நாள் தள்ளிவிட்டீர்கள்—இன்று தள்ளிவிட மாட்டீர்கள் என நம்புகிறேன்.

எனக்கு பூசாரி முருகாண்டியின்மீது, வந்த நாளிலிருந்து நம்பிக்கையில்லை. அதுவும் குழந்தைகளுக்கு மொட்டையடிக்க கைலாசத்திற்கு அனுப்புகிறான் என்பது சுத்தப் பித்தலாட்டம் என்று எண்ணினேன். அதனால் அதனை நிரூபிக்க வேண்டும் என்றும் உறுதியெடுத்துக் கொண்டேன்.



மாலையானதும் கோயிலை வலம் வர ஆரம்பித்தேன்.

மூலை அறையொன்றில் பேச்சுக் குரல் கேட்டது. அதையும் கவனிக்க ஆரம்பித்தேன்.

இரவு நேரங்களில் அங்கேயே படுக்கவும் தொடங்கினேன், இந்த இருவருக்குமிடையே ஏற்பட்ட சச்சரவுகளெல்லாம் என் காதில் விழுந்தது.

இதோ, இருக்கிறானே, இவன், கொலைகார நாகப்பன். இவன், முகக்ஷவரம் செய்வதுபோல் நடித்து இரண்டு வருடங்களுக்கு முன் பிச்சையாண்டித் தேவரைக் கொலை செய்தவன். கொலை நடந்த நாளிலிருந்து இவன் கிடைக்கவே இல்லை. கொலை நடந்த இரவே பூசாரியிடம் அடைக்கலம் புகுந்தான். அவனுக்கு ஏற்ற வேலை குழந்தைகளுக்கு மொட்டையடிப்பது எனமுடிவு செய்தான்.



இதோ, நிற்கிறானே, தங்கந் திருடி தானப்பன், இவன் கள்ளத் தங்கம் கடத்திய வழக்கில் கைதாகித் தப்பியோடி வந்தவன். இவனும் பூசாரியிடம் அடைக்கலமாய் வந்து சேர்ந்தான். இவனுக்கு ஏற்ற வேலை குழந்தைகளுக்குக் காது குத்துவது என்று அந்த வேலையைத் தந்தான்.

இவனுடைய சூது வேலையை அவர்கள் சொல்ல முடியாது—அவர்களுடைய குற்றங்களை இவன் சொல்லக்கூடாது—இந்தக் கூட்டு ஒப்பந்த நிலையில் இந்த மொட்டையடிக்கும் திட்டம் நடந்து வந்தது. அதிலேயும் பூசாரிக்குத் தெரியாமல் திருட்டு பாருங்கள். தானப்பன், இங்கிருந்து அனுப்பப்படும் குழந்தைகள் அணிந்திருக்கும் நகைகளைப்போல் பித்தளையில் செய்து, தங்க நகைகளை உருவிக்கொண்டு, பித்தளை நகைகளைப் போட்டு வந்தான். இந்தத் திருட்டு வெளிப்படாது என்று அவன் நம்பினான். ஏனெனில், கைலாயத்திற்குச் சென்று வந்த நகையை யாரேனும் அழிக்கவோ, மாற்றவோ விரும்புவரா?

ஏழை அம்பலம இதைக் கண்டுபிடித்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. ஆனால் என் சொல்லை ஏற்பார்யாருமில்லை.

**ஊரைக் கெடுக்க வந்தான் ஓர் ஆண்டி**

அவன் பேரு முருகாண்டி
மொட்டை அடிக்குறாண்டி அவன் ஊரை
மூலையறையிலே ஆளை வைத்து
காது குத்துறாண்டி அவன்
காசுக்குப் பத்தனை அடிமையாக்கி
கேடு கெட்ட இந்த ஜனங்களுக்கு
கேட்கிற புத்தி இல்லை, இல்லை
இந்த ஏழையின் சொல் அம்பலம்
ஏறிய நாளும் இந்த நாளே!

ஊரார் அம்பலவாணனை வாயாரப் புகழ்ந்தனர். முருகாண்டியை அடித்துத் துன்புறுத்த எல்லோரும் நெருங்கினர். அம்பலவாணன் அனைவரையும் தடுத்து நிறுத்தினான்.



'ஊரை ஏமாற்றிப் பிழைக்காதே--உழைத்துப் பிழை' என்று அறிவுரை கூறி அனுப்பிவைத்தான், முருகாண்டியை. அறிவரசன், மலர்விழி, அவள் தாய், மணி, ஆகியோர் அம்பலவாணனுக்கு நன்றி தெரிவித்துத் திரும்பினர்.

கூட்டம் கலைந்தது- அன்று முதல் பொன்னூரில் பகுத்தறிவியக்கம் தலையெடுத்தது.

★

# திருட்டுத் தாலி

க. அன்பழகன் M.A., M.L.A.

இந்தியத் துணைக்கண்டத்தின் பேரரசு 'சுதந்திரம்'—பெற்றதன் விளைவாக ஆட்சித் துறையில் பலப்பல மாற்றங்களை, அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம் இடம்பெறச் செய்து நிறைவேற்றி வருகிறது. அவைகளுள், மிகவும் முக்கியமானதும், எல்லா மக்களுடைய கவனத்திற்கு உரியதுமாக இருப்பது 'ஆட்சிமொழி' மாற்றமேயாகும்.

சுதந்திரம் பெறும்வரை ஆட்சிமொழியாக இருந்தது ஆங்கிலம். சுதந்திரம் கிடைத்ததன் பயனாக அதில் ஒரு மாற்றம் காணவேண்டாமா? என்ற எளிய ஆசையினாலேயே பலப்பல மொழியினரும் ஒரு புது ஆட்சி மொழி வருவதுதான் சுதந்திரத்தின் அடையாளம் என்ற கற்பனையில் ஆட்பட்டனர்.

அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட வெறுப்பு அந்த ஆட்சியுடன் வந்து சேர்ந்த மொழியிலும் பாய்ந்தது. ஆங்கில மொழி அக்காலத்தில் ஆதிக்க மொழியாக இருந்தது என்பதும், ஆங்கிலத்திடம் பொதுமக்கள் வெறுப்படையக் காரணமாயிற்று.

உத்தமர் காந்தியடிகளோ அந்நியர் ஆட்சியை ஆதிபத்தியத்தைத்தான் எதிர்க்கிறோமே தவிர, அந்நிய மக்களை அல்ல என்றார்—என்றாலும் எதிர்ப்பு 1942 ஆகஸ்டு மாதப் போராட்டத்தில்—ஆங்கிலேயர்கள் முகத்தில் திராவகங் கொட்டுமளவிற்குச் சென்றது. அந்நியன் சுரண்டலைத்தான் எதிர்க்கிறோமென்று சொன்ன தேசியத் தலைவர்கள்—கிளாஸ்கோ மல்லுக்கு நெருப்பை வைக்கத்தானே செய்தார்கள்? அப்படியே ஆதிக்க வெறுப்பு—ஆங்கில வெறுப்பாகவும் பரவியது. அதனால் ஆங்கிலமொழியின் சிறப்பினையும்—மேன்மையினையும்—நன்மையினையும்—பயனையும் பலரும் மறந்தனர்.

அவரவர் தாய்மொழியின் இடத்தை ஆங்கிலம் பிடித்துக்கொண்டிருந்ததால்—ஏற்பட்ட பகை நோக்கு, ஆங்கிலத்தினை விரட்டுவதிலேயே பதிந்துவிட்டது. பகைவனொருவனுடன் சண்டையிட்டுக் கொண்டுள்ள நேரத்தில்—மூன்றாவது வீட்டான் ஒருவன்—வீட்டிற்குள் நுழைந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போவதைப்போல-ஆங்கிலத்தை விரட்டும் வெறிநோக்கு வளர்ந்த சமயத்தில் நமக்கு அந்நியமான இந்திமொழி நுழைந்து அந்த ஆதிக்கப் பீடத்தில் ஏற வழிதேடிற்று. உத்தமர் காந்தி அடிகள் போன்றார்—ஒற்றுமையாக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட ஒரு தேசியமொழி, பொது மொழியாக வேண்டுமென்று பேசியதும்—அவரிடத்தில் மக்களுக்கிருந்த மதிப்பும்—நம்பிக்கையும் அக்காலத்தில் வளர்ந்திருந்த தேசியக் கனலும் அவர் சொன்ன கருத்தை—வலுப்பெறச் செய்தன. ஆனாலும் இடையே எத்தனை தடுமாற்றங்கள்? காந்தியடிகள் தேசியப் பொதுமொழியாகத் தக்கது என்று கருதியதும்-கூறியதும் இந்துஸ்தானிதான். இன்று ஆக்கப்பட்டிருப்பதோ இந்தி! இந்துஸ்தானி அல்ல.

இந்தியில் சமஸ்கிருதச் சொற்கள் நிரப்பப்பட்டு—பாமர மக்களிடம் இருந்து விலகி நிற்கும் பண்டிதர்கள் மொழியாக வளர்ந்து வருகின்றது.

இந்தியாவின் தேசீயப் பொது மொழியாக இந்தியைத் தீர்மானித்ததுங்கூட மக்களால்—தமது ஆட்சியை நடத்துவதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அல்ல. காங்கிரஸ் தலைவர்கள் பொறுக்கி எடுத்துக்கொண்ட பிரதிநிதிகளைக் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் அசெம்பெளி (பொறுக்கப்பட்டோர் குழு)யிலேயே—இந்தி ஆட்சி மொழியாகுந் தகுதியை அரசியல் நிர்ணய சட்டத்தால் தேடிக்கொண்டது. அந்தச் சட்டமும் அரசியல் நிர்ணய மன்றத்தில் இயல்பாக—நேரடியாகக் கொண்டுவரப்பட்டு, எவரும் தம் விருப்பம்போல் வாக்களிக்கும் நிலையில் நிறைவேற்றிய ஒன்றன்று. கட்சிக் கட்டுப்பாட்டினாலேயே சட்டமாக நிறைவேறும் வாய்ப்பினைப் பெற்றது. அரசியல் நிர்ணய மன்றத்தில் முற்றும் நிரம்பியிருந்த காங்கிரஸ் கட்சியினரின் தனிக் கட்சிக் கூட்டத்தில் இந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றிய தீர்மானம் விவாதிக்கப்பட்டு—அதில் தோல்வியடைந்த பின்னர், தலைவராக இருந்த இராசேந்திரரின் ஒரு வாக்கால் நிறைவேற்றப்பட்டு—அதனாலேயே—முதலில் எதிர்த்தவர்களின் அவ்வளவு வாக்குகளையும் அரசியல் நிர்ணய மன்றத்தில் ஆதரவாகுமாறு செய்துகொண்ட பிறகே சட்டமாக்கப்பட்டது.

அரசியல் நிர்ணய மன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பெரும்பாலோர் வடநாட்டினரே—இருந்தும் ஆதரவாக 78-வாக்குகளும். எதிராக 78-வாக்குகளுங் கிடைத்ததென்றால், என்ன பொருள்? வடநாட்டிலேயே பலர்—காங்கிரஸ்காரர்கள்கூட இதற்கு உடன்படவில்லை என்பதுதானே? ஒன்று இயல்பாக ஏற்றுக்கொள்ளப்படுவதானால் இந்த நெருக்கடி விளைந்திருக்காதன்றோ? நெருக்கடியைத் தவிர்க்க மறுமுறையும்—கட்சியைக் கூட்டி வாக்கு

ஏடுக்கப்பட்டபோதும் அதே முன்னைய 'சமநிலை' தோன்றியதெனில் ஆட்சி மொழி பற்றி 'இந்திக்கு' ஆதரவு இல்லை என்பதுதானே பொருளாகும்?

ஆடவன் ஒருவன், ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பி வெறிகொண்டு அலைகிறான்—அவளோ அவனை அடியோடு வெறுக்கிறாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு புரோகிதனைத் துணை வைத்துக்கொண்டு ஒரு தாலிக் கயிற்றை அவள் கழுத்தில் கட்டிவிட்டால் மட்டும் அவள் மனைவியாகிவிடுவாளா? அது 'திருட்டுத் தாலி தானே?' தாலி கட்டப்பட்டது என்பதற்காக மட்டும் எவள்தான் தாரமாகிவிடுவாள்? அதுபோன்றே 78—78 ஆகப் பிரிந்து நின்ற கட்சிக் கூட்டத்தில்—தலைவர் இராசேந்திரபிரசாத் — தமது வாக்கை— இந்திக்கு ஆதரவாகத் தந்து அந்த மொழி "ராஷ்ட்ர பாஷை"யாக வழிவகுத்தார். பிரசாத் ஒருவர் வாக்கு—இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் வல்லமையை அவர்கட்கு அளித்துவிட்டது. 'தாழ்ப்பாள் திறந்திருந்தது — அதனாலேதான் உள்ளே நுழைந்தேன்' என்று கள்ளன் சொல்வதில்லை; அதைப்போன்றே என் வாக்கால் நிறைவேற்றும் வாய்ப்பிருந்தது — எனவேதான் நிறைவேற்றினேன் என்று ராஷ்டிரபதி—பிரசாத் கூறவில்லையே தவிர—உண்மை அதுதானே ?

தனியொரு மனிதரின்—விருப்பத்தால்—ஆசையால்—வாக்குரிமையால்—ஒரு பெருந்துணைக் கண்டம் கொடியதொரு தொல்லைக்கும், துன்பத்திற்கும் ஆளாகியுள்ளது. இந்தி—இந்தியாவின் 'ராஷ்டிர பாஷை!' அதைச் சாதித்தவரோ இந்தியாவின் ராஷ்டிரபதி. இந்திய ஆட்சி மொழியாக இந்தி வருவதுபற்றி—ஒரே கட்சி ஆதிக்கம் வளர்ந்திருந்தும்—வடநாட்டவரே—பெரும்பாலோராய் இருந்தும் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலேயே ஆதரவிற்கு ஈடான எதிர்ப்பு இருந்ததென்றால்,—அக்கட்சிக்கு வெளியில், பொதுமக்களிடத்திலும், நல்லறிஞர்களிடமும்—தென்னாட்டிலும், வங்கத்திலும்—மராட்டியத்திலும், எவ்வளவு எதிர்ப்பு இருந்திருக்கும் என்பதைச் சிந்திப்போர் உணரலாம்.

வல்லவன் கையில் இருந்ததாலேயே—அந்த இரண்டு சாண் கயிறு ஒரு நிமிடத்தில் தையலின் கழுத்தில் தாலியாகி விடவில்லையா ?-அதுபோன்றே —சந்தர்பவசத்தால் — சதியால் — சர்வாதிகார மனப்போக்கால்—இந்தி, அந்த மேலான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

ஒரு தனி மனிதரின் ஆசைக்காக—32 கோடி மக்களைக் கட்டுபடச் செய்யும் ஒரு திட்டம் சட்டமாக்கப்பட்டுளது. ஒரு மனிதரின் விருப்பத்தால் 14 மொழி வழி இனமக்களை — இந்தி மொழிக்கு அடிமைப்படுத்தும் அதிகாரம்—சதிகாரச் சட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்தி மொழி பேசும் மக்கள் அந்த மொழியை ராஷ்டிர பாஷையாக்கும் வெறியில் அலைந்தனர், அலைகின்றனர். ஆனால் அவர்களோ அன்றும் இன்றுங்கூட எண்ணிக்கையால் பெரும்பான்மையினரல்ல. எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்ட, சேராத மொழியினரை எல்லாம் சேர்த்துக் கூட்டி, இந்திப் பட்டியலில் அடைத்துக் கணக்கெடுத்தாலும் —மொத்தம் 14 கோடியேதான். பிறமொழி பேசுவோரோ 20 கோடி! எனினும் இந்தியாவில் பேசப்படும் மொழிகளுள்—பெருந்தொகையினரால் பேசப்படுவது என்று காரணங் காட்டி—பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெருமலேகூட இந்தி ஆட்சிப் பீடத்தில் ஏற்றப்பட்டுவிட்டது.

இந்தியாவிற்கோ தேசிய மொழிகள் ஒன்றல்ல —பதினான்கு. தேசிய மொழி ஒரு நாட்டு மக்களை ஆளும் மொழியாக இருக்கமுடியும். அவரவர் தாய் மொழிதான் அவரவர் வாழும் நாட்டிற்கு ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை —அந்தந்த வட்டார மொழிகளே நிறைவேற்ற முடியும். தமிழ் நாட்டில் தமிழும், ஆந்திர நாட்டில் தெலுங்கும்போல — அவ்வந்நிலத்து மொழியே— அவ்வந்நாட்டு மக்களின் உரிமையை — இலட்சியத்தைப் பூர்த்திசெய்ய முடியும். அதே முறையில் இந்தி பேசப்படும் வட்டாரத்திலும் இந்தியே தேசிய மொழி. அதுவே அங்கு ஆட்சி மொழியாக இருப்பதும் நியதி. ஆனால் அனைத்து மொழி வட்டாரத்தினரும் தேசிய மொழிகளுள் ஒன்றான இந்தியைச் சட்டப்படி ஆட்சி மொழியாக ஏற்கவேண்டும் என்பது அவசியமுமன்று—நீதியுமாகாது.

பல தேசிய மொழிகள்—14 மொழிகள் அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படியானால் ஒவ்வொரு தேசிய மொழியும் வழங்கும் இடத்தில் மற்றொரு தேசிய மொழி எப்படி இடம் பெற முடியும்? ஒவ்வொருவருக்கும் பெற்றெடுத்த அன்னை ஒருத்தியாகத்தானிருக்க முடியும். ஒருவருக்கு மேற்பட்டு உண்மைத் தாயார் இருக்க முடியாது—அதுபோன்றே ஒவ்வொரு குடிமகனுக்கும் மகளுக்கும்—தேசிய மொழி—நாட்டு மொழி ஒன்றுதானிருக்க முடியும். தாய் மொழி தவிர்த்த மற்றொரு மொழி தேசிய மொழியாக முடியாது. எந்தத் தேசியத்தைக் காக்கவும் அது பயன்படாது. ஆனாலும் இந்தி இப்பொழுது புகுத்தப்படுகின்றதே, ஏன்? இன்றே இந்தியைப் புகுத்திவிட்டால்தான் அந்தந்த வட்டார தேசிய உணர்ச்சி வளர்ந்து, அவரவர் மொழி வழி உரிமை வாழ்வில் வேட்கை பெறுவதற்கு முன், அந்தந்தத் தனி மொழி வழி இன அடிப்படைகளை மறைத்தும் — குலைத்தும் சீரழித்தும் — இந்தியாவின் முழுப் பரப்பிலும் — இந்தி மொழி தேசியத்தை நிலைபெறச் செய்து— இந்தி மொழியினரே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற பேராசையினாலேயே யாகும்.

எனவே இந்தி தேசியம் என்றும் அதுவே இந்தியாவின் இயல்பான தேசியம் என்று பிறநாட்டவரை மயங்கச் செய்யவுமே இம்முயற்சி. பிற மொழிகளின் — தனி வாழ்வுரிமைகளை — இந்தி வெள்ளத்தில் ஆழ்த்திடலாம் என்பதே அவர்தம் நோக்கம். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துவிடச் செய்யும் முயற்சி. ஆனால் முடியுமா? ஒரு


குறித்தகாலத்தில்
போட்டோ எங்கிரேவிங்
ப்ளாக்குகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
பித்தளை சைன் போர்டுகள்
முதலியன
உயர்ந்த முறையில
தயார் செய்கிறோம
S.S.S.ப்ரதர்ஸ்
போட்டோஎங்க்ரேவர்கள்
153 ப்ராடவே. மதராஸ
போன். 55,116

மத்திய ஆட்சி மொழி வேண்டுமெனில் — அவற்றுள்ளே ஒரு மொழிக்கு மட்டும் அங்கிலே எப்படிப் பொருந்தும்?

ஆகவே மத்திய ஆட்சி மொழியாக இருப்பதற்கு வேண்டிய தகுதி—தேசீய மொழியென்ற ஒரு காரணத்தாலேயே ஒரு மொழிக்கு வழங்கப்பட முடியாது. அது இந்தியாவிலுள்ள எல்லா மொழிகட்கும்—மக்கட்கும் சமமாகப் பயன்படும் சிறப்புடைய பொதுமொழியாக இருக்கவேண்டும்.



தேசீயம் என்ற பெயரில் நடத்தப்படும் மத்திய ஆட்சியின் கற்பனைத் தேசியத்திற்கு ஆற்றல் அதிகமா என்பது சோதனைக்கு ஆளாகியே தீரும். கற்பனைத் 'தேசீயம்' நிலைகுலையாமற் போகாது.

ஆங்கிலம் — இயல்பாகவே — இந்தியாவில் கற்றவர்களிடையே பொதுமொழியாக நிலவி வருவதாலும் 'விஞ்ஞான' வளர்ச்சியுடன் இயைந்து வளரும் மொழியாக உள்ளதாலும் — நல்லாட்சிக்குத் தேவையான வளப்பம் அனைத்துங்கொண்ட மொழியாக இருப்பதாலும் — ஏற்கனவே இந்தியாவில் ஆட்சிமொழியாக நின்று இன்றும் நிலவி வருவதாலும், மேலும் பலமடங்கு சிறப்பான உரிமை பெற்றதாகின்றது. இந்தியாவைப் பொறுத்த வரையில்—பொது ஆட்சிமொழியாக இயங்க ஆங்கிலத்திற்குள்ள இயல்பான வாய்ப்பும்—சிறப்பான தகுதியும்—வேறு எம்மொழிக்குமே யில்லை.

அந்நிய மொழி என்போர் — அந்நியர் நம்மிடையே பரவவிட்டதை எல்லாம் விலக்கிவிட்டோமா? என்று எண்ணிப் பார்க்கவேண்டும். தபாலும் தந்தியும்—வானொலியும்-தொலைக் காட்சியும்—காரும் — ரயிலும் — கப்பலும் — வான ஊர்தியும்—அலோபதியும்—ஹோமியோபதியும்—ஒலி பெருக்கியும்—அச்சுப் பொறியும் பாராளுமன்ற நெறியும்—ஆட்சிமுறையும் மற்றும் எண்ணிறந்தவுமான அந்நியர் கண்டுபிடித்து நம்மிடம் சேர்க்கப்பட்டவையே என்பதை ஏனோ மறந்துவிடுகின்றனர்? இராப்பும்--காலர் சட்டையும் அந்நியர் நாகரிகமாகக் கருதப்பட்டவை தானே? விதவை விவாகமும், பெண்ணுரிமையும் ஆங்கில அறிவால் விளைந்தவைதானே? ஏன் இன்றைய சுய ஆட்சியைப் பெறவே அந்த அந்நிய ஆங்கிலந்தானே வழி வகுத்துத் தந்தது என்பதை எவரே மறுக்கமுடியும்?

ஆயினும் ஆங்கிலத்தை எதிர்ப்பதுதான் ஏனோ? எதிர்ப்பவர்கள் என்ன நம்மைபோல் பைத்தியக்காரர்களா? காட்டுமிராண்டிகளா? அல்ல—அல்ல—இந்திக்கு முடிசூட்டினால்தான் தமது—ஏகாதிபத்தியம் — 'சூரிய சந்திரர்'கள் உள்ளளவும் ஏனென்று கேட்பாரற்று நிலவும் என்று கருதியே அவ்வாறு வலியுறுத்தி எதிர்க்கின்றனர். அவர்கள் அதிகார வாதிகள் — ஆட்சிபீடகர்த்தாக்கள் அல்லவோ? ஆனால் இந்திய தேசங்கள் பலவற்றிற்கும் தேசீய மொழிகளுள் ஒன்றான இந்தியே ஆட்சி மொழியானால் இந்தியர் சில காலமும் நிலைக்க முடியாது என்பதை அவர்கள் ஏனோ உணரவில்லை? ஆதிபத்திய ஆசை கண்ணையும் கருத்தையும் மறைக்குமன்றோ?

இந்நிலையில் இந்தியை எல்லாத் தேசிய இனங்களுக்கும் ஆட்சி மொழியாக்குவது-'திருட்டுத் தாலி' கட்டும் செயலேயாகும். மாபெருந் தலைவரான இராசேந்திரர் செய்ததனாலேயே—வாய்ப்பைப் பயன்படுத்தி ஜனநாயகத்தைக் கொன்று — இந்தியை ஆட்சி மொழியாக்கும் சட்டத்திற்கு வழி வகுத்த செயல் நியாயமாகிவிடாது. அவர் அரசியலில் கண்ணியம் கருதுபவரானால் தன்னால் விளைந்த தவறை அவரே திருத்தி மாற்ற முன்வரவேண்டும். சட்டத்தை மாற்றி அனைவர்க்கும் சமசந்தர்ப்பம் அளித்து மக்கள் விருப்பத்திற்கேற்ப ஆட்சி மொழியை அமைத்துக்கொள்ள இடம் தர வேண்டும்.

கூட்டத் தலைவர் இராசேந்திரர் ஒருவரின் வாக்காலேயே ஒரு மொழிஆட்சிமொழிப் பீடமேறிற்றென்றால் மத்திய அரசியலிலேயே கூட—அது கட்டாயத் திணிப்புதானே? அதனாலேதான் இந்திக் கட்டாயத் திணிப்புக்கு எதிர்ப்புப் பல வகையிலும் தோன்றிவிட்டது. கட்டாயத் திணிப்பு-"திருட்டுத் தாலியேதான்"? இராசேந்திரர் கட்டியதேயானாலும் 'திருட்டுத் தாலி' அறுந்தே தீரும்.



# அழகு முகம்

-இராதா மணாளன்-

**"வாங்கம்மா!"** என்று கடை முதலாளியே எழுந்து வந்து அவளை வரவேற்ருன்.

"ஏதாவது புதிதாக......"

"பொங்கலாயிற்றே, உங்களைப்போன்றவர்களுக்கு நல்லதா, பிடித்தமானதா தரணுமேன்னு, காஞ்சிபுரத்திற்கும் ஆரணிக்கும் போயிட்டுக் காலையில்தான் வந்தேன்! கொள்ளேகாலம் பட்டுப் புடவைகளும், ஸ்பெஷல் கிரேப் சில்க் ரகங்களும் வந்திருக்கின்றன! உட்காருங்களம்மா!" என்று ஜவுளிக்கடை முதலாளி நெளிந்து குழைந்து பேசி, நாற்காலியை இழுத்துப்போட்டான்.

அதற்குள் கடைப் பையன் ஓடிப்போய், குளிர்பானம் வாங்கிக்கொண்டு வந்தான்!




சிவகாமி கடைக்குள் அடியெடுத்து வைத்துவிட்டாள் என்ருல், அன்று குறைந்தது ஐந்நூறு ரூபாய்க்காவது வாங்காமல் போகமாட்டாள் என்பது முதலாளிக்கு உறுதியாகத் தெரியும்—ஆகவே உபசாரங்கள் பலமாக இருக்கக் கேட்கவா வேண்டும்?

சிவகாமியின் கழுத்திலிருந்த வைர நெக்லேசும், காதிலிருந்த வைரத்தோடும் லோலாக்கும் மின்சார விளக்குகளின் ஒளியில் அவளது செல்வ நிலையை ஆடம்பரச் சிரிப்போடு பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஒய்யாரமாக அவள் நாற்காலியில் அமர்ந்து ஒரு கையிலிருந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்க வளையல்களை மேலே தள்ளிவிட்டு, மற்ருெரு கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

"மூன்ருகி விட்டதா?" என்று முணுமுணுத்தபடி, கடைக்காரன் பிரித்துப்போட்ட புடவைகளைப் பார்த்தாள்.

நான்கைந்து புடவைகள் இன்று செலவழியும் என்று எதிர்பார்த்தான் கடைக்காரன். அதைப்போல இருமடங்கு அவள் தேர்ந்தெடுத்து விடவே, அவன் முகமெல்லாம் பல்லாகிவிட்டது!

கடையைவிட்டு இறங்கியவளை, "அம்மா! பசியாயிருக்கு! ஓரணக் கொடுங்கம்மா!" என்ற பிச்சைக்காரியின் குரல் தடுத்து நிறுத்தியது.

சிவகாமியின் கண்கள் அவளை உற்றுப்பார்த்தன. வயது பதினேழு பதினெட்டுத்தான் இருக்கும். கட்டான உடல், கவலை மேகங்களுக்குப் பின்ஞல் மதி முகம், கிழிந்த புடவை, வாராத தலை...... பரிதாபமான தோற்றம்!

"ஓரணவுக்கு என்னம்மா சாப்பிடுவாய்?" புன்னகையோடு சிவகாமி கேட்டாள்.

"உங்களைப்போல நாலு பேரு ஒவ்வொரு அணு கொடுத்தா......"

பிச்சைக்காரி கூறியது அதற்கு மேல் கேட்கவில்லை—அவள் சிந்தனை எங்கோ ஓட ஆரம்பித்து விட்டது.

"என் வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்! ஆனல் எதைச் செய்வது என்றுதான் புரியவில்லை!" என்று தன் கணவன் அடிக்கடி சொல்வது. இப்பொழுது அவள் கவனத்திற்கு வந்தது.

"அவருக்கு முன் அதை நான் செய்து காட்டுகிறேன்!" என்ற இதய முணுமுணுப்போடு, பிச்சைக்காரியைப் பார்த்தாள்.

"நீ என்னேடு வருகிருயா, சோறும் போடுகிறேன், காசும் தருகிறேன்!" என்ருள்.

"எங்கேயம்மா?"

"என் வீட்டிற்கு!"

"வேண்டாம்மா, ஓரணக் கொடுங்கம்மா போதும்!"

"என்னேடு நீ வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்—வரமாட்டாயா?" என்று பரிவோடு பேசியவளை, உதட்டிலே விரலை வைத்தபடி ஆச்சரியத்தோடு பார்த்தாள், பிச்சைக்காரி.

"வா!" என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு, காரை நோக்கி நடந்தாள் சிவகாமி.

ஓடிய காரில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஒருவேளை..." எதையோ நினைத்துக்கொண்டு "அம்மா! அம்மா!" என்று கத்திஞள்.

"என்ன?"

"என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் விட்டுவிடப் போறீங்களா அம்மா?" பிச்சைக்காரி அழவே ஆரம்பித்துவிட்டாள்.

"என்னைப் பார்த்தால் அத்தகைய கொடூர நெஞ்சம் கொண்டவளாகவா உனக்குத் தெரிகிறது? பயபபடாதே! உன் பெயர் என்னம்மா?"

"சாமந்தி!"

"சொந்தக்காரர்கள் உனக்கு யாருமே இல்லையா?''

"அப்பா மட்டும் இருக்கிருரு! ஏதாவது கூலி வேலை செய்து நாலணு எட்டணு கொண்டு வருவாரு! குடிசையைவிட்டு என்னை வெளியே போக விட மாட்டாரு! அப்பாவுக்கு ரெண்டு நாளா காய்ச்சல்-அதனுலே...''

தேம்பிக் கொண்டே அவள் கூறியதைக் கேட்டதும், சிவகாமியின் மெல்லிய உடல் சிலுசிலுத்தது — இளகிய மனம் கவலையில் விழுந்து அழுந்தியது.

"வருந்தாதே சாமந்தி! இன்று முதல் உன் வாழ்க்கையே மாறிவிட்டதென்று நினைத்துக் கொள்! நீ புது வாழ்வு பெறப்போகிருய்!''



ஒன்றும் புரியாமல் பிச்சைக்காரி ஏறிட்டுப் பார்த்தபோது, கார் பெரிய பங்களாவினுள் நுழைந்தது.

காரை விட்டு இறங்கியதும் பங்களாவிற்குள் நுழையத் தயங்கிய சாமந்தியைப் பார்த்து, சிவகாமி சிரித்தாள்.

"உள்ளே வா, சாமந்தி!''

"வேண்டாம்மா, இப்படியே இருக்கிறேன்!''

"பணக்காரர்களுக்கும் இதயமுண்டு — எல்லாப் பெண்களும் சகோதரிகள் என்ற எண்ணமுண்டு — சுயநலத்தைவிடப் பிறர் நலத்தில் நாட்டமுண்டு— என்பதை உலகத்திற்குக் காட்டப் போகிறேன் நான்! உன்னைப்போல நானும் பெண்தானே—பயப்படாதே வா, சாமந்தி!'' என்று கலக்கத்தோடு நின்றவளின் கையைப் பிடித்து, பங்களாவுக்குள் அழைத்துச் சென்ருள்.

மாடி அறையினுள் நுழைந்ததும், "உட்கார் இப்படி!'' என்று நாற்காலியைக் காட்டினுள்.

"அதுபோலெல்லாம் உட்கார்ந்து பழக்கமில்லை அம்மா!'' என்று நாணத்தோடு தயங்கித் தயங்கிக் கூறியவளைப் பார்த்து, சிவகாமி கலகலவென்று சிரித்தாள்.

சாமந்தி தன்விழிகளை உயர்த்தி, அந்த விசாலமான அறையில் நோட்டம்விட்டாள், வெளிர் பச்சை நிறச் சுவர்கள், சுவர்களில் மாட்டப்பட்டிருந்த தங்க நிறச் சட்டம் போட்ட வண்ண ஓவியங்கள், ஜன்னல்களில் அசைந்தாடிக்கொண்டிருந்த பட்டுத்திரைகள், மேலே சுற்றும் விசிறி, வெல்வெட் விரிப்புக் கொண்ட தாழ்வான கட்டில், மேஜைமீது விதவிதமான பொருள்கள், ஆள் உயரத்திற்கு முகம் பார்க்கும் கண்ணுடியோடு கூடிய பெரிய பீரோ......அவளுக்கு மயிர்க் கூச்சல் எடுத்தது!

ஏதோ ஓர் அச்சம் அவள் உள்ளத்தில் விழுந்து கவ்வியது.

"எனக்குப் பயமாக இருக்கிறது! நான்போய் விடுகிறேன் அம்மா! வெளியேபோய் விடுகிறேன்!'' என்று கை கால்கள் நடுங்க அவள் கூறினுள்.

"ஏன் இப்படிப் பயப்படுகிருய், சாமந்தி?''

"என்னமோ எனக்குப் பயமாக இருக்கிறது! என்னை விட்டுவிடுங்களம்மா, நான் போய்விடுகிறேன்!'' அவள் அழவே ஆரம்பித்துவிட்டாள்.

அவள் தோள்மீது கைவைத்து அழைத்து வந்து கட்டிலில் உட்காரவைத்து, தானும் பக்கத்தில் அமர்ந்தாள், சிவகாமி.

"சாமந்தி! ஏன் இப்படி நடுங்குகிருய்? வறுமையிலே பிறந்தோம், வறுமையிலே வளர்ந்தோம், வறுமையிலேயே புரண்டுகொண்டிருந்தோம்— அந்த வறுமை நம்மை விட்டுவிட்டு ஓடிவிடப் போகிறதே என்று அலறுகிருயா? பைத்தியக்காரி! பயப்படாதே! என்னை நீ இன்று கண்டது, உனக்கு எவ்வளவு பெரிய அதிருஷ்டம் தெரியுமா?''

"உங்கள் பேச்சே எனக்குப் புரியவில்லையே, அம்மா?'' என்று கேட்பதைப் போலச் சாமந்தி விழித்தாள்.

"மாலை ஒன்றை ஏந்தி யானை வரும—தெருப் புழுதியில் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும் பஞ்சைச் சிறுவன் ஒருவனின் கழுத்தில் அந்த மாலையை அதுபோடும—உடனே அந்தப் பையனைக்கொண்டு போய் சிம்மாசனத்தில் உட்காரவைத்து அரசன் ஆக்குவார்கள் — என்று கதைகளில் படித்திருக்கிறேன்! ஆனுல் அத்தகைய திடீர் அதிர்ஷ்டம் உண்மை வாழ்க்கையில் யாருக்கும் ஏற்பட்டதாக நான் கேள்விப்படவில்லை! அத்தகைய அதிருஷ்டம் இப்பொழுது உனக்கு வந்திருக்கிறது!......ஆச்சரியமடையாதே சாமந்தி — உண்மையாகத்தான் சொல்கிறேன்!.........வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்யவேண்டுமென்று என் கணவர் சொல்வார். அவருக்கு முன் நானேர் புதுமை செய்து காட்டப்போகிறேன்! என் தந்தை வைத்துவிட்டுப்போய் இருக்கும் சொத்து ஏராளம்! இதைப்போன்ற பெரிய

பங்களாக்கள் பல! சிறியதும் பெரியதுமான வீடுகள் அநேகம்! பாங்கிலோ இலட்சக்கணக்கில் பணம்! இவ்வளவும் இருக்கும்; நான்—ஒரு ஏழைப் பெண்ணுக்கு ஏன் புதுவாழ்வு அளிக்கக் கூடாது? ஏன் முடியாது?.........உனக்கு ஒரு பங்களா தரப்போகிறேன்—பணம் தரப்போகிறேன்—செல்வந்தனாகவும் நல்லவனாகவும், உன் கண்ணுக்குப் பிடித்தவனுமாக இருக்கும் ஒருவனுக்கு உன்னைத் திருமணம் செய்து தரப்போகிறேன்! கடைத்தெருவில் நின்று, "ஓரணாக் கொடுங்கம்மா!' என்று கேட்ட பிச்சைக்காரி அல்ல நீ இப்பொழுது—இந்த நொடி முதல் நீ என் சகோதரி!'' என்று மூச்சுவிடாமல் பேசியவளை, கண் சிமிட்டாமல் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள் சாமந்தி. ஏதாவது கனவு காண்கிறோமா என்ற சந்தேகம் கூட அவளுக்குத் தோன்றியது.




"சாமந்தி எழுந்திரு! குளித்துவிட்டு வேறு புடவை கட்டிக்கொள்!''

இருவரும் அந்த அறையைவிட்டு வெளியே சென்றனர்.

"இதோ இருக்கிறதே சோப்பு, இதில் கொஞ்சம் கூட மீதம் வைக்கக் கூடாது-அப்படித் தேய்த்துக் குளி! இதோ புடவை! புதுப் பட்டுப்புடவை! இதைக் கட்டிக்கொண்டு வா!'' என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, குளிக்கும் அறையை விட்டு வெளியே வந்தாள் சிவகாமி.

"இரண்டு ஓவல் கொண்டுவா!'' என்று சமையல்காரியிடம் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

சிறிது நேரம் கழித்து' பட்டுப் புடவையைச் சுற்றிக்கொண்டு உள்ளே வந்த சாமந்தியைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"புடவையைச் சரியாகக் கட்டத் தெரியவில்லையே — நான் கட்டிக் காட்டுகிறேன்!'' என்று அவளுக்கு நாகரிகமான முறையில் புடவைகட்டி, சரிகை இழைகள் ஓடிய வெல்வெட் சோளி போட்டு, தலைவாரி பூ வைத்து, முகத்திற்குப் பவுடர் அடித்து, திலகம் வைத்தாள்.

"இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறாய் பார்!'' என்று அவளை இழுத்துப்போய் நிலைக்கண்ணாடியின் முன் நிற்கவைத்தாள்,

கண்ணாடியில் தெரிவது தன் உருவம்தான் என்பதை சாமந்தியால் நம்ப முடியவில்லை.

"இது உண்மை அல்ல! நான் ஏதோ பயங்கரமான கனவு காண்கிறேன்!'' என்ற சந்தேகத்தோடு தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டாள்.

"இந்தா ஓவல் சாப்பிடு!'' என்று சிவகாமி கொடுத்த வெள்ளிக் கோப்பையைப் பேசாமல் வாங்கிக்கொண்டாள்.

"சிறிது நேரத்திற்கு முன்புவரை நீ பிச்சைக்காரியாக இருந்தவள் என்று சொன்னால், இப்பொழுது யாருமே நம்பமாட்டார்கள்! ஆடை அலங்காரம் உனக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது!'' என்று அவளைச் சிவகாமி அணைத்தபடி கட்டிலில்கொண்டு போய் உட்காரவைத்தாள்.

"இங்கேயே இரு சாமந்தி, இதோ வந்துவிடுகிறேன்!'' என்று சிவகாமி மான்போல் துள்ளி அறைக்கு வெளியே ஓடினாள்.

ஒன்றுமே சரியாகப் புரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்த சாமந்தி, பெரிய தலையணை மீது சாய்ந்து கட்டிலின் தலைப்பக்க விளிம்பின்மேல் தலை வைத்தவாறு, ஒருக்களித்துப் படுத்தாள். அப்படியே தூங்கியும் விட்டாள்.

"பாருங்கள் அத்தான்—நான் சொன்னால் நீங்கள் நம்பவில்லையே?''

அந்த அறையினுள் நுழைந்ததும் தன் கணவனிடம் சாமந்தியைச் சுட்டிக்காட்டி இவ்வாறு சிவகாமி கூறினாள். செயற்கரிய செயல் செய்துவிட்டவளைப்போல அவள் முகத்திலும் குரலிலும் ஒருவித பெருமிதம் தாண்டவமாடியது.

"இவளா பிச்சைக்காரி?'' என்று அவள் கணவன், கட்டிலில் சாய்ந்து படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவளின் அருகில் வந்தான்.

வாட்ட சாட்டமான உடலும், வட்டமான முகமும், வசீகரமிக்க கண்களும் கொண்ட அவன், "நம்பவே முடியவில்லையே!'' என்றான், சாமந்தியின் முகத்தைப் பார்த்தபடி.

"புதுமைசெய்து காட்டுவதில் உங்களை நான் முந்திக்கொண்டேன் அல்லவா?'' என்று குறும்போடு கூறிப் புன்னகை செய்தவள், சாமந்தி மீது வைத்தகண் வாங்காமல் ஆர்வத்தோடு அவன்



பார்ப்பதைக் கண்டதும், புருவங்களை உயர்த்தினாள்.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! வளமான உடல்! இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

மனதில் தோன்றியதை அவன் வெளியில் கொட்டிவிட்டான்.

"நல்லவனாக ஒருவனைப் பார்த்து முதலில் இவள் திருமணத்தை முடித்துவிட வேண்டும்!"

"ஏன், நான்தான் கட்டிக்கொள்கிறேனே!"

குறும்புக்காகத்தான் இப்படி அவன் கூறினான் என்றாலும், அவள் முகம் மாறத் தொடங்கியது! இதயத்தின்மீது சாட்டையடி விழுந்தவளைப்போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஐயாவைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்!" என்று அந்த நேரத்தில் வேலைக்காரி வந்து கூறவே, அவன் வெளியே சென்றான்.

சிந்தனையோடு சாமந்தியைத் திரும்பிப் பார்த்தாள் சிவகாமி.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

கணவனின் இந்தச் சொற்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டன.

"இவள் அழகு முகம் என் அத்தானின் நெஞ்சைப் போதைகொள்ளச் செய்துவிட்டால்?"

அவள் பெண் மனதில் இருட் கோடுகள் பின்னலிட்டன.

பேதைப் பெண்ணின் சிந்தனை கொந்தளித்தது. களைத்து ஓய்ந்த கண்களுக்கு எவ்வாறு, எல்லாம் இரண்டாகத் தெரியுமோ, அவ்வாறே அவள் உள்ளத்தில் சகல விஷயங்களும் வாதமும் எதிர் வாதமுமாக, இரண்டு இரண்டாகப் பிரிந்து நின்றன.

"இவள் வாழ்வை வளர்பிறை ஆக்கப்போய், என் வாழ்வைத் தேய்பிறையாக்கிக்கொள்வதா?" என்ற உள்ளுணர்ச்சி அவள் நெஞ்சில் அலைமோதியது.

நிலைக்கண்ணாடியின் முன்பு போய் நின்றாள். அவளையும் தன்னையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!" யாரோ கடகடவென்று கர்ணகடூரமான குரலில் கெக்கலி கொட்டிச் சிரிப்பதைப்போன்ற பேரலைச் சப்தம், அவள் தலையைச் சுற்றச் செய்தது.

கண்ணை மூடியபடி ஒரு கணம் மௌனமாக நின்றாள். மறு கணம் பீரோவைத் திறந்து பத்து ரூபாய் நோட்டுகள் ஐந்தை எடுத்தாள். எடுத்ததில் நான்கைத் திரும்பவும் வைத்துவிட்டு, ஒன்றைக் கசக்கி உள்ளங் கையில் மூடிக்கொண்டு கட்டிலின் அருகில் வந்தாள்,

"சாமந்தி!"

"சாமந்தி!"

"சாமந்தி! சமாந்தி! ஏ, சாமந்தி!"

உரக்க அழைத்தும் அவள் விழிக்காததினால், உலுப்பி எழுப்பினாள்.

சாமந்தி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"இந்தா!" என்று பத்து ரூபாய் நோட்டை வெறுப்போடு அவளிடம் கொடுத்தாள்.

அதைப்பிரித்துப்பார்த்தபடி "இதென்னம்மா?" என்றாள் சாமந்தி.

"உனக்குப் பிச்சை!" கடுகடுத்த முகத்துடன் கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் சிவகாமி கூறினாள்.

"பிச்சையா?"

சாமந்தியின் முகத்தில் கவலையும் பரபரப்பும் நிழலாடின. கையிலிருந்த நோட்டுத் தரையில் விழுந்தது.

"இந்த வீட்டில் இனி ஒரு நொடிகூட நீ இருக்கக் கூடாது! வெளியே போய்விடு!" சிவகாமி உறுமினாள்.

"சரியம்மா!"

"இதை எடுத்துக்கொள்!" என்று புருவத்தை நிமிர்த்தித் தரையில்கிடந்த பத்துரூபாய் நோட்டைச் சுட்டிக்காட்டினாள், சிவகாமி.

"வேண்டாம் அம்மா!" என்று வார்த்தைகளால் அல்ல, தலை அசைவால் கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள், சாமந்தி.

வாயிற்படியை நோக்கி நடந்து சென்றவளைப் பார்த்தபடி கட்டில் மீது உட்கார்ந்த சிவகாமி, நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

★

நீங்கள் எங்கிருந்தாலும் சரி, எந்த நிலைமையிலிருந்தாலும் சரி, மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சியை வளர்த்துக் கொண்டிருங்கள். ஒற்றுமையின் தூதுவர்களாக விளங்குங்கள். இன்று உலகமும் அறிவாளிகளும் உங்களிடமிருந்து இதைத்தான் கேட்கின்றனர். அதிகமான எதையும் செய்ய முடியாவிட்டாலும், மக்கள் சமூகத்தின் பிரச்சாரகர்களாயிருங்கள். அதுவே எவ்வளவோ நன்மையைச் செய்ததாகும்.

# அறுந்த சங்கிலி

ராமலிங்கம், M.A.

**கப்பல்போல்** மிதந்துவந்த கார்,பங்களாவின் காம்பவுண்டிற்குள் திரும்பிப் போர்டிகோவில் நின்றது. உடனே டிரைவர் இறங்கிக் காரின் கதவைத் திறக்க, இராமாமிர்தம் ஐயர் காரிலிருந்த பொட்டளத்தை எடுத்துக்கொண்டு இறங்கி "முனுசாமி காரை நன்னா துடைச்சி நாளைக்குத் திருத்தணிக்குப் போவதற்குத் தயார் செய்து வை—காலையிலே 10 மணிக்கு வந்து சேரு" என்று சொல்லிக்கொண்டே ஹாலில் நுழைந்தார். முனுசாமி காரை ஷெட்டில் விடப் போய்விட்டான். ஹாலில் யாரும் இல்லாததால், ஐயர் "அலமு......அலமு... என்னடி செய்திண்டிருக்கே? இங்கே வா......எங்கே இந்த வாண்டுப் பயலையும் காணோம்......டேய் சுந்துமணி" என்று கூப்பிட்டார். அலமேலு அம்மாள் உடல் வளப்பத்தின் காரணத்தால் ஓடிவர முடியவில்லை, என்றாலும், தத்தி நடக்கும் தன் பேரனோடு ஒருவாறு அசைந்துவந்து "என்ன சமாசாரம்... இதென்ன பொட்டளம்" என்றுகேட்டாள். இராமாமிர்தம், சாவகாசமாக, மேல் அங்கவஸ்திரத்தை மற்றொரு சோபாவின்மேல் போட்டுக்கொண்டே "நம்ம மந்திரி இன்றைக்கு ஒரு ஓட்டல் திறந்தாரே தெரியுமோ! அந்த ஓட்டல் ஸ்வீட்சு ரொம்ப நன்னாயிருக்குடி...டேய் சுந்துமணி இங்கே வாடா... னோக்கு ஜாங்கிரி வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஜாங்கிரியை எடுத்துக் கொடுத்துவிட்டு, மிகுதி பொட்டளத்தை அம்மாளிடம் கொடுத்துவிட்டார். சுந்துமணி அதைச் சுவைத்துக்கொண்டே வாசல் பக்கம் பார்த்துக் கை காட்டி "பாம்...பாம்" என்று மழலை மொழி பேசினான். அலமேலு திரும்பிப் பார்த்து "அட நம்ம முனுசாமி வந்திருக்கான்; அதைச் சொல்றான்......முனுசாமி, ஜாக்கிரதையாய் திருத்தணி போய்விட்டு வாங்கோ! நான் உன் பெண்டாட்டி அலங்காரம் கிட்டே சொல்லியிருக்கேன், அவளை மூன்று நாளைக்கு இங்கேயே படுத்துக்கொள்ள" என்றாள். அதற்கு முனுசாமி "சரிங்கம்மா, நல்லது. நான் கவனிச்சுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு நகரும்போது "என்னங்க அருணாசல முதலியார் இருக்காரே, அவர் நாளைக்கு வடிவுடை அம்மன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் போகிறாராம் உங்களைக் கட்டாயம் வரச்சொன்னார்" என்று ஐயர் அம்மாள் சொல்ல, ஐயர், தன்னை நாளைக் காலையிலேயே வரச் சொல்லுவாரோ என்று திரும்பினான் முனுசாமி.

இதுவரை பாதி ஜாங்கிரியை ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருந்த சுந்துமணி திடீரென்று ஹாலின் கதவண்டை ஓடி "தாயி...தாயி..." என்று கத்தினான். எல்லோரும் திரும்பிப் பார்க்க, ஐயர் சிரித்துக்கொண்டே "ஏது? இவன் பெரிய சிக்னலர் போலிருக்கே! ஆள் வருவதற்கு முன்பாகவே இவன் கத்திடறானே...யாரு அலங்காரம் வராளா" என்றதும் "ஆமாங்க சாமி" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தாள். உடனே சுந்துமணி அவளிடம் ஓடி அவள் மடியைக் காட்டி "த்ச...த்ச..." என்று சப்புக்கொட்டினான். தினமும் தான் வாங்கிவரும் சீப்பான பிஸ்கட்டை யாருக்கும் தெரியாமல் அவனுக்குக் கொடுக்கும் பழக்கம்; இன்று அவன் கேட்டான். இதைத் தெரிந்துகொண்ட அவள், ஒன்றும் கண்டுகொள்ளாமல் "என்னடா வேண்டும் நாம் காரிலே போலாமா" என்று சமாதானம் செய்ய அவன் ஓவென்று கத்தி அவள் மடியைக் காண்பித்து அழுதான். "என்னடி வச்சிருக்கே மடியிலே —அவனுக்குத்தான் காட்டேன்" என்று அலமேலு அம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சுந்துமணி வேகமாக அவள் மடியைப் பிடித்திழுக்கவே, தொப்பென்று விழுந்தது ஒரு அறுந்த சைக்கில் சங்கிலியும் ஒரு பொட்டளமும் "ஹை..." என்று 'சுந்துமணி' கையைத்தட்டி அந்தப் பொட்டளத்தை எடுத்துக்கொண்டான். ஐயர் "என்னடி இது அறுந்த சங்கிலி ஏது? தெருவிலே இருக்கிற ஒரு தும்பு தூசியைக்கூட விடமாட்டே போலிருக்கே! முனுசாமி நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி! பார்த்தியோ அறுந்த சங்கிலி எதுக்காவது உபயோகப்படுமன்னு கொண்டு வந்திருக்கா" என்று சொல்லிக்கொண்டே சிரித்தார். அவர் சிரிப்பு அவன் உள்ளத்தைக் கிளறிவிட்டது "எத்தனை தடவை சொல்லியும் இந்தப் பழக்கத்தை இவள் விடமாட்டேங்கிறாளே என்று நினைத்துக்கொண்டே சிறிது கோபத்துடன் ஷெட் நோக்கி நடந்தான். அலங்காரம் முகத்தில் அசடு வழிய அந்தச் சங்கிலியோடு வீட்டினுள் நுழைந்தாள்.

○ ○ ○

காரைக் கழுவிவிட்டு, சில கருவிகளை எடுத்து வைத்துவிட்டு ஷெட்டைப் பூட்டி, முனுசாமி வீட்டிற்குப் போகும்போது பங்களாவில் மணி ஒன்பது அடிக்கும் சப்தம் கேட்டது. தன் பெண்டாட்டி இப்படிக் கண்ட பொருள் எல்லாம் எடுத்து வந்து சேர்க்கும் பழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே வீட்டை நெருங்க, வெளியிலேயே கதவின்மேல் சாய்ந்தபடி செப்புச் சிலைபோல் ஏக்கத்தோடு நின்றுகொண்டிருந்தாள் அவள்,

"என்ன அலங்காரம் எனக்காகவா, காத்துக் கொண்டிருக்கே, நீ சாப்பிட்டுடக்கூடாது" என்று முனுசாமி கேட்டான்.

"இல்லிங்கோ மச்சான், இன்னும் என் தங்காச்சி வரலே! சாதாரணமா ஏழுக்கெல்லாம் வந்திடுவா; மணி ஒன்பதாச்சு" என்று பெருமூச்சோடு அலங்காரம் சொல்ல "சிங்காரிதானே, அவ எசமான் தான் நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யப்போகிறாரே, ஏதாவது வேலையிருக்கும்" என்று சொல்லிக் கொண்டே படிக்கட்டு ஏறினான். "என்னங்க மச்சான்! நாளைக்கு அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் என்றால் இன்றைக்கு வீட்டில் என்ன இருக்கு, போய்ப் பார்த்துவிட்டு வாங்க மச்சான்" என்றாள். அவன் சிறிது கோபமடைந்து "அதுக்குத் தான் ஆயிரம் தடவை சொல்கிறது, இப்படி இரண்டுங் கெட்டானாக இருப்பதாலே தானே நான் எல்லாவற்றிற்கும் போகவேண்டியிருக்கு! அவளுக்கு ......" என்று சொல்லிகொண்டிருக்குபோதே, அலங்காரம் குறுக்கிட்டு "மச்சான் அதெல்லாம் அப்பாலே பேசிக்கலாம், முதலில் போய்ப் பார்த்துவிட்டு வாங்க" என்று சொன்னதும் அவன் அப்படியே கிளம்பிவிட்டான்.

○ ○ ○

"என்ன சிங்காரி நாளைக்குக் கும்பாபிஷேகத்துக்கு தவரும உங்க அக்காவோடவந்திடு தெரியுதா..."

"சரிங்க எசமான்; நான் போகட்டுங்களா, மணி ஆகுது"

"இரு போகலாம், சிங்காரி, உனக்கு யாரு இந்தப்பேரு வச்சுது ? பொருத்தமா இருக்கே"

"என்னங்க எசமான் கிண்டல் பண்றீங்க! குழந்தைகளுக்கு அப்பா அம்மா தானே பேர் வைப்பாங்கோ"

"அது தெரியும், ஒரு சமயம் உன் புருசன் வச்ச ஆசைப் பேரோன்னு பார்த்தேன்"

"சிங்காரி இதைக் கேட்டதும் கண்களில் கண்ணீர் ததும்ப "எசமான் அவரோடு நான் பேசினதுகூட இல்லையே— காலையிலே கலியாணம் ஆச்சு — சாயங்காலம் தோட்டம் பக்கம் போகும்போது பாம்பு கடிச்சு இறந்துட்டாரு" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவளால் துக்கம் பொறுக்க முடியவில்லை. தன் முந்தானையால் முகத்தை மூடி, விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள். திடீரென்று அவள் முதுகின் மீது, முரடான கை படவே திடுக்கிட்டுப் பார்த்து "எசமான்........." என்று ஒதுங்கினாள்.

"சிங்காரி... வருத்தப்படாதே திக்கற்றவருக்குத் தெய்வமே துணை- உன்னைப் போன்றவர்களுக்கு நாங்கள்தானே துணை" என்று சிறிது நெருங்கினார்.

"எசமான் என்ன இது அக்கிரமம்! இதுதானா உங்கள் தெய்வ பக்தி?"

"தெய்வபக்திக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஆண்டவன் செய்யாததை நான் செய்கிறேன். சிங்காரி! இதோ பார், எனக்கு இருக்கும் இவ்வளவு சொத்தும் ஏன் வீணாகவேண்டும்? வேண்டுமென்றால் உன் எடைக்கு எடை தங்கமே தருகிறேன்...... நீ மாத்திரம்......

"இது என்ன துலாபாரமா! பணம் எங்களுக்குப் பிரதானமில்லை. எங்களுக்கு மானம்தான் முக்கியம்"

"நான் உன் கற்பைச் சூறையாடவில்லையே...... நீயே இசைந்து என் ஆசைநாயகியாக இரு" என்று சொல்லிக்கொண்டே அவள் கைகளை எட்டிப்பிடிக்க, கண்ணாடி வளையல்கள் நொருங்கின.

○ ○ ○

வழியெல்லாம் முனுசாமிக்கு, எப்படியாவது அந்த அறுந்த சங்கிலியை வீட்டைவிட்டு வெளியே எறிந்துவிட வேண்டும். எப்படியாவது இவளையும் கண்டதை எடுத்துச் சேர்க்காதவாறு திருத்த வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதை அரித்துக்கொண்டிருந்தது. இதற்குத்துணையாகச் சிங்காரியைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்துக்கொண்டு, எப்படி அவளை ஏனைம் செய்வது என்ற யோசனையில் ஆழ்ந்தான். யோசனை வரவில்லை என்றாலும், அருணாசல முதலியார் வீடு வந்துவிடவே திரும்பினான். பங்களாவைக் காவல் காக்கும் கூர்க்கா "க்யா... தங்கச்சி... உள்ளே இருக்குது... போ" என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டான். முனுசாமியும் அவனுக்கு நன்றி தெரிவிக்கும் தோரணையில் புன்னகை புரிந்து பங்களாவில்



நுழைந்ததும் "சிங்காரி... சிங்காரி எங்கே ஓடறே" என்ற சப்தம் மாடியிலிருந்து கேட்கவே, மாடிப்பக்கம் திரும்பினான். எதிரே சிங்காரி அலங்கோலமாக கையில் இரத்தக் கறையுடன் ஓடிவந்தாள்.

"மச்சான்..."

"சிங்காரி...என்ன இது...ஏதாவது..."

"உஷ்...பேசாதிங்கோ......வீட்டிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம்"

"என்ன சமாசாரம் சொல்...கையிலே இரத்தம் ...ஏதாவது..."



"வாங்க மச்சான், நான் விபரமாகச் சொல்கிறேன்" என்று மச்சானை இழுத்துக் கொண்டு சிங்காரி வெளியேறினாள்.

அருணாசல முதலியார் முகத்தில் கீறல்களுடன், "சிங்காரி... ......அடிப்பாவி! முகமெல்லாம் வளையல் துண்டுகளால் கீறி விட்டாளே, நாளைக்கு எந்த முகத்தோடு கும்பாபிஷேகத்திற்குப் போவது? வடிவுடை அம்மனே! அகிலாண்டநாயகியே! உன் திருவருள் இதுதானா? இதற்குத்தானா உனக்குக் கும்பாபிஷேகம்" என்று சொல்லிக்கொண்டே மெதுவாகத் தரையிலிருந்து எழுந்து குளியலறை நோக்கிச் சென்றார்.

○

"சிங்காரி ஏன் இதை அங்கேயே சொல்லியிருக்கக் கூடாது? அவனை உயிருடன் விட்டு வைக்கலாமா"

"மச்சான் உனக்குக் கோபம் வந்து ஏதாவது அவசரத்திலே செஞ்சிடுவேன்னுதான் நான் சொல்லல்லே"

"இதற்குத்தான் வெளி வேஷம் போடுகிறான் போலிருக்கு. திருநீறுக்கும் குங்குமத்துக்கும் குறைச்சலில்லை. நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யும் பக்தன் செயலா இது! விதவை என்ன புறம்போக்கு நிலம் என்று நினைத்துவிட்டானா? இனி நீ வேலைக்குப் போகவேண்டாம்"

"சரிங்க மச்சான்; எனக்குப் பயமா இருக்கு, பணத் திமிர் பிடித்தவன ஏதாவது செய்வான்"

"என்ன செய்வான் என்பதை நான் ஒரு கை பார்த்துடறேன் — சிங்காரி! அதோட எனக்கு இப்போ ஒண்ணு ஞாபகம் வந்தது; உங்க அக்கா கண்டதைக் கொண்டு வந்து வீட்டில் சேர்க்கிறாளே அந்தப் பழக்கத்தை விட்டுவிடச் செய்யணும்......... சிங்காரி......நீ கலியாணம் செய்துண்டா இந்தத் தொந்தரவே வராது வேலியில்லா தோட்டம்னா கண்டதும் நுழையத்தான் செய்யும்"

"போதும் மச்சான், அறுத்திட்டவளை எவனாவது கட்டிக்குவானா?"

○

அடுத்த வாரம் பொங்கல், திராவிடர் திருநாள். —சிங்காரி அடுக்களையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். முனுசாமி ராந்தல் விளக்கு வெளிச்சத்தில்சாமான்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக் கொண்டிருந்தான். திடீரென்று அந்த அறுந்த சங்கலி ஞாபகம் வந்தது. எப்படியாவது சிங்காரிக்கும் தெரியாமல் எடுத்து எறிந்துவிட வேண்டும் என்று தேட ஆரம்பித்தான்! இருட்டிலே பெட்டியில் துழாவும்போது ஒரு தகரத்துண்டு இவன் விரலைப் பதம் பார்த்துவிட்டது. அதையும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு ஈரத்துணியை விரலுக்கு கட்டிக் கொண்டு தேடினான். கடைசியாக அறுந்த சங்கிலி பிப்பாயின் சந்தில் பாம்பைப்போல் இருந்ததைக் கண்டு முதலில் பயந்து, பிறகு எடுத்துக்கொண்டு மெதுவாக வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டான். பங்களாப் பக்கம் போனால் ஒரு சமயம் அலங்காரம் பார்த்துவிடலாம் என்ற எண்ணத்துடன் பங்களாவின் பின்புறமாகச் செல்லும் ஒரு சந்தில் வீசியெறிந்து திரும்பினான். "ஐயோ" என்ற அலறல் கேட்டதும், தான் போட்டது யார் மேலேயோ விழுந்துவிட்டது என்ற எண்ணத்துடன் பங்களாவின பின்புறக்கதவை மெதுவாகத் திறந்துகொண்டு ஓடினான். இருட்டில்ஓர் உருவம் மதில் ஓரமாகச் சாய்ந்துகொண்டு முனகிக் கொண்டிருந்தது. ஓடிப்போய் அருகில் பார்த்தபோது பயந்து அவனை தூக்கி வந்து தெரியாமல் தன் வீட்டில் படுக்க வைத்து "சிங்காரி இதோ இந்தத் தம்பியைப் பார்த்துக்கோ! கொஞ்சம் சூடா டீ போட்டுக்கொடு, நான்போய் டாக்டரை அழைத்துக்கொண்டு வரேன்" என்று சொல்லிக் கிளம்பினான்.




"யார் மச்சான் இது! ஐயோ ரத்த வெள்ளமா இருக்கே இவர் தலை! அட படுபாவிங்க......"

"சிங்காரி, நீ ஒண்ணும் தொந்தரவுபடுத்தாதே. அப்படியே ஒரு கட்டு கட்டி, டீ போட்டுக் கொடு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவனே உணர்வின்றிக் கட்டைபோல் படுத்திருந்தான். இவள் சுடச் சுட டீ போட்டுக்கொண்டு வந்து, எப்படிக் கொடுப்பது என்று யோசித்தாள்; முதலில் அவனைத் தட்டிப் பார்த்தாள். ஸ்பரிசம்

பட்டவுடன் இவள் உடம்பெல்லாம் சூடேறி இவளுக்கு வியர்வை கொட்ட ஆரம்பித்துவிட்டது. கடைசியாக வெட்கமும் ஊற்றுணர்ச்சியும் போட்டியிட மெதுவாக அந்த அரும்புமீசைக்காரனை சுவரில் சாயவைத்துவிட்டு, சூடான தேநீரை அவன் வாயருகில் கொண்டுபோனாள்......இரண்டு மூன்று விழுங்குகள்......அவன் மெதுவாகக் கண் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாரோ ஒரு பெண் தனக்குத் தேநீர் கொடுப்பதைக் கண்டவுடன், அவனுக்கு தான் எங்கே இருப்பது என்று தெரியவில்லை.

"நான் எங்கே இருக்கிறேன்......நீ யார்? வெட்கம் பிடுங்க, அவள் அங்கிருந்து எழுந்து கதவின் பின்னால் போய் நின்று கொண்டு "என் பெயர் சிங்காரி......என் மச்சான் உங்களைக் கொண்டுவந்து படுக்கவச்சுட்டு டாக்டர் வீட்டுக்குப்போயிருக்காரு, நீங்க யாரு?.........எப்படி அடிப்பட்டது?"

"உம்......தெரிய வேண்டுமா! என் பெயர் சிங்காரம் "திருவள்ளுவர்" என்ற ஒரு வார இதழில் வேலை செய்கிறேன்!" நான் போய் வருகிறேன்."

"வீட்டிற்குத்தானே? டாக்டர் வரட்டும்"

"வீட்டிற்கில்லை, அலுவலகம் போகவேண்டும்."

"இந்த நேரத்தில் அலுவலகத்தில் என்ன வேலை? மணி ஒன்பதடிக்கப்போகிறது"

"அடுத்த வாரம் பொங்கல் — பொங்கல் மலர் தயாராகிக்கொண்டு இருக்கிறது."

"என்ன இருந்தாலும், டாக்டர் வரட்டும். அதோட இந்தக் காயம் ஆறும் வரை நீங்கள் இங்கேயே இருபபது நல்லது. உங்களுக்குத்தான் யாருமில்லையே........

"யாருமில்லைத்தான்...ஆனால்...என்று அவன் அவளைப் பார்க்க, அவள் வெட்கத்தால் தலை குனிந்து கால் விரலால் தரையைக் கீறிக்கொண்டிருந்தாள்.

○

நாளை பொங்கல், எங்கும்கோலாகலம், முனுசாமியின் வீட்டில் மாத்திரம் குறைவா! சிங்காரி அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருக்க, முனுசாமியும் அலங்காரமும் தங்கள் முதல் பொங்கல் அனுபவத்தை நினைத்து ரசித்துக்கொண்டிருந்தார்கள்.



"அண்ணா"

"யார் அது சிங்காரமா...வா...வா...இதென்ன பெரிய பொட்டளம்."

"அண்ணா, சிங்காரிக்கு பரிசம் போட வேண்டாமா"

"சிங்காரிக்கா...அவள் விதவை"யென்று...

"அண்ணா, எல்லாம் தெரியும்! அவளே ஒரு நாள் என்னிடம் எல்லாம் சொன்னாள். தெரிந்துதான் செய்துகொள்கிறேன். என்னைப்போல் ஒருசில இளைஞர்கள் முன் வந்து விதவைகளைத் திருமணம் செய்துகொண்டால்தான், பெண்களின் துயரம் துடைக்கப்படும். அண்ணா! நீங்கள் இல்லை என்றால் நான் சிங்காரியைப் பார்த்திருக்க முடியுமா? உங்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவன்"

"அடேடே! எனக்கு இல்லே! எல்லாம் உன் அண்ணிக்குத்தான். அவள் அந்த அறுந்த சங்கிலியைக் கொண்டு வரலேன்னா நீ வந்திருக்க முடியாது" என்று முனுசாமி சொல்ல...

"என்னாலே என்ன இருக்குது? எல்லாம் அந்த அறுந்த சைக்கல் சங்கிலியால்தான் தம்பி; அதன் நினைவாகச் சிங்காரி கழுத்திலே ஒரு சைக்கில் செயின் மாதிரியில் தங்கச் சங்கிலி போட்டுடு" அலங்காரம் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"அப்படியே ஆகட்டும் அண்ணி! நான் இது வரை சேர்த்திருக்கிற பணத்திலே செய்துபோட்டுடறேன்" என்று சொல்லிக் கொண்டே அவர்களிடம் "திருவள்ளுவர்" பொங்கல் மலரைக் கொடுத்து அவர்களை இன்புறச் செய்துவிட்டு, வீட்டிற்குள் சென்றான் சிங்காரம்.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.